## பின்னிணைப்பு I

(அ) இலங்கைப் பாராளுமன்றத்தினது முக்கிய சட்ட ஆக்கங்களிலிருந்து எடுக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியினதும் வங்கி நிறுவனங்களினதும் கடமைகளையும் தொழிற்பாடுகளையும்பற்றிய பகுதிகள்.

(ஆ) 1968ஆம் ஆண்டில் நாணயச் சபை மேற்கொண்ட பிரதான நிர்வாக நடவடிக்கைகள்.

## பகுதி (அ)

## 1968ம் ஆண்டில் 5ம் இலக்க நாணயச் (திருத்த) சட்டம்

நாணயச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

*(இசைவுபெற்ற தேதி : 28 பெப்புருவரி, 1968.)*

1. இச்சட்டமானது 1968ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க நாணயச் (திருத்த) சட்டமென எடுத்துக்காட்டப்படலாம்.

2. பின்வரும் புதிய பிரிவானது நாணயச் சட்டத்தின் 59ஆம் பிரிவினை உடனடுத்து இதனுற் புகுத்தப்பட்டுப் பிரதான சட்டத்தின் 59அ என்னும் பிரிவாகச் செயற்படும்.

> 59(அ)(1) ஏதேனும் நீதிமன்றமொன்றின் முன்னருள்ள ஏதேனுமொரு நடவடிக்கையில் ஒரு உலோக நாணயம் அல்லது புழக்கத்திலுள்ள நாணயமெனக் கருதப்பட்ட ஒரு பொருளை அது அத்தகைய ஓர் உலோக நாணயம் அல்லது புழக்கத்திலுள்ள உலோக நாணயத்தின் போலியாவென்பது தீர்மானிக்கப்பட வேண்டியிருப்பின், வகைக்குத் தகுந்த வண்ணம் அத்தகைய பொருள் உலோக நாணயத்தின் போலி எனவும், அது இலங்கை மத்திய வங்கியினுல் வழங்கப்பட்ட அல்லது வழங்கப்பட்டதெனக் கருதப்படும் ஒரு உலோக நாணயம் அல்லது புழக்கத்திலுள்ள நாணயமல்லவென்றும் உறுதிப்படுத்தும் மத்திய வங்கி ஆளுநரின் கையொப்பமுள்ள அல்லது மத்திய வங்கி ஆளுநர் தற்காலிகமாகக் கடமைசெய்ய வராதிருப்பின் அல்லது அவரது பணிகளையும் கடமைகளையும் புரியத் தற்காலிகமாக இயலாதிருப்பின் அப்பொழுது மத்திய வங்கியின் முதன்மை நிறைவேற்று அலுவலராகத் தொழில்புரியும் துணை ஆளுநரின் கையொப்பமுள்ள ஒரு சான்றிதழ், அத்தகைய பொருள் ஓர் உலோக நாணயத்தின் அல்லது புழக்கத்திலுள்ள நாணயத்தின் போலி என்பதற்கான முற்றுன முடிவான சான்ருக அந் நடவடிக்கைகளில் பெறப்படுதல் வேண்டும்.
>
> (2) இப்பிரிவின்கீழ் ஒரு சான்றிதழை வழங்கும் மத்திய வங்கி ஆளுநரோ அல்லது துணை ஆளுநரோ அச்சான்றிதழ் தொடர்பாக விசாரணை செய்யப்படலாகாது அல்லது குறுக்கு விசாரணை செய்யப்படுதலாகாது.
>
> (3) இப்பிரிவின்கீழ் வழங்கப்படும் ஒவ்வொரு சான்றிதழும் பின்வரும் முறையிலிருத்தல் வேண்டும் :

3. இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரான */ தற்பொழுது இலங்கை மத்திய வங்கியின் முதன்மை நிறைவேற்று அலுவலராகத் தொழில்புரியும் துணை ஆளுநரான........................................................ ஆகிய நான்........................................ஆம் இலக்க வழக்குத் தொடர்பாக ....................................ஆம் இலக்க அஞ்சலுடன் மெழுகிட்டடைக்கப் பட்ட பொட்டணமொன்றில்..............................................................ஆல் எனக்குத் தரப்பட்ட..............................................இனமான ஓர் உலோக நாணயம் */ புழக்கத்திலுள்ள நாணயம் எனக் கருதப்படும் பொருளைப் பரிசோதித்தேனெனவும், அத்தகைய பொருள் இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட அல்லது வழங்கப்பட்டதாகக் கருதப்பட்ட ஓர் உலோக நாணயத்தின்*/ புழக்கத்திலுள்ள நாணயத்தின் ஒரு போலியெனவும், அது இலங்கை

மத்திய வங்கியால் வழங்கப்பட்ட அல்லது வழங்கப்பட்டதெனக் கருதப்படுமோர் உலோக நாணயம் அல்லது */ புழக்கத்திலுள்ள உலோக நாணயமல்லவென்றும் இத்தால் சான்றளிக்கின்றேன்.

ஒப்பம் :.........................................

தேதி :.........................................

*பொருத்தமாகாதவற்றைக் கீறி விடுக.

4.

(அ) 1967 ஓகத்து பதினைந்தாம் நாளுக்கு முன்னர் அல்லது பின்னர் புரியப்பட்ட சகல குற்றங்களையொட்டிய நடவடிக்கைகளுக்கும் ;

(ஆ) 1967 ஓகத்து பதினைந்தாம் நாளில் ஏதேனும் நீதிமன்றத்தில் முடிவுறாதிருக்கும் நடவடிக்கைகளுக்கும், விசாரணைகளுக்காக அல்லது விளக்கத்துக்குள்ளனவாகவுள்ள நடவடிக்கைகளுக்கும்,

இப்பிரிவு ஏற்புடையதாயிருத்தல் வேண்டும்.

5. இப்பிரிவில், '' புழக்கத்திலுள்ள நாணயம் '' என்ற விளக்கம் தண்டச்சட்டக் கோவையிலுள்ள அதே கருத்தைக் கொண்டதாயிருக்கும்.

---

## 1968ம் ஆண்டின் 7ம் இலக்க நம்பிக்கைச் சொத்துச் (திருத்த) சட்டம்

நம்பிக்கைச் சொத்துக் கட்டளைச் சட்டத்தின் திருத்துவதற்கானதொரு சட்டம்.

(இசைவுபெற்ற தேதி : 28 பெப்புருவரி, 1968.)

1. இச்சட்டமானது 1968ம் ஆண்டின் 7ம் இலக்க நம்பிக்கைச் சொத்துச் (திருத்த) சட்டமென எடுத்துக் காட்டப்படலாம்.

2. நம்பிக்கைச் சொத்துக் கட்டளைச் சட்டத்தின் 21ம் பிரிவு '' எவ்விதத்திலும், விலக்குதலுக்கு '' என்ற தொடர் தொடக்கம் அப் பிரிவின் இறுதிவரையிலுமுள்ள சகல சொற்களுக்கும் பதிலாக '' அரசாங்க சேமிப்பு வங்கியில் (இலங்கை சேமிப்பு வங்கியும் உட்பட) நம்பிக்கைப் பணவைப்பினை விலக்குவதற்கு '' என்ற சொற்களை இடுவதினால், இத்தால் திருத்தி அமைக்கப்படுகிறது.

---

## 1968ம் ஆண்டின் 21ம் இலக்க நாணயச் (திருத்த) சட்டம்

நாணயச் சட்டத்தைத் திருத்துவதற்கான ஒரு சட்டம்.

(இசைவுபெற்ற தேதி : 11 யூன், 1968.)

1. இச்சட்டம் 1968ம் ஆண்டின் 21ம் இலக்க நாணயச் (திருத்த) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. 1963ம் ஆண்டின் 11ம் இலக்கச் சட்டத்தாற்றிருத்தப்பட்டவாறுள்ள (இதனகத்தின் மேல் பிரதான சட்டம் எனக் குறிப்பிடப்படும்) நாணயச் சட்டத்தின் 88(அ) என்னும் பிரிவு மேலும் பின்வருமாறு இத்தாற்றிருத்தப்படுகிறது :—

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் '' பிணையின் வகையாக '' என்பது முதற்றொடங்கி

அப்பந்தி முடியும்வரை உள்ள சொற்கள், எண்கள் எல்லாவற்றிற்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :—

" அத்தகைய நோக்கம் அல்லது நோக்கங்கள் சம்பந்தமாகக் கடன் பெற்றோர்களால் அத்தகைய நிறுவனத்துக்குச் செல்மதியாகவுள்ள கடன்களின் பிணையின் வகையாக அத்துடன் ",

(2) அப்பிரிவின் (3 ம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவில் தரப்பட்டுள்ள சாட்டுதற் படிவத்தில்—

(அ) " இதற்கான அட்டவணையிற் குறிப்பிடப்பட்டுள்ள ஈடுகளின்கீழ் ஈடு பிடிப்பவர்களாக எமக்குள்ள உரிமைகளையும், " என்னும் சொற்களை விடும் மூலமும் ; அத்துடன்

(ஆ) அப்படிவத்துக்கான அட்டவணையில் பின்வருவதனை விடும் மூலமும் :—

" ஈட்டு முறி இல. ", அத்துடன்

3. பிரதான சட்டத்தின் 88உ என்னும் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகிறது :—

(1) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவினை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலீடாகப் பின்வரும் புதிய உட்பிரிவினையிடுவதன் மூலமும்—

" (2) (அ) இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் வங்கி தனது பணிகளை நிறைவேற்றுவதற்கு அதற்குத் தேவையானவையெனக் கருதக்கூடிய அத்தகைய பணத் தொகைகளை வங்கியின் ஒதுக்குகளிலிருந்து நாணயச் சபை காலத்துக்குக் காலம் நிதிக்கு ஒதுக்கலாம்.

(ஆ) சர்வதேச நிதி நிறுவனங்களினால் வங்கிக்கு வழங்கப்பட்ட கடன்களின் தொகைகளை வங்கி நிதிக்குக் கொடுப்பனவு செய்யலாம் ",

(2) அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவில்—

(அ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் " இந்தச் சட்டத்தின், அத்துடன் " என்பதற்குப் பதிலாக " இந்தச் சட்டத்தின் ", என்பதனை இடுதல் மூலமும் ;

(ஆ) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் " வங்கியின் ஒதுக்குகளிலிருந்து ", என்பதற்குப் பதிலாக " வங்கியின் ஒதுக்குகளிலிருந்து, அத்துடன் " என்பதனை இடுதல் மூலமும் ; அத்துடன்

(இ) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியினை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(ஈ) அத்தகைய கடன்களின் அத்தகைய தொகைகள் அந்நிதியிற் கொடுப்பனவு செய்யப்பட்டிருப்பின் சர்வதேச நிதிநிறுவனங்களுக்கு, வங்கிக்கு அத்தகைய நிதிநிறுவனங்களினால் வழங்கப்பட்ட கடன்களைத் திருப்பிக் கொடுப்பதன் வகையால் செல்ல வேண்டியுள்ள எல்லாத் தொகைகளும் " அத்துடன்

*(3)* அப்பிரிவின் *(4)*ம் உட்பிரிவில் '' நிதியில் '' என்பது முதல் அவ்வுட்பிரிவு முடியும்வரை உள்ளவற்றுக்குப் பதிலாகப் பின் வருவதனையிடுதன் மூலமும் :—

'' இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் கடன்நிறுவனங்களுக்கு வங்கியினுல் வழங்கப்பட்ட கடன்கள் அல்லது முற்பணங்கள் என்பவற்றைத் திருப்பிக் கொடுக்கும் வகையால் வங்கிக்குச் செலுத்தப்பட்ட அல்லது வங்கியினுல் அறவிடப்பட்ட பணத்தொகைகள் யாவும் நிதியில் வரவு வைத்தல் வேண்டும்.''

---

## 1958ம் ஆண்டின் 28ம் இலக்க அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்ச் சட்டம்

இலங்கை அரசாங்கம் அதன் முகவரான இலங்கை மத்திய வங்கியின்மூலம் அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்கள் திட்டமொன்றை நிறுவி நடைபெறச் செய்வதற்கு அவசியமான சட்ட ஏற்பாடு செய்வதற்கும், அதனுடன் தொடர்பான அல்லது அதன் விளைவான காரியங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.

*(இசைவுபெற்ற தேதி: 22 யூன், 1968.)*

*1.* (1) இச்சட்டம் 1968ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்கள் சட்டமென எடுத்துக் காட்டப்படலாம்.

*(2)* இச்சட்டத்தின் ஏற்பாடுகள் 1968ஆம் ஆண்டு மே மாதம் 6ஆந் தேதியில் நடைமுறைக்கு வந்திருப்பனவாக எல்லா நோக்கங்களுக்கும் கருதப்படுதல் வேண்டும்.

*2.* அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்களை வெளியிடுவதற்கு, கொள்வனை செய்வதற்கு, விற்பனை செய்வதற்கு, ஒப்படைப்பதற்கு, அல்லது வேறேதேனும் விதமாகக் கையளிப்பதற்கு இயல்வதாக்குவதற்கான திட்டமொன்றை இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழும் அவற்றுக்கிணங்கவும் நிறுவி நடைபெறச் செய்வதற்கு அரசாங்கம் இதனுல் அதிகாரமளிக்கப்படுகின்றது. அத்தகைய திட்டம் இச்சட்டத்தினில் '' திட்டம் '' எனக் குறிப்பிடப்படுகின்றது.

*3.* இரண்டாம் பிரிவினுல் அரசாங்கத்துக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவம், அரசாங்கத்தின் முகவரென்றவகையில் மத்திய வங்கியினுற் பிரயோகிக்கப்படுதல் வேண்டும் ; அதற்கிணங்க, அத்திட்டத்தை நிறுவி நடைபெறச் செய்யும் நோக்கங்களுக்கும் இச்சட்டத்தின் நெறிகளையும் ஏற்பாடுகளையும் நிறைவேற்றிப் பயனளிப்பதற்கும் அவசியமாகக்கூடிய தத்துவங்கள், பணிகள், கடமைகள் ஆகிய எல்லாவற்றையும் அத்தகைய வங்கி அத்தகைய முகவரென்ற அதன் நிலையில் பிரயோகிக்கலாம், செய்யலாம், புரியலாம்.

*4.* *(1)* மத்திய வங்கி நேரடியாக அல்லது அதன் சார்பாக ஏதேனுமொரு வர்த்தக வங்கியின்மூலம் காலத்துக்குக் காலம் சான்றிதழ்களை வெளியிடுவதற்கு இதனுல் அதிகாரமளிக்கப்படுகின்றது. அத்தகைய சான்றிதழ்களின் படிவமும், வடிவமும், அவற்றின் மேலெழுத்திலுள்ளனவும், அளவுகளும் ஏனைய தன்மைகளும் மத்திய வங்கியினுல் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படும்வாறுகவிருத்தல் வேணடும்.

(2) சான்றிதழொவ்வொன்றும் —

(அ) மத்திய வங்கியின் முதன்மைக் கணக்காளரின் கையொப்பத்தைப் பிரதி ரூபத்திலும் பணிப்புகளின் மூலம் தீர்மானிக்கப்படக்கூடிய எண்ணினவான கையெழுத்திலுமுள்ள கையொப்பங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்;

(ஆ) மத்திய வங்கிக்காகவும், அதன் சார்பாகவும் வெளியிடப்படுவதாக அதன் முன்புறத்தில் கூறப்பட்டிருத்தல் வேண்டும் ;

(இ) அதன்கண்ணே காட்டப்பட்டிருக்கவேண்டிய காலத்துக்கு வலிமையுடையதாதல் வேண்டும் ; அத்துடன்

(ஈ) இலங்கை ரூபாய்களாகக் கூறப்பட்டுள்ள ஒரு தொகையை அதன் முன்புறத்திற் கொண்டிருத்தல் வேண்டும்.

5. வலிமையான சான்றிதழொன்றை வைத்திருப்பவர், அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவருக்கு அதனைக் கையளிப்பதன்மேல், அத்தகைய நோக்கங்களுக்காகவும் காலத்துக்குக் காலம் அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்டு அத்தகைய நியதிகளுக்கமையவும் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட அந்நிய செலாவணிக் கொள்வனை செய்வதற்கு உரிமையுடையவராதல் வேண்டும்.

6. (1) மத்திய வங்கியின் அதிகாரமின்றி—

(அ) சான்றிதழைதனையும் வெட்டும், துளைக்கும் அல்லது வேறெவ்வகையிலாயினுஞ்சரி உருக்கெடுக்கும் ; அல்லது

(ஆ) சான்றிதழெதிலாவது எதனையாவது அச்சிடும், முத்திரையிடும் அல்லது வரையும், அல்லது சான்றிதழெதற்காவது அல்லது அதன்மேல் ஏதேனுமொரு இலச்சினையை அல்லது முத்திரையை இடும் ; அல்லது

(இ) சான்றிதழெதற்காவது அல்லது அதன்மேல் விளம்பரம் ஒன்றின் தன்மையில் அல்லது படிவத்திலுள்ள எதனையாவது இணைக்கும் அல்லது ஒட்டும்

எவரும் இச்சட்டத்தின்கீழான ஒரு குற்றத்தைப் புரிந்தவராதல் வேண்டும்.

(2) சான்றிதழொன்றைப் பொய்யானதாக்கும் எவரும் இச்சட்டத்தின்கீழான ஒரு குற்றத்தைப் புரிந்தவராதல் வேண்டும்.

7. இச்சட்டத்தை நிர்வகிப்பதில் ஏற்படும் எல்லாச் செலவுகளும், விசேடமாக ஆனல் இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் பொதுத் தன்மைக்குப் பங்கமின்றி, திட்டத்தை நிறுவி நடைபெறச் செய்வதிலும், சான்றிதழ்கள் அச்சிடுவதிலும், மத்திய வங்கியினுற் தீர்மானிக்கப்படக்கூடிய தரகுகளை அல்லது கட்டணங்களை வர்த்தக வங்கிகளுக்குக் கொடுப்பதிலும் ஏற்படும் எல்லாச் செலவுகளும் திரட்டு நிதியிலிருந்து கொடுபடுதல் வேண்டும்.

8. (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, இச்சட்டத்தில் " கணக்கு " எனக் குறிப்பிடப்படும், " அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்க் கணக்கு " என அழைக்கப்படவேண்டிய கணக்கொன்று மத்திய வங்கியில் அரசாங்கத்தின் பெயரில் திறக்கப்பட்டுப் பரிபாலிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய கணக்கு இச்சட்டத்தில் " கணக்கு " என்று குறிப்பிடப்படுகின்றது.

(2) கணக்கில் வரவு வைக்கப்படுவதன் நோக்கத்துக்காகத் திரட்டு நிதியிலிருந்து காலத்துக்குக் காலம் எடுபடக்கூடிய எல்லாப் பணத்தொகைகளும், இச்சட்டத்தினை நிர்வகிக்கையில் அரசாங்கத்துக்காகவும் அதன் சார்பாகவும் மத்திய வங்கியினுல் ஏற்றுக்கொள்ளப்படும் ஏனைய எல்லாத் தொகைகளும் கணக்கில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(3) ஏழாம் பிரிவிற் குறிப்பிடப்பட்டுள்ள செலவுகளெல்லாம் கணக்கிலிருந்து கொடுபடுதல் வேண்டும்.

(4) கணக்கிற் கிடக்கும் பணங்களெவையும் நிதியமைச்சராற் தீர்மானிக்கப்பட்டபடி திரட்டுநிதிக்குக் காலத்துக்குக் காலம் மாற்றப்படலாம்.

9. (1) இச்சட்டத்தின் நெறிகளையும் ஏற்பாடுகளையும் நிறைவேற்றும் அல்லது அவற்றுக்குப் பயனளிக்கும் நோக்கத்துக்காக மத்திய வங்கியானது வர்த்தக வங்கிகளுக்கு, அதிகாரமளிக்கப்பட்ட கையாள்வோருக்கு, அங்கீகரிக்கப்பட்ட ஏற்போருக்கு அல்லது வேறு ஆட்களுக்குப் பணிப்புகள் விடுக்கலாம்.

(2) விசேடமாக ஆனல் இப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவினுல் வழங்கப்பட்ட தத்துவங்களின் பொதுத் தன்மைக்குப் பங்கமின்றி, மத்திய வங்கியானது வர்த்தக வங்கிகளுக்கு, அதிகாரமளிக்கப்பட்ட கையாள்வோருக்கு, அங்கீகரிக்கப்பட்ட ஏற்போருக்கு அல்லது வேறு ஆட்களுக்குப் பின்வருங் காரியங்களெல்லாவற்றுக்கும் அல்லது அவற்றில் ஏதாவதற்குமாக அல்லது அவையெல்லாவற்றின் சார்பாகவும் அல்லது அவற்றில் ஏதாவதன் சார்பாகப் பணிப்புகள் விடுக்கலாம் :—

(அ) அதற்கெனப் பணிப்புகள் விடுக்கப்பட இச்சட்டத்தினு லதிகாரமளிக்கப்பட்ட ஏதேனுமொரு காரியம் ;

(ஆ) அது சம்பந்தமாக இச்சட்டத்தினேற்ப..டுகள் குறை நிரப்பப்படவேண்டியுள்ளதும், திட்டத்தை நிறுவி நடைபெறச் செய்தல் சம்பந்தப்பட்டதுமான ஏதேனுமொரு காரியம் ; அத்துடன்

(இ) முன்னே சொல்லப்பட்டுள்ள காரியங்களிலேதாவதுடன் தொடர்பான அல்லது அதன் விளைவான ஏதேனுமொரு காரியம்.

(3) இச்சட்டத்தின்கீழ் மத்திய வங்கியினுல் விடுக்கப்படும் பணிப்பெதையாவது மீறும் அல்லது அதற்கு இணங்கத் தவறும் எவரும் இச்சட்டத்தின்கீழான ஒரு குற்றத்தைப் புரிந்தவராதல் வேண்டும்.

10. (1) இச்சட்டத்தின்கீழான குற்றமொன்றைப் புரிந்தவராகுமெவரும், நீதவானெருவர் முன்னிலையில் சுருக்கவிசாரணையின்பின் குற்றவாளியெனக் காணப்பட்டதன்மேல், இரண்டு வருடங்களுக்குமேற்படாத ஒரு காலத்துக்கு இருவகை மறியலிலொன்றுக்கு அல்லது பத்தாயிரம் ரூபாவுக்கு மேற்படாத அபராதமொன்றுக்கு அல்லது அத்தகைய மறியலும் அத்தகைய அபராதமுமாகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழான குற்றமெதனையாவது புரிய எத்தனிக்கும் அல்லது புரிவதற்கு ஆயத்தமாக்குகிற செயலெதனையாவது செய்யும் எவரும் அத்தகைய குற்றத்தைப் புரிந்தவராகக் கருதப்படுதல் வேண்டும்.

11. இச்சட்டத்தின்கீழான குற்றமொன்றுக்குக் குற்றவாளியெனக் காணப்படுமொருவர் ஆட்களைக் கொண்ட குழுமமொன்ருகவிருக்குமிடத்து—

(அ) அத்தகைய குழுமம் கூட்டுவாணிகச் சங்கமொன்ருகவிருந்தால், அக்குற்றம் புரியப்பட்ட காலத்தில் அக்கூட்டுவாணிகச் சங்கத்தின் பங்காளியொருவராகவிருந்த ஒவ்வொருவரும் ; அல்லது

(ஆ) அத்தகைய குழுமம் கூட்டிணைக்கப்பட்ட குழுமமொன்ருகவிருந்தால், அக்குற்றம் புரியப்பட்ட காலத்தில் அத்தகைய குழுமத்தின் பணிப்பாளரொருவராக அல்லது வேறு உத்தியோகத்தராகவிருந்த ஒவ்வொருவரும்,

அக்குற்றம் அவருக்குத் தெரியாமற் புரியப்பட்டதென அல்லது அத்தகைய குற்றம் புரியப்படுதலைத் தடுப்பதற்கு முறையான கவனமெல்லாவற்றையும் அவர் செலுத்தினுரென அவர் நிரூபித்தாலன்றி, அக்குற்றத்தைப் புரிந்தவராகக் கருதப்படுதல் வேண்டும்.

*12.* இச்சட்டத்தின்கீழான குற்றங்களெல்லாம் குற்ற நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் கருத்துக்குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் பிடியாணையின்றிக் கைதுசெய்யக்கூடிய குற்றங்களாதல் வேண்டும்.

*13.* இச்சட்டத்தின்கீழான குற்றமொன்றுக்கான வழக்கெதாவது மத்திய வங்கியின் ஆளுநரால் அல்லது அவரின் எழுத்திலுள்ள அனுமதியுடனல்லாது தொடரப்படுதலாகாது.

*14.* இச்சட்டத்தின்கீழ் மத்திய வங்கியின் ஆளுநருக்குள்ள தத்துவங்களும் கடமைகளும் பணிகளும் நாணயச் சபைக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும் ; அதற்கிணங்க அத்தகைய தத்துவம், கடமை அல்லது பணி நாணயச் சபையினுல் பிரயோகிக்கப்பட்டு, புரியப்பட்டு, ஆற்றப்படலாம்.

*15.* பதினுன்காம் பிரிவினுல் நாணயச் சபைக்கு உரித்தாக்கப்பட்ட இச்சட்டத்தின்கீழான மத்திய வங்கியின் தத்துவம், கடமை அல்லது பணி எதாவது, மத்திய வங்கியின் ஆளுநரால் அல்லது மத்திய வங்கி ஆளுநரின் பொது அல்லது விசேட பணிப்புகளின்கீழ் செயலாற்றும் வங்கியினுத்தியோகத்தரெவராலாவது, அதன் சார்பாகப் பிரயோகிக்கப்படலாம், புரியப்படலாம் அல்லது ஆற்றப்படலாம்.

*16.* இச்சட்டத்தின்கீழான குற்றமொன்றைப் புரிந்திருப்பவராக நியாயமாகச் சந்தேகிக்கப்படும் எவரேனுமொருவரிடம், புரிந்திருக்கப்படக்கூடிய குற்றத்துக்கான இணக்கத்தின் வகையாக, மத்திய வங்கியின் ஆளுநர், அத்தகைய ஆளுக்கு ஆளுநரால் தபால்மூலம் அனுப்பப்பட்ட அல்லது வேறுவிதமாக ஒப்படைக்கப்பட்ட அறிவித்தலொன்றிற் காட்டப்பட்டிருக்கக்கூடிய ஒரு இலட்சம் ரூபாவுக்கு மேற்படாத தொகை அத்தகைய அறிவித்தலின் தேதியின்பின் பதினுன்கு நாட்கள் கழிவதன்முன் அத்தகைய ஆளினுற் கொடுபட முன்வரப்பட்டால், காட்டப்பட்டபடியான அந்தத் தொகையை, அல்லது அவ்விதம் காட்டப்பட்ட தொகையும் ஆளுநராற் தீர்மானிக்கப்படக்கூடிய அவ்விதங் காட்டப்பட்ட தொகையில் நூற்றுக்குப் பத்துவீதத்துக்கு மேற்படாத மேலதிகமான தொகையும், அத்தகைய அறிவித்தலின் தேதியின்பின் இருபத்தெட்டு நாட்கள் கழிவதன்முன் அத்தகைய ஆளினுற் கொடுபட முன்வரப்பட்டால் அவ்விதம் காட்டப்பட்ட தொகையையும், அவ்விதந் தீர்மானிக்கப்பட்ட மேலதிகமான தொகையையும் ஏற்றுக்கொள்ளலாம். ஆளுநரால் அவ்விதம் ஏற்றுக்கொள்ளப்படும் எந்தத் தொகையும் அவரால் கணக்கில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

*17. (1)* அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழொன்றெனக் கருதப்படும் பத்திரமொன்று அத்தகைய சான்றிதழொன்றின் போலியென்ருே என நீதிமன்றமெதிலாவது எடுபடும் நடவடிக்கைகளெவற்றிலாவது தீர்மானிக்கப்படவேண்டியிருக்குமிடத்து, அத்தகைய பத்திரம் இலங்கை மத்திய வங்கியினுல் அல்லது அதற்காகவும் அதன் சார்பாகவும் வெளியிடப்பட்ட அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழொன்றின் போலியொன்றெனத் தாற்பரியப்பட, மத்திய வங்கியின் ஆளுநரின் கைப்பட்ட சான்றிதழொன்று அல்லது, ஆளுநர் தற்காலிகமாகக் கடமைபுரிய வராதிருந்தால் அல்லது அவருடைய பணிகளையும் கடமைகளையும் புரிவதற்குத் தற்காலிகமாக இயலா

திருந்தால், மத்திய வங்கியின் பிரதான நிர்வாக உத்தியோகத்தராக அவ் வக்காலத்திற் செயலாற்றும் துணையாளுநர் கைப்பட்ட சான்றிதழொன்று, அத்தகைய பத்திரம் அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழொன்றின் போலியொன்றென்பதன் முடிவான சான்ருக அந்நடவடிக்கைகளில் ஏற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) இப்பிரிவின்கீழான சான்றிதழை வழங்கும் மத்திய வங்கியின் ஆளுநர் அல்லது துணை ஆளுநர் அந்தச் சான்றிதழ் சம்பந்தமாக விசாரணை செய்யப்படுதல் அல்லது குறுக்குவிசாரணை செய்யப்படுதல் ஆகாது.

(3) இச்சட்டத்தின்கீழ் வழங்கப்படுஞ் சான்றிதழொவ்வொன்றும் பின்வரும் படிவத்திலிருத்தல் வேண்டும் :—

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்* / இலங்கை மத்திய வங்கியின் பிரதான நிர்வாக உத்தியோகத்தராக அவ்வக்காலத்தில் செயலாற்றும் துணை ஆளுநர்........................................................ஆகிய நான் ........................................ஆகிய ஒரு தொகைக்கு வெளியிடப் பட்டதும்........................................ இலக்கத்தைக் கொண்டதும் ........................................எனத் தேதியிடப்பட்டதுமான அந் நிய செலாவணி உரிமைச் சான்றிதழெனக் கருதப்படும் .................. ..........என அடையாளமிடப்பட்ட பத்திரத்தைப் பரிசோதனை செய்தேனெனவும், அத்தகைய பத்திரம் அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழொன்றின் போலியொன்றெனவும் இலங்கை மத்திய வங்கியினல் அல்லது அதற்காகவும் அதன் சார்பாகவும் வெளியிடப்பட்ட அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழொன்றல்லவெனவும் இதனைலத்தாட்சிப்படுத்துகிறேன்.

ஒப்பம்:..........................

தேதி:..........................

(*ஏற்புடையனவல்லாத சொற்களைக் கீறிவிடவும்.)

18. செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்கீழ் செலாவணிக் கட்டுப்பாட்டாளராற் கொடுபடும் அனுமதி, சம்மதம் அல்லது அதிகாரம் ஏதாவது அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ் அல்லது சான்றிதழ்கள் எவற்றையாவது ஒப்படைத்தலை நிபந்தனையாகக் கொண்டதாகச் செய்யப் படலாம்.

19. இச்சட்டத்தில், சந்தர்ப்பத்துக்கேற்ப வேறுவிதமாகப் பொருள் கொள்ளவேண்டியிருந்தாலன்றி—

" அங்கீகரிக்கப்பட்ட ஏற்பவர்" என்பது அந்நிய செலாவணியை ஏற்பதற்கு செலவாணிக் கட்டுப்பாட்டாளரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒருவர் எனப் பொருள்படும் ;

" அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் " என்பது செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4ஆம் பிரிவின்கீழ் அவ்வக் காலத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்று எனப் பொருள்படும் ;

" மத்திய வங்கி " என்பது நாணயவிதிச் சட்டத்தின்கீழ் நிறுவப்பட்ட இலங்கை மத்திய வங்கி எனப் பொருள்படும்;

" சான்றிதழ் " என்பது அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழொன்று எனப் பொருள்படும் ;

" மத்திய வங்கி முதன்மைக் கணக்காளர் " என்பது மத்திய வங்கியின் பதில் முதன்மைக் கணக்காளரையும் அடக்கும்;

" வர்த்தக வங்கி " என்பது நாணயவிதிச் சட்டத்தில் 127(1) ஆம் பிரிவிலுள்ளதைப் போன்ற அதே கருத்துடையதாகும்;

" அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ் " என்பது இச்சட்டத்தின்கீழ் இலங்கை மத்திய வங்கியினுல் அல்லது அதற்காகவும் அதன் சார்பாகவும் வெளியிடப்பட்டதும், அது வலிமையுடையதாகவிருக்குங் காலத்தின்போது அதனை அதிகாரமளிக்கப்பட்ட வணிகரெவரிடமாவது ஒப்படைத்ததன்மேல், அரசாங்கத்தினுல் காலத்துக்குக் காலம் அங்கீகரிக்கப்பட்டுக் கசெற்றில் அறிவிக்கப்படக்கூடிய அத்தகைய நோக்கங்களுக்கும் அத்தகைய நியதிகளுக்கமையவும் அந்நிய செலாவணிக் கொள்வனை செய்வதற்கு அத்தகைய சான்றிதழை வைத்திருப்பவருக்கு அதிகாரமளிப்பதுமான அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழொன்று எனப் பொருள்படும்;

" ஆளுநர் " என்பது மத்திய வங்கியின் ஆளுநரெனப் பொருள் படுவதுடன் அவ்வங்கியின் துணை ஆளுநரையும் அடக்கும் ;

" நியதிகள் " நிபந்தனைகளையும் அடக்கும் ;

" இச்சட்டம் " என்பது அதன்கீழ் விடுக்கப்படும் பணிப்புகளெவற்றையும் அடக்கும் ;

" வலிமையான சான்றிதழ் " என்பது அவ்வக் காலத்தில் வலிமையுள்ள சான்றிதழொன்று எனப் பொருள்படும்.

**20.** இச்சட்டத்தின் ஏற்பாடுகள் நாணயவிதிச் சட்டத்தின் அல்லது செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் மேலதிகமாகவிருத்தல் வேண்டுமேயன்றி அவற்றைத் தாழ்த்துகின்றனவாகவிருத்தலாகாது ;

ஆனலவ்விதமிருந்தும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் நாணயவிதிச் சட்டத்தின் அல்லது செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்குமிடையில் ஏதேனும் முரண்பாடு அல்லது ஒவ்வாமையுள்ள சமயத்தில் இச்சட்டத்தினேற்பாடுகள் அத்தகைய முரண்பாட்டின் அல்லது ஒவ்வாமையின் அளவுக்கு நாணயவிதிச் சட்டத்தின் அல்லது செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளிலும்பார்க்க மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 1968ம் ஆண்டின் 33ம் இலக்க இலங்கை அரசாங்க ஈட்டு வங்கி, நிதித் (திருத்தச்) சட்டம்

இலங்கை அரச ஈட்டு வங்கிக் கட்டளைச் சட்டத்தையும், 1963ம் ஆண்டின் 11ம் இலக்க, நிதிச் சட்டத்தையும் திருத்துவதற்கானதொரு சட்டம்.

(இசைவுபெற்ற தேதி யூன் 22, 1968.)

1\. (1) இச்சட்டம் 1968ம் ஆண்டின் 33ம் இலக்க, இலங்கை அரச ஈட்டு வங்கி, நிதித் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) மூன்றாமுட்பிரிவினிற் குறிப்பிடப்படும் பிரிவுகளினேற்பாடுகளைத் தவிர, இச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகள் இச்சட்டம் சட்டவாக்கஞ் செய்யப்படுந் தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் 31, 42, 53 ஆகிய பிரிவுகளின் ஏற்பாடுகள், கசெற்றிற் பிரசுரிக்கப்படுங் கட்டளைமூலம் அமைச்சரால் நியமிக்கப்படக்கூடிய அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

### பாகம் 1

### இலங்கை அரச ஈட்டு வங்கிக் கட்டளைச் சட்டத்துக்கான திருத்தங்கள்

2\. இனிமேல் இச்சட்டத்தின்கண் '' முதன்மைச் சட்டவாக்கம் '' எனக் குறிப்பீடு செய்யப்படும் இலங்கை அரச ஈட்டு வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 2ம் பிரிவானது இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :

(1) '' வங்கி '' என்ற சொல்லுக்கான வரைவிலக்கணத்திற்கு நேரே முன்னே, பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :—

' '' கமத்தொழில் '' என்பது பயிர்ச்செய்கை, தோட்ட வேளாண்மை, விலங்கு வேளாண்மை, பறவைப் பண்ணை, பாற்பண்ணை, தேனீ வளர்ப்பு என்பவற்றை உள்ளடக்கும் ; '

(2) '' கிளைச்சபை '' என்பதற்கான வரைவிலக்கணத்தை விட்டுவிடுவதன் மூலமும் ;

(3) '' சபை '' என்பதற்கான வரைவிலக்கணத்தையடுத்துப் பின்னே பின்வரும் புதிய வரைவிலக்கணத்தையிடுவதன் மூலமும் :—

' '' மத்திய வங்கி '' என்பது நாணயச் சட்டத்தின்கீழ்த் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கி என்று பொருளாகும்;,

(4) ' '' பணிப்பாளர் '', '' கிளைச் சபையின் உறுப்பினர் '' முகாமையாளர் '', '' உதவி முகாமையாளர் '' ', என்ற சொற்களுக்கான வரைவிலக்கணங்களுக்குப் பதிலாகப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தையிடுவதன் மூலமும் :—

' '' பணிப்பாளர் '', '' பொது முகாமையாளர் ''

'' பிரதிப் பொது முகாமையாளர் '' என்பன இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் அத்தகைய பதவிகளுக்கு நியமிக்கப்பட்ட ஆட்கள் என்று பொருளாகும் ; ' ; அத்துடன்

(5) '' விதிக்கப்பட்ட '' என்ற சொல்லுக்கான வரைவிலக்கணத்துக்கு நேரே முன்னே பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை யிடுதன் மூலமும்:—

' '' கடன் '' என்பது பணக்கடன் என்று பொருளாவதுடன் மேலதிகப்பற்று அல்லது வேறெந்தப் பெயரோ குறிப்புப் பெயரோ கொண்டு அழைக்கப்படும் பணஞ்சார்ந்த ஏற்பாட்டையும் உள்ளடக்கும் ' ;

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3ம் பிரிவானது '' கமத்தொழில் நோக்கங்களுக்காவும் வேறும் விதிக்கப்பட்ட '' என்பது தொடங்கிக் '' கொழும்பில் '' என்பது முடியும்வரையுள்ள சொற்களுக்குப் பதிலாக '' இக்கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களைக் கொண்டு நடாத்துவதற்காக '' என்ற சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகிறது.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5ம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டுப் பின்வரும் புதிய பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது :—

5. வங்கியின் தலைமையலுவலகம் கொழும்பில் இருத்தல் வேண்டும். தேவையானவை என்று சபை கருதும் அத்தகைய வங்கிக் கிளை அலுவலகங்கள் அமைச்சரின் முன்னங்கீகாரத்துடன் இலங்கையில் கொழும்பல்லாத வேறு இடங்களில் தாபிக்கப்படலாம். அவ்வாறு தாபிக்கப்பட்ட கிளை அலுவலகமெதுவும் அதே போன்ற அங்கீகாரத்துடனன்றி மூடப்படுதலாகாது. ''.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7ம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டுப் பின்வரும் புதிய பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது :—

7. இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய வங்கியானது 51ம் பிரிவின்கீழ்க் குறிப்பிடப்பட்ட பல்வேறு வகையான அலுவல்களையும் கையாளுவதற்கும் கொண்டு நடாத்துவதற்கும் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. ''

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9ம் பிரிவினையுடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவானது இத்தால் இடப்படுகின்றது ; அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 9அ என்னும் பிரிவாகப் பயனுறுதல் வேண்டும் :—

9அ. பணிப்பாளர்களுக்குள் ஏதேனும் வெற்றிடம் இருக்கின்றமை காரணமாக மட்டும், அல்லது பணிப்பாளரொருவரின் நியமனத்தில் குறைபாடெதுவும் இருக்கின்றமை காரணமாக மட்டும், சபையின் செயல் எதுவும் அல்லது நடவடிக்கையெதுவும் செல்லுபடியற்றதாகி விடலாகாது. ''.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15ம் பிரிவானது அப்பிரிவின் முடிவில் பின்வரும் புதிய உட்பிரிவையிடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :—

'' (3) உடனலமின்மை காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறேதேனும் காரணமாக எவரேனும் பணிப்பாளரொருவர் அவரது பதவியின் கடமைகளைத் தற்காலிகமாக நிறைவேற்ற முடியாமலிருக்கிறாரென்று அமைச்சருக்குத் தோன்றினால், அவர் அத்தகைய பணிப்பாளரின் இடத்தில் தொழில் புரியவென வேறெவரேனும் ஆளை நியமிக்கலாம். '';

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16ம் பிரிவானது அப்பிரிவுக்கான காப்பு வாசகத்தில் '' பத்தாயிரம் ரூபா '' என்ற சொற்களுக்குப் பதிலாக '' இருபதாயிரம் ரூபா '' என்ற சொற்களை இடுவதன்மூலம் இத்தாற் திருத்தப்படுகின்றது.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 18ம் பிரிவானது இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1)ம் உட்பிரிவில் '' முகாமையாளர் '' என்ற சொல்லுக்குப் பதிலாகப் '' பொது முகாமையாளர் '' என்ற சொற்களையிடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (2)ம் உட்பிரிவில் '' உதவி முகாமையாளர் '' என்ற சொற்களுக்குப் பதிலாகப் '' பிரதிப் பொது முகாமையாளர் '' என்ற சொற்களையிடுவதன்மூலமும் ;

(3) அப்பிரிவின் (3)ம் உட்பிரிவில் '' முகாமையாளரும், உதவி முகாமையாளரும் '' என்ற சொற்களுக்குப் பதிலாகப் '' பொது முகாமையாளரும், பிரதிப் பொது முகாமையாளரும் '' என்ற சொற்களையிடுவதன் மூலமும் ; அத்துடன்

(4) அப்பிரிவுக்கான ஓரக்குறிப்பில் '' முகாமையாளரும், உதவி முகாமையாளரும் '' என்ற சொற்களுக்குப் பதிலாகப் '' பொது முகாமையாளரும், பிரதிப் பொது முகாமையாளரும் '' என்ற சொற்களையிடுவதன் மூலமும்.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 19ம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1)ம் உட்பிரிவில் —

(அ) '' முகாமையாளர் '' என்ற சொற்குப் பதிலாக அந்த உட்பிரிவில் அது தோன்றுமிடமெல்லாம் '' பொது முகாமையாளர் '' என்ற சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(ஆ) '' அவ்வாறு செய்யும்படி அவர் சார்பாக அல்லது பொதுவாக அமைச்சரின் அங்கீகாரத்தோடு சபையால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்டிருந்தால் '' என்ற சொற்களுக்குப் பதிலாக '' அவ்வாறு செய்யும்படி அவர் சார்பாக அல்லது பொதுவாகச் சபையால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்டிருந்தால் '' என்ற சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (2)ம் உட்பிரிவில் —

(அ) '' உதவி முகாமையாளர் '' என்ற சொற்களுக்குப் பதிலாகப் '' பிரதிப் பொது முகாமையாளர் '' என்ற சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(ஆ) '' முகாமையாளர் '' என்ற சொல் அந்த உட்பிரிவில் தோன்றுமிடமெல்லாம் அதற்குப் பதிலாகப் '' பொது முகாமையாளர் '' என்ற சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(3) அப்பிரிவுக்கான ஓரக்குறிப்பில் '' முகாமையாளரும், உதவி முகாமையாளரும் '' என்ற சொற்களுக்குப் பதிலாகப் '' பொது முகாமையாளரும், பிரதிப் பொது முகாமையாளரும் '' என்ற சொற்களை இடுவதன் மூலமும்.

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 21ம் பிரிவானது அப்பிரிவுக்கான காப்புவாசகத்தின் (ஆ) என்னும் பந்தியில் " நிதியமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரால் கொடுக்கப்படும் அங்கீகாரத்துடன் அவ்வாறு 19 (1) என்னும் பிரிவின்கீழ்ச் சபையால் சிறப்பாக அல்லது பொதுவாக அதிகாரமளிக்கப்படின் " என்ற சொற்களுக்குப் பதிலாக " அவ்வாறு 19 (1) என்னும் பிரிவின்கீழ்ச் சபையால் சிறப்பாக அல்லது பொதுவாக அதிகாரமளிக்கப்படின் " என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 22ம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது :—

> 22. "சட்ட ஆலோசகர் முதலியோர் சபை காலத்திற்குக் காலம், வங்கிச் சட்ட, பொருளாதார, நிதி அல்லது தொழிநுட்ப ஆலோசகராகச் செயலாற்றுதற்கென முறைப்படி தகைமைபெற்ற ஆளை அல்லது ஆட்களை நியமிக்கலாம்; அத்தகைய எவரேனும் ஆள் விதிக்கப்படக்கூடியதான அத்தகைய கட்டணப்படிமுறைகளுக்கிணங்க ஊதியம் அளிக்கப்படுதல் வேண்டும். ".

13. முதன்மைச் சட்டவாக்கமானது அச் சட்டவாக்கத்தின் 23ம் பிரிவையுடனடுத்துத் தோன்றும் " (III) கிளைச் சபை " என்னும் உட்டலைப்பை விட்டுவிடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 24ம் பிரிவிலிருந்து 30ம் பிரிவுவரையுள்ள (இரு பிரிவுகளும் உட்பட) பிரிவுகள் இத்தால் நீக்கப்படுகின்றன.

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 31ம் பிரிவானது " முகாமையாளர், உதவி முகாமையாளர் ", என்ற சொற்களுக்குப் பதிலாகப் " பொது முகாமையாளர், பிரதிப் பொது முகாமையாளர் ", என்ற சொற்களையிடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 34ம் பிரிவானது " கிளைச் சபையொன்றினது உறுப்பினர் ஒவ்வொருவரும் " என்ற சொற்களை விட்டுவிடுதல் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

17. முதன்மைச் சட்டத்தின் 35ம் பிரிவானது அதன் (அ) என்னும் பந்தியிலுள்ள " ஈடுகளைப் பிணையாகக்கொண்டு, வங்கியானது " என்ற சொற்களுக்குப் பதிலாக " வங்கி " என்பதை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 51ம் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது :—

> 51 (1) இக்கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய வங்கியானது இதன்கண் இனிமேல் குறிப்பிடப்படும் பல்வேறு வகையான அலுவல்களைக் கொண்டு நடாத்தவும், கையாளவும் அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது ; அவையாவன :—
>
> (அ) எவரேனும் ஆளுக்கு—
>
> (1) கமத்தொழில் நோக்கம் எதற்கேனும் பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்தப்படவுள்ள ஏதேனும் காணியை வாங்கும் அல்லது குத்தகைக்கு எடுக்கும் அல்லது பயிர்செய்யும் அல்லது அபிவிருத்திசெய்யும் அல்லது மேம்படுத்தும் நோக்கத்திற்காக ;

(2) வங்கியின் குறிக்கோள்களோடு இசையாதனவா யிராத ஏதேனும் கமத்தொழில் முயற்சி அல்லது வேறு விதிக்கப்பட்ட முயற்சி தொடர்பில் பயன் படுத்தப்படும் அல்லது பயன்படுத்தப்படவுள்ள ஏதேனும் கட்டிடம், தொழிற்சாலை, ஆலை, சுரங் கம், பொறித்தொகுதி அல்லது உபகரணத்தை வாங்கும் அல்லது குத்தகைக்கெடுக்கும் நோக் கத்திற்காக, அல்லது கட்டியமைக்கும், பழுது பார்க்கும், அல்லது புதுப்பிக்கும் நோக்கத்திற் காக ;

(3) வதியும் வீடொன்றைக் கட்டுவதற்கு ஏதேனும் காணியை வாங்கும் அல்லது குத்தகைக்கெடுக் கும் நோக்கத்திற்காக ;

(4) வதிதற்கான வீடொன்றைக் கட்டியமைக்கும், பழுதுபார்க்கும், புதுக்கியமைக்கும் அல்லது விரி வுபடுத்தும் நோக்கத்திற்காக ;

(5) வதிதற்கான வீடொன்றை வாங்கும் அல்லது குத்தகைக்கெடுக்கும் நோக்கத்திற்காக ;

(6) சந்தையில் விற்பதற்கென ஏதேனும் கமத்தொ ழில் விளைபொருளை அல்லது வேறு விதிக்கப்பட்ட உற்பத்திப் பொருளை அல்லது பொருளை உற் பத்தி செய்யும் அல்லது தயாரிக்கும் நோக்கத் திற்காக ;

(7) முற்போந்த ஏதேனும் உட்பந்திகளில் குறிப் பிடப்பட்ட ஏதேனும் நோக்கத்தின் இடைநேர் விளைவான அல்லது அதற்கு உபகாரமான அல் லது துணைமையான ஏதேனும் நோக்கத்திற்காக;

(8) முற்போந்த எவையேனும் உட்பந்திகளிற் குறிக் கப்பட்ட ஏதேனும் நோக்கத்திற்காக ஏலவே கூறப்பட்ட ஏதேனும் கடனைத் திருப்பி அளிக் கும் நோக்கத்திற்காக—

வட்டியின்பேரில் கடன்கள் வழங்குதல் ;

(ஆ) ஏதேனும் கமத்தொழில் அலுவலைக் கொண்டு நடாத் தும் நோக்கத்திற்கென அல்லது ஏதேனும் ஈட்டின் மீது கீழ்க் கூறப்பட்ட கடன்களைத் தீர்த்துவைத்தற் கென (அத்தகைய ஈடானது வங்கியின் நோக்கெல்லைக் குட்படும் நோக்கத்திற்காக எழுப்பப்பட்ட கடனொன் றைப் பிணிப்பதற்கானதாய் இருத்தல் வேண்டும்) வட் டியின்பேரில் எவரேனும் ஒருவருக்குப் பணக்கடன் கள் வழங்குதல் ;

(இ) அவற்றினது மூலதனமானது முழுமையாக அல்லது பகுதியளவில் அரசாங்கத்தால் உதவப்பட்டுத் தாபிக் கப்பட்டதும் அல்லது பேணிவரப்படுவதும், கமத்தொ ழிலில் ஈடுபட்டுள்ளனவுமான கூட்டுத்தாபனங்களின் பங்குமூலதனத்திற்கு நிதி உதவுதலும் பங்கு மூல தனத்தில் பங்கு கொள்ளுதலும் ;

(ஈ) கமத்தொழிலை விருத்தி செய்வதற்காக நிதியமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் திட்டத்தைக் கொண்டு நடாத்தும் நோக்கத்திற்காக ஆள் எவர்க்கும் பணக்கடன் வழங்குதல் ;

(உ) கமத்தொழிற் பொறித்தொகுதியிலும் கமத்தொழிலில் பயன்படுத்தப்படும் உபகரணங்களிலும் கேள்விக்கொள்வனவு வியாபாரத்தைக் கொண்டு நடாத்தல் ;

(ஊ) வங்கியால் வழங்கப்பட்ட ஏதேனும் கடன் விடயத்தில் வங்கியின் நலனைப் பாதுகாப்பதற்காக வங்கியின் வாடிக்கைக்காரர் எவரதும் கமத்தொழில் முயற்சியில் அல்லது வேறு விதிக்கப்பட்ட முயற்சியை முகாமை செய்தல், மேற்பார்த்தல் அல்லது கட்டுப்படுத்தல் அல்லது அதில் பங்குகொள்ளுதல் அவசியமென்று சபைக்குத் தோன்றுகிறவிடத்து அத்தகைய முயற்சியை ஊதியம் பெற்றோ பெறாமலோ முகாமை செய்தல், மேற்பார்வை செய்தல் அல்லது கட்டுப்படுத்தல் அல்லது அத்தகைய முயற்சிகளில் ஊதியம் பெற்றோ பெறாமலோ பங்கு கொள்ளுதல் ;

(எ) ஒரு வாடிக்கையாளரின் ஏதேனும் கமத்தொழில் முயற்சியோடு அல்லது வேறு விதிக்கப்பட்ட முயற்சியோடு சம்பந்தப்பட்ட ஏதேனும் கருத்தில் வங்கி வாடிக்கையாளர் எவரதும் தொழில்நுட்ப ஆலோசகராக ஊதியம் பெற்றோ பெறாமலோ தொழிற்படல் ;

(ஏ) ஏதேனும் கமத்தொழில் முயற்சியின் அல்லது வேறு விதிக்கப்பட்ட முயற்சியின் எவையேனும் விளைவுகளை விற்றற்கு அல்லது சந்தைப்படுத்தற்குத் தேவையான அமைப்பினை ஏற்படுத்தல் ;

(ஐ) எவரேனும் வங்கி வாடிக்கையாளரின் அல்லது விடயத்திற்கேற்ப வேறு ஆளின் ஏதேனும் கமத்தொழில் முயற்சியின் அல்லது வேறு விதிக்கப்பட்ட முயற்சியின் நோக்கத்திற்குத் தேவைப்படும் ஏதேனும் பொறித்தொகுதி அல்லது உபகரணம் அல்லது எந்தவொரு விவரணத்தைச் சேர்ந்த ஏதேனும் பொருளை வாங்கும் நோக்கத்திற்காக வங்கியின் எவரேனும் வாடிக்கைக்காரரின் முகவராக அல்லது வேறு எவரேனும் ஆளின் முகவராகச் செயற்படுதல் ;

(ஒ) வங்கியின் மேன்மிகையான நிதியெதையும் பயன்படுத்தும் நோக்கத்திற்காக அரசாங்கத்தால் அல்லது மத்திய வங்கியால் வழங்கப்பட்ட அல்லது உத்தரவாதமளிக்கப்பட்ட பங்குத் தொகுதிகள், பங்குகள், கடனீட்டு முறிகள், ஈடுகள், முறிகள், அல்லது பிணைகள் என்பவற்றை வாங்குதல், விற்றல், அவற்றில் முதலீடுசெய்தல் அல்லது அவற்றைக் கையாளுதல் ;

(ஓ) வங்கியின் எவரேனும் வாடிக்கைக்காரரால் வங்கியிடம் ஈடு வைக்கப்பட்டுள்ள ஏதேனும் ஆதனத்தைக் காப்புறுதி செய்தற்கான ஒழுங்குகளைச் செய்தல் ;

(ஔ) வங்கியானது கொண்டுநடாத்தற்கு அதிகாரமளிக்கப் பட்டதாய் இலங்கையில் எவரேனும் ஒருவரால் கொண்டு நடாத்தப்படும் ஏதேனும் வியாபாரத்தின் முழுவதையும் அல்லது அதன் பகுதி எதையும் கைக் கொள்ளுதல் அல்லது பொறுப்பேற்றல் ;

(ஃ) கசெற்றிற் பிரசுரிக்கப்படுங் கட்டளையின் மூலம் அமைச்சரால் நியமிக்கப்படக்கூடிய தேதியிலிருந்து, எவையேனும் கமத்தொழிலுக்குரிய, வசிப்பதற்குரிய அல்லது வியாபாரத்துக்குரிய வளவுகள் முழுவதை யும் அல்லது அவற்றில் எப்பாகத்தையாவது கைக் கொண்டு Vஅ என்னும் அத்தியாயத்தின் ஏற்பாடு களை நிர்வகிப்பதற்கு அத்தகைய வளவுகளைக் கைய ளித்தல் ;

(க) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத் தையும், வங்கியானது கொண்டு நடாத்தற்கு அதி காரமளிக்கப்பட்ட ஏதேனும் வியாபாரம் தொடர்பில் அவ்வாறு செய்தல் அவசியமென்று அல்லது வசதி யென்று வங்கி நினைக்கின்ற அல்லது வங்கி வைத்தி ருக்கும் எவையேனும் பிணைகளின் பயனை அடை வதற்கு உதவியாயிருத்தற்காக அல்லது ஏற்படக் கூடுமென அஞ்சப்படும் ஏதேனும் இழப்பை அல்லது பொறுப்பைத் தடுத்தற்காக அல்லது குறைப்பதற்காக அவற்றை வாங்குதல் தேவையானது அல்லது புத்தி சாலித்தனமானது என்று வங்கி கருதும் ஏதேனும் உரிமையை அல்லது சிறப்புரிமையை வாங்குதல், குத் தகைக் கெடுத்தல் அல்லது கொடுத்து மாறிக் கொள்ளல்' வாடகைக் கெடுத்தல் அல்லது வேறுவித மாகப் பெற்றுக்கொள்ளல் ;

(ங) வங்கியின் தொழிலாளர்களுக்கு அல்லது அத்தொழி லாளரிற் சார்ந்துள்ளோர்க்கு நன்மை பயக்கக்கூடிய வகையில் ஓய்வு ஊதியங்களையும் பணிக்கொடைகளை யும் வேறுநிதிகளையும் வசதிகளையும் ஏற்பாடு செய் வதற்காகக் கழகங்களை, நிறுவனங்களை, நம்பிக்கைப் பொறுப்புக்களை அல்லது திட்டங்களைத் தாபித்தலும் அவற்றைத் தாங்குதலும் அல்லது அவற்றைத் தாபித் தலுக்கு அல்லது தாங்கலுக்கு உதவுதல் ;

(ச) எந்த அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைப் பிணையாகக் கொண்டு வங்கி கடன் ஒன்றைக் கொடுத்ததோ, அல்லது எந்த அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தின் மீது அதைக்கையாளும் ஏதே னும் தத்துவம் அதற்குண்டோ அந்த ஆதனம் உட்பட வங்கியின் எல்லா ஆதனங்களையும், உரிமைகளையும் அல்லது அவற்றுள் எந்தவொரு பகுதியையும் சீர்திருத் தல், முகாமைசெய்தல், அபிவிருத்திசெய்தல் கொடுத் துமாறல், குத்தகைக்குவிடல், ஈடுவைக்கல், கையா ளல், விற்றல் அல்லது பயனுள்ளவாறு செய்தல் அல் லது வேறெந்த வகையிலும் பயன்படுத்திக் கொள்ளல் ;

(ஞ) வங்கியின் ஏதேனும் குறிக்கோளுக்கு உதவுவதாயிருக்கு மென வங்கிக்குத் தோன்றும் ஏதேனும் உரிமைகளையும் சிறப்பு உரிமைகளையும் சலுகைகளையும் பெறும் நோக் கத்திற்காக ஏதேனும் உத்தரவாதமளித்தல் அல்லது நட்ட ஈடு கொடுத்தலும் அரசாங்கத்தோடு அல்லது

ஏதேனும் உள்ளூரதிகார சபையோடு அல்லது ஏதேனும் இணைக்கப்பட்ட குழுவோடு வேறுளோடு ஏதேனும் உடன்படிக்கை செய்துகொள்ளுதல் ;

(ட) கடனீட்டு முறிகள் வழங்குதல் ;

(ண) எப்படியிருப்பினும் அவ்வாறு கடனுகப் பெறப்பட்டு வைப்பாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகையின் ஒன்று திரட்டு எந்தவொரு நேரத்திலும், நிதி அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரால் விதிக்கப்படும் உச்ச எல்லையை விஞ்சாவண்ணம் 'அரசாங்கத்திடமிருந்து அல்லது மத்திய வங்கியிடமிருந்து அல்லது மத்திய வங்கியின் நாணயச் சபையால் அந்நோக்கத்திற்கான அங்கீகரிக்கப்படும் அத்தகைய நிறுவனங்களிலிருந்து இரு கட்சியினரும் இருவையினுைத்து இணங்கும் அத்த கைய நியதியில் வைப்புக்களைக் கடனெடுத்தல் அல்லது ஏற்றுக்கொள்ளல் ;

(த) வங்கியின் ஒதுக்கு நிதியின் தேவைக்காக அரசாங்கத் திடமிருந்து, அரசாங்கமும் வங்கியும் இருவகையினு த்து இணங்கக்கூடிய அத்தகைய நியதி நிபந்தனை களுக்கமைய அரைக்கோடி ரூபாய்க்கு மிகாத ஒரு தொகையை உதவுதொகையாகப் பெறுதல் ;

(ந) அமைச்சரின் அல்லது மத்திய வங்கியின் நாணயச் சபையின் அங்கீகாரத்துடன் நாட்டாயிடை முகவர் நிலையம் ஏதோடும் தொடர்புகொண்டு கடன் பெறு தல் ;

(ப) தொழில்நுட்பச் சேவைகள் நிதிச் சேவைகள், முகா மைச் சேவைகள் என்பன ஏற்பாடு செய்வதற்காக ஏதேனும் நிறுவகத்தைத் தாபித்துப் பேணி வருதல் அல்லது ஏதேனும் திட்டத்தில் பங்கு கொள்ளுதல் ;

(ம) பொருளாதார ஆய்வுகளையும், கற்கைகளையும், கருத் தரங்குகளையும் நடாத்துதல் ;

(ய) வங்கியிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட ஆளடுக்கினரை யும் வேருட்களையும் கணக்கியல், வங்கித் தொழில், விலை மதிப்பீடு, திட்டக் கணிப்பு, கடன் கணிப்பு பொருள் நுட்பவியல், அறிவியல் நுணுக்கம் என்பன வற்றில் பயிற்றல் ;

(ர) நட்ட ஈடு கொடுத்தல் ;

(ல) கமத்தொழிலில் ஈடுபட்டுள்ள பகிரங்க அல்லது தனி யார் கம்பெனிகளின் பங்குகளில், கடனீட்டு முறி களில் அல்லது வேறு தோதான பிணைகளில் வங்கி யின் நிதிகளை முதலீடு செய்தல் ;

(வ) வங்கியின் நாணயத்தினை நிறுவுதற்கும், நிலைநாட்டு தற்கும் நல்லனவென வங்கி கருதக்கூடிய அத்தகைய எல்லா முறைகளையும் எடுத்தலும் எடுத்தவற்றில் ஒருப்படுதலும் ; அத்துடன் முற்போந்த பந்திகளில் எடுத்துரைக்கப்பட்ட வங்கியின் குறிக்கோள்களை எய் துதற்கும், தத்துவங்களைப் பிரயோகித்தற்கும் உதவக் கூடிய அல்லது அதன் விளைவான எல்லா அலுவல்களை யும் செய்தலும்.

(2) இப்பிரிவின் (1)ம் உட்பிரிவின் ஏதேனும் பந்தியில் குறிப்பிடப் பட்ட ஏதேனும் குறிக்கோள் அல்லது நோக்கம், அந்தச் சந்தர்ப்பம் அவ்வாறு தேவைப்படுத்துகின்ற இடத்திலொழிய அல்லது ஏதேனும் எல்லேப்பாடு அல்லது மட்டுப்பாடு விதிக்கப்படுகின்ற இடத்திலொழிய அவ்வுட்பிரிவின் வேறேனும் பந்திக் கிணங்க அல்லது அதில் குறிப்பிட்ட குறிக்கோளுக்கிணங்க அல்லது வேறு வகையாகத் தொடர்பு படுத்தப்பட்டு அல்லது ஊகிக்கப்பட்டு ஏதேனும் வழியில் எல்லேப்படுத்தப்படவோ மட்டுப்படுத்தப்படவோ கூடாது.

(3) இந்தப் பிரிவில் ''வங்கியின் வாடிக்கைகாரர்'' என்ற சொற்ருெடர் இக்கட்டளேச் சட்டத்தின்கீழ் வங்கியிலிருந்து உதவி பெறுமோராளேக் குறிக்கும்''.

19. முதன்மைச் சட்டவாக்கத்தின் 52ம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1)ம் உட்பிரிவை நீக்கிவிடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (2)ம் உட்பிரிவை 52ம் பிரிவென மீளவிலக்கமிடுவதன் மூலமும் ;

(3) அந்தச் சட்டவாக்கத்தின் மீளவிலக்கமிடப்பட்ட 52ம் பிரிவில் '' (1)ம் உட்பிரிவின் நோக்கங்களுக்கும் 3ம் பிரிவின் நோக்கங்களுக்குமென '' என்ற சொற்களுக்குப் பதிலாக '' (3)ம் உட்பிரிவின் நோக்கங்களுக்கு '' என்ற சொற்களேயிடுவதன் மூலமும் ; அத்துடன்

(4) அப்பிரிவுக்கான ஓரக்குறிப்பிற்குப் பதிலாகப் பின்வரும் புதிய ஓரக்குறிப்பையிடுவதன் மூலமும் :—

'' குறித்த சில சூழ்நிலேகளில் மேலதிகமான கடன்களே வழங்குதற்கான தத்துவம்''.

20. முதன்மைச் சட்டவாக்கத்தின் 53ம் பிரிவானது அப்பிரிவின் (இ) என்னும் பந்தியில் '' செல்லுபடியாகும் '' என்ற சொல்லுக்குப் பதிலாக '' திருத்தியான '' என்ற சொல்லேயிடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :

21. முதன்மைச் சட்டவாக்கத்தின் 54ம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டுப் பின்வரும் புதிய பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றன :—

54. (1) சபையின் தீர்மானமொன்றின் பேரிலன்றிக் கடனெதுவும் வழங்கப்படுதலாகாது :
ஆயின், எப்படியிருப்பினும், சபையானது 19ம் பிரிவின் கீழ் இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாத வரைக்கும் ஏதேனுமொரு தொகையைக் கடனுக வழங்கும்படி பொது முகாமையாளருக்குத் தத்துவமளித்தல் கூடும் :—

ஆயின், மேலும், இருபத்தையாயிரம் ரூபாவுக்கு மேற்படும் ஏதேனும் தொகைக்கான எக்கடனும் புணிப்பாளருள் மூவருக்குக் குறைந்தவர்களின் சாயகமான வாக்கின் மூலம் நிறைவேற்பட்ட தீர்மானத்தின் பேரில் வழங்கப்படுதலாகாது.

(2) இப்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் பொது முகாமையாளரால் வழங்கப்பட்ட எல்லாக் கடன்களும் சபையின் அடுத்துவரும் கூட்டத்தில் சபைக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்''.

**22.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 58ம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1)ம் உட்பிரிவை நீக்கி அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவையிடுதல் மூலமும் :—

" (1) கடன்களை மீளக்கொடுத்தல்—

(அ) அரையாண்டு, காலாண்டு அல்லது மாதந்தோறுமான தவணைப் பணங்களாக அல்லது சமதுண்டமான கொடுப்பனவுகளாகக் கொடுக்கப்படுதல் வேண்டும் ; அல்லது

(ஆ) சபையால் தீர்மானிக்கப்படும் அத்தகைய நியதிகளுக்கிணங்கக் கொடுக்கப்படுதல் வேண்டும். " ; அத்துடன்

(2) அப்பிரிவுக்கான ஓரக்குறிப்பிற்குப் பதிலாகப் பின்வரும் புதிய ஓரக்குறிப்பையிடுவதன் மூலமும் :—

" கடன்களை மீளக்கொடுக்கும் முறை. ".

**23.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 60ம் பிரிவானது " சபை " என்ற சொல் அந்தப் பிரிவில் தோன்றுமிடமெல்லாம் அதற்குப் பதிலாக " வங்கி " என்ற சொல்லையிடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

**24.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 61ம் பிரிவையுடனடுத்து " (iv) அறவிடுதல் " என்ற துணைத் தலைப்பின்கீழ் பின்வரும் புதிய பிரிவுகளிடப்படுகின்றன ; அவை அச்சட்டவாக்கத்தின் 61அ, 61ஆ, 61இ, 61ஈ, 61உ என்னும் பிரிவுகளாகப் பயனுடையனவாதல் வேண்டும் :—

61அ. ஏதேனும் கடன்பேரிற் சபைக்கு வரவேண்டிய ஏதேனும் தொகையைக் கொடுப்பதில் தவறு ஏற்படுகின்ற விடத்து, அத்தவறு முதல் காரணமாகவிருப்பினுஞ்சரி வட்டி காரணமாகவிருப்பினுஞ்சரி அல்லது அவையிரண்டினதும் காரணமாகவிருப்பினுஞ்சரி, அத்தவறுனது அந்தக் கடனின் கொடுக்கப்படாது எஞ்சியுள்ளதன் முழுப்பகுதி தொடர்பாகவும், அது தொடர்பில் அத்தேதிவரை வரவேண்டியுள்ள கடன் தொடர்பானதுமாகத் தவறேற்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும் ; அத்துடன் சபையானது அதன் தற்றுணியின் பேரில் 61ஆ அல்லது 61ஈ என்ற பிரிவில் குறிப்பிடப்பட்ட நடவடிக்கையை எடுத்தல் வேண்டும் :

ஆயின், எப்படியிருப்பினும், சபையானது ஏதேனும் விடயத்தில் 61ஆ என்னும் பிரிவுக்கிணங்க நடவடிக்கை எடுத்திருக்கின்றவிடத்து அல்லது நடவடிக்கை எடுக்கத் தொடங்கியிருக்கின்றவிடத்து, சபை அவ்வாறு செய்தல் புத்திசாலித்தனமானது அல்லது அவசியமானது என்ற கருத்தினல் அது 61ஈ என்னும் பிரிவின்கீழ் தீர்மானமொன்றின் மூலம் அந்த விடயம் தொடர்பாகப் பின்னர் எந்த நேரத்திலும் நடவடிக்கையெடுத்தலை எதுவும் தடுப்பதாகக் கருதப்படுதலாகாது.

61ஆ. 61உ என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கமையச் சபையானது எழுத்தில் பதியப்படவேண்டிய தீர்மானமொன்றின் மூலம் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்ட ஆளெவருக்கும் அவ்வாறு, எந்தக் கடன் தொடர்பாகத் தவறு

தலானது செய்யப்பட்டிருக்கின்றதோ அந்தக் கடனுக்குப் பிணையாக வங்கியில் ஈடுவைக்கப்பட்டுள்ள ஏதேனும் அசையற்ற ஆதனத்துள் நுழையவும், நுழைந்து அத்தகைய ஆதனத்தை ஆட்சியெடுக்கவும் முகாமை செய்யவும் பேணவும், ஈடுவைத்தவர் அவ்வாறு தவறியிருக்காவிட்டால் அவரால் பிரயோகிக்கப்பட்டிருக்கக் கூடிய அதே தத்துவங்களை அத்தகைய ஆதனத்தைக் கட்டுப்படுத்துவதிலும் முகாமை செய்வதிலும் பிரயோகிக்கவும் அவருக்கு அதிகாரமளிக்கலாம்.

61இ. (1) ஏதேனும் ஆதனம் தொடர்பில் 61ஆ என்னும் பிரிவின்கீழ் சபையின் தீர்மானம் மூலம் அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஆளெவரும் தீர்மானத்தின்படி பொதுவாக நடவடிக்கையெடுக்கவும், குறிப்பாக—

(அ) அத்தகைய ஆதனத்தின் விளைபொருட்களை விற்கவும் ;

(ஆ) அத்தகைய ஆதனத்திலிருந்துவரும் வாடகைகள், இலாபங்கள் அல்லது வேறு வருமானத்தைப் பெறவும் ;

(இ) அத்தகைய ஆதனத்தைக் கட்டுப்படுத்துவதிலும் முகாமை செய்வதிலும் உறப்பட்ட செலவுகளை அத்தகைய ஆதனத்திலிருந்து கிடைக்கும் வருமானத்திலிருந்து கொடுக்கவும் ;

(ஈ) தான் செய்யும் சேவைக்கு ஊதியமாகச் சபையானது பொருத்தமானதென்று கருதி நிர்ணயிக்கும் அத்தகைய தொகையை (எதுவுமிருப்பின்) அத்தகைய வருமானத்திலிருந்து எடுத்துக்கொள்ளவும் ;

(உ) அத்தகைய ஆதனத்தின்மீதான ஈட்டின்கீழ் வங்கிக்கு வரவேண்டிய எல்லாப் பணங்களையும் பெறும் வரை அல்லது அத்தகைய ஆதனத்தின் ஆட்சியை (2)ம் உட்பிரிவின்கீழ் விட்டுக்கொடுக்கும்படி சபையால் பணிக்கப்படும்வரை அத்தகைய ஆதனத்தில் இருப்பாட்சி கொண்டிருக்கவும்—

உரிமையுடையவராயிருத்தல் வேண்டும்.

(2) ஏதேனும் ஆதனம் தொடர்பில் 61ஆ என்னும் பிரிவின் கீழ் சபையின் தீர்மானத்தின் மூலம் அதிகாரமளிக்கப்பட்ட ஒவ்வோராளும்—

(அ) மாதந்தோறும் அத்தகைய ஆதனத்தின் வருமானத்திலிருந்து, ஈடுவைத்தவரின் பராமரிப்புக்கெனச், சபையானது அதன் தற்றுணிபில் நிர்ணயிக்கும் அத்தகைய தொகையை (அவ்வாறு ஏதேனுமிருப்பின்) ஈடுவைத்தவருக்குக் கொடுத்தல் வேண்டும் ;

(ஆ) காலாண்டுக்கொருமுறை அல்லது சபையால் வேறு விதமாகப் பணிக்கப்படும் அத்தகைய முறையில் சபையானது பணிக்கும் அத்தகைய முறையிலும் அத்தகைய ஆளுக்கு அல்லது ஆட்களுக்கும் இதன் கண் முன்னே அதிகாரமளிக்கப்பட்ட கொடுப்பனவுகளைக் கொடுத்ததன் பின்னர் எஞ்சியிருக்கும் அத்தகைய ஆதனத்தின் வருமானத்தின் மிகுதியைக் கொடுத்தல் வேண்டும் ;

(இ) அத்தகைய ஆதனம் தொடர்பில் அவரால் பெறப்பட்ட அல்லது அவரால் கொடுக்கப்பட்ட எல்லாப் பணங்களையும் பற்றிய தெளிவானவும் திட்டமானவுமான பதிவுகளை வைத்திருந்து வருதல் வேண்டுமென்பதோடு சபையானது தீர்மானிக்கக்கூடிய அத்தகைய கால இடைகளில் சபைக்குக் கொடுத்துதவுதலும் வேண்டும் ;

(ஈ) அத்தகைய ஆதனத்தின் ஆட்சியை அந்த ஈடுவைத்தவருக்கு அல்லது சபையால் பணிக்கப்படும் அத்தகைய வேறு ஆளுக்குக்கொடுத்து, இதன்கண் முன்னே அதிகாரமளிக்கப்பட்ட கொடுப்பனவுகள் கொடுக்கப்பட்ட பின்னர் அவரது கையிலிருக்கும் அத்தகைய ஆதனத்திலிருந்து பெறப்பட்ட வருமானத்தின் மிகுதியைச் சபைக்குக் கொடுத்தலும் வேண்டும்.

(3) ஈட்டின்பேரில் வங்கிக்குக் கொடுக்கப்படவுள்ள எல்லாத் தொகைகளும் முழுமையாகக் கொடுக்கப்பட்டதும் சபையானது ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் ஆட்சியை ஈடுவைத்தவருக்கு ஒப்படைத்து அத்தகைய ஆதனத்திலிருந்துபெற்ற வருமானத்தின் எஞ்சியிருக்கும் ஏதேனும் மிகுதியை ஈடுவைத்தவருக்குக் கொடுத்தல்வேண்டும்.

61ஈ. 61உ என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய சபையானது எழுத்தில் பதிவுசெய்யப்பட வேண்டிய தீர்மானமொன்றின்மூலம் அந்தத் தீர்மானத்தில் குறிப்பிடப்படும் ஆளொருவரை எந்த ஒரு கடன் தொடர்பில் அந்தத் தவறுதல் செய்யப்பட்டதோ அந்த ஏதேனும் கடனுக்குப் பிணையாக வங்கியிடம் ஈடுவைக்கப்பட்ட ஏதேனும் அசைவற்ற ஆதனத்தை, அத்தகைய கடனின் முழுமையும் அல்லது கொடுக்கப்படாதுள்ள அத்தகைய பகுதியையும் அந்த விற்பனை நாள்வரை அந்தக் கடன்பேரில் கொடுக்கப்படவேண்டிய வட்டியையும் 63ம் பிரிவின்கீழ் அறவிடப்படற்பாலதான பணத்தையும் செலவையும் அறவிடுதற்கென, பகிரங்க ஏலம் மூலம் விற்பதற்கு அதிகாரமளிக்கலாம்.

61உ. (1) இரண்டாம் உட்பிரிவில் வேறுவிதமான ஏற்பாடு செய்திருப்பதனைத் தவிர, 61ஆ 61ஈ என்ற பிரிவுகளின் ஏற்பாடுகள் கடன்பெற்றவர் இறந்திருப்பினும் அல்லது கடனுக்கான பிணையாக வங்கியில் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்திலுள்ள ஏதேனும் உரிமை, உரித்து, அல்லது எந்த விதமான அக்கறையும் உளம் விரும்பிக் கொடுக்கல் மூலம், அல்லது சட்டச் செயற்பாட்டின் மூலம் வேறொருவருக்குப் போயிருப்பினும் ஏதேனும் தவறுதல் விடயத்திலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) கடன் பெற்றவரொருவர் இறந்து, அவரின் இறுதி விருப்பாவணத்தின் அதிகாரப்பத்திரம் அல்லது அவரது சொத்துக்கான நிருவாகப் பத்திரங்கள் ஆளெவருக்கேனும் கொடுக்கப்படாமலிருக்கின்றவிடத்து கொழும்பு மாவட்ட நீதிமன்றம் அல்லது வங்கியிடம் கடன் பெற்றவரால் ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனம் எந்தமாவட்டத்தில் உள்ளதோ அந்த மாவட்டத்தின் நீதிமன்றம்,

சபையின் அதற்கான விண்ணப்பத்தின்பேரில் அத்தகைய விண்ணப்பம்பற்றிய அறிவித்தலை நீதிமன்றம் கட்டளையிடும் அத்தகைய ஆட்களின்மீது (அப்படி எவரேனும் இருப்பின்) விடுப்பதோடு இறுதிவிருப்பாவண அதிகாரப் பத்திரம் அல்லது நிருவாகப் பத்திரங்கள் வழங்கப்படுதலில் தாமதம் ஏற்படலாம் என்று திருத்திப்பட்டால் அந்நீதிமன்றம் இப்பிரிவின் நோக்கங்களுக்கெனக் கடன் பட்டவரின் சொத்தைப் பிரதிநிதித்துவம் வகித்தற்கென ஆளொருவரை நியமிக்கலாம்; அத்தகைய கடன்பெற்றவரால் செய்யப்படும் எந்தத் தவறின் விடயத்திலும் அத்தகைய கடன்பெற்றவரின் சொத்தைப் பிரதிநிதித்துவம் வகிக்க இப்பிரிவின்கீழ் ஆளொருவர் நியமிக்கப் பட்டாலொழிய நியமிக்கப்படும்வரையும் 61ஆ, 61ஈ என்ற பிரிவுகளின் ஏற்பாடுகள், ஏற்புடையனவாதலாகாது ''.

*25.* முதன்மைச் சட்டவாக்கத்தின் 62ம் பிரிவானது இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1)ம், (2)ம் உட்பிரிவுகளை நீக்குவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (3)ம், (4)ம், (5)ம், (6)ம், (7)ம் உட்பிரிவுகளை அப்பிரிவின் (1)ம், (2)ம், (3)ம், (4)ம், (5)ம் உட்பிரிவுகளாக முறையே மீளவிலக்கம் இடுவதன் மூலமும் ;

(3) அப்பிரிவின் மீளவிலக்கம் இடப்பட்ட (2)ம் உட்பிரிவில்,—

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் '' ஏதேனும் தண்டனைவட்டி '' என்ற சொற்களுக்குப் பதிலாக '' ஏதேனும் தண்டனை அல்லது இரட்டைவட்டி '' என்ற சொற்களையிடுவதன் மூலமும் ;

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில்,—

(1) '' சமதுண்டக் கொடுப்பனவு '' என்ற சொற்களுக்குப் பதிலாக '' சமதுண்டக் கொடுப்பனவு அல்லது வேறு கொடுப்பனவு '' என்ற சொற்களையிடுவதன் மூலமும் ;

(2) ஏதேனும் '' தண்டனைவட்டி '' என்ற சொற்களுக்குப் பதிலாக ஏதேனும் '' தண்டனை அல்லது இரட்டைவட்டி '' என்ற சொற்களையிடுவதன் மூலமும் ;

(3) '' சபையானது அதன் தற்றுணிபின்பேரில் '' என்ற சொற்களுக்குப் பதிலாக '' வங்கியானது அதன் தற்றுணிபின் பேரில் '' என்ற சொற்களையிடுவதன் மூலமும் ; அத்துடன்

(4) '' (1)ம் உட்பிரிவு '' என்ற சொற்களுக்குப் பதிலாக '' 61ஈ என்னும் பிரிவு '' என்ற சொற்களையிடுவதன் மூலமும் ;

(4) அப்பிரிவின் மீளவிலக்கப்பட்ட (3)ம் உட்பிரிவை நீக்கி, அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவையிடுவதன் மூலமும் :—

'' (3)(அ) மேன்பட்ட விலையொன்றைச் சபையானது நிர்ணயிக்கலாம். அந்த ஆதனம் வங்கி தவிர்ந்த வேறெவ்வாளுக்கும் அதன்கீழ் விலையாக விற்கப்படலாகா.

(ஆ) மேன்மட்ட விலை ஒன்றை நிர்ணயிக்கும்போது சபையானது ஆதனத்தைப் பிணையாக வைத்து வழங்கப்பட்ட கடனில் வருமதியாக எஞ்சியுள்ள தொகையையும், அந்த ஆதனத்தின் அப்போதைய பெறுமதியையும் குறிப்பாகக் கருத்திற்கொள்ளுதல் வேண்டும். '' ;

(5) அப்பிரிவின் மீளவிலக்கமிடப்பட்ட (5)ம் உட்பிரிவில் '' இப்பிரிவு '' என்ற சொற்களுக்குப் பதிலாக '' 61அ தொடங்கி 68ம் பிரிவு வரையுள்ள (61அ வும் 68உம் உட்பட) பிரிவுகள் '' என்ற சொற்களையிடுவதன் மூலமும் ; அத்துடன்

(6) அப்பிரிவுக்கான ஓரக்குறிப்பிற்குப் பதிலாகப் பின்வரும் புதிய ஓரக்குறிப்பையிடுவதன் மூலமும் :

'' விற்பனை பற்றிய சிறப்பேற்பாடுகள். ''

**26.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 63ம் பிரிவானது அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் அப்பந்திக்கான காப்பு வாசகத்திற்குப் பதிலாகப் பின்வரும் புதிய காப்பு சவாகத்தையிடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :—

'' ஆயின், எப்படியிருப்பினும், இப்பந்தியின்கீழ் உறப்பட்ட செலவுகள் வங்கியால் காலத்திற்குக் காலம் நிர்ணயிக்கப்படும் கடனின் அத்தகைய நூற்றுவீதத்தை விஞ்சுதலாகாது ; அத்துடன் ''.

**27.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 64ம் பிரிவானது '' சபை '' என்ற சொல் அப்பிரிவில் தோன்றுமிடமெல்லாம் அதற்குப் பதிலாக '' வங்கி '' என்ற சொல்லையிடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

**28.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 66ம் பிரிவானது இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (3)ம் உட்பிரிவின் '' 62ம் பிரிவின் ஏற்பாடுகளைப் பின்பற்றி விற்கப்பட்ட காணி '' என்ற சொற்களுக்குப் பதிலாக '' இக்கட்டளைச் சட்டத்தின் முற்போன்ற ஏற்பாடுகளைப் பின்பற்றி விற்கப்பட்ட ஆதனம் '' என்ற சொற்களையிடுவதன் மூலமும் ;

அத்துடன்

(2) அப்பிரிவின் (4)ம் உட்பிரிவில்—

(அ) '' 62ம் பிரிவின் ஏற்பாடுகளைப் பின்பற்றி '' என்ற சொற்களுக்குப் பதிலாக '' இக்கட்டளைச் சட்டத்தின் முற்போந்த ஏற்பாடுகளைப் பின்பற்றி '' என்ற சொற்களையிடுவதன் மூலமும் ; அத்துடன்

(ஆ) '' ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் அல்லது தமிழிலும் '' என்ற சொற்களுக்குப் பதிலாகச் '' சிங்களத்திலும் தமிழிலும் '' என்ற சொற்களையிடுவதன் மூலமும்.

*29.* முதன்மைச் சட்டவாக்கத்தின் 67ம் பிரிவானது ''ஒன்பது சதவீதம்'' என்ற சொற்களுக்குப் பதிலாக '' விதிக்கப்பட்ட வீதம் '' என்ற சொற்களை யிடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*30.* முதன்மைச் சட்டவாக்கத்தின் 69ம் பிரிவானது '' 62ஆம் பிரிவின்கீழ் '' என்ற சொற்களுக்குப் பதிலாக '' இந்தக் கட்டளைச் சட்டத்தின் முற்போந்த ஏற்பாடுகளைப் பின்பற்றி '' என்ற சொற்களை யிடுவதன் மூலமும் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*31.* பின்வரும் புதிய அத்தியாயம் Vம் அத்தியாயத்தை உடனடுத்து நேரே பின்னே இதனுல் இடையிற் சேர்க்கப்பட்டுப் பிரதான சட்டவாக்கத்தின் V அ என்னும் அத்தியாயமாகப் பயன்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் Vஅ

சில வளவுகளைக் கொள்ளுதலும் அத்தகைய வளவுகளைக் கையாளுதலும்

*70அ.* இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளை நிர்வகித்தலுக்கு வங்கி பொறுப்பாகவிருக்க வேண்டியதுடன் அது வங்கிக்குப் பொறுப்பிக்கவும்பட வேண்டியதுடன், இவ்வத்தியாயத்தினுல் அல்லது அதன்கீழ் வங்கிக்கு வழங்கப்பட்ட, விதிக்கப்பட்ட அல்லது ஒதுக்கப்பட்ட தத்துவம், கடமை அல்லது பணி எதனையாவது பிரயோகிக்கையில், புரிவதில் அல்லது ஆற்றுவதில் அது அமைச்சரின் பொதுப் பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைந்திருத்தலும் வேண்டும்.

*70ஆ (1)* இரண்டாமுட்பிரிவினேற்பாடுகளுக்கமைய, எவையேனும் விவசாய, குடியிருப்பு அல்லது வியாபார வளவுகள் 1952ம் ஆண்டு சனவரி மாதம் முதலாம் நாளுக்கு முந்தாத எந்தக் காலத்திலாவது—

*(அ)* (இதன்பின் இவ்வத்தியாயத்தில் ''ஆதிச் சொந்தக்காரன்'' எனக் குறிப்பிடப்படும்) அத்தகைய வளவுகளின் சொந்தக்காரனுக்கெதிராக நீதிமன்றமொன்றினுல் எழுதப்பட்ட ஈட்டுத்தீர்வையொன்றை நிறைவேற்றுவதில் விற்கப்பட்டதென ; அல்லது

*(ஆ)* (இதன்பின் இவ்வத்தியாயத்தின் '' ஆதிச் சொந்தக்காரன் '' எனக் குறிப்பிடப்படும்) அவ்வளவுகளின் சொந்தக்காரனுல் அவ்வாதிச் சொந்தக்காரனிடமிருந்து அல்லது அவருக்கு முந்திய உரிமைக்காரரிடமிருந்து வேறெவரேனுமொருவருக்குப் போகுமதியாயிருந்ததும் அவ்விதம் மாற்றப்படுவதற்கு நேரே முன்னேயிருந்த அவ்வளவுகளின் ஈடொன்றைப் பிணையாகக்கொண்டதுமான கடனென்றைத் திருப்திப்படுத்துவதில் எந்த வேறு ஆளுக்கு மாற்றப்பட்டதென ; அல்லது

*(இ)* (இதன்பின் இவ்வத்தியாயத்தில் ''ஆதிச் சொந்தக்காரன் '' எனக் குறிப்பிடப்படும்) அவ்வளவுகளின் சொந்தக்காரனுல் அவ்வாதிச் சொந்தக்காரனிடமிருந்து அல்லது அவருக்கு முந்திய உரிமைக்காரனிடமிருந்து அவ்வளவுகளின் ஈடு ஏற்றவரொருவ

ருக்குப் போகுமதியாயிருந்ததும் அவ்விதம் மாற்றப் படுவதற்கு நேரெ முன்னேயிருந்த அவ்வளவுகளின் ஈடொன்றைப் பிணையாகக் கொண்டதுமான கடனொன்றைத் திருப்திப்படுத்துவதில் அல்லது பகுதியாகத் திருப்திப்படுத்துவதில் அந்த ஈடு ஏற்றவரின் வேண்டுகோளின் பேரில் வேறெவரேனுமொருவருக்கு மாற்றப்பட்டதென ; அல்லது

(ஈ) அவ்வளவுகளின் சொந்தக்காரனால் வேறெவரேனுமொருவருக்கு, அவ்விதம் மாற்றுவதற்குப் பிரதிபலனாக அத்தகைய வேறு ஆளிடமிருந்து ஒரு தொகைப் பணத்தைப் பெற்ற பின்னரும், அத்தொகை அதற்குரிய வட்டியுடன் அல்லது இல்லாது குறிப்பிடப்பட்ட ஒரு காலத்தினுள் (இதன் பின் இவ்வத்தியாயத்தில் ''ஆதிச் சொந்தக்காரன்'' எனக் குறிப்பிடப்படும்) மாற்றியெழுதியவரால் திருப்பிக்கொடுபட்டதன்மேல் அத்தகைய வேறு ஆள் அவ்வளவுகளை ஆதிச் சொந்தக்காரனுக்குத் திரும்ப மாற்றியெழுதுவாரென்ற நிபந்தனையின் பேரிலும் மாற்றப்பட்ட தென

வங்கி திருப்தியடைந்தால், அவ்வளவுகள் முழுவதையும் அல்லது அவற்றின் எப்பாகத்தையுங் கொள்வதற்கு வங்கி இதனல் அதிகாரமளிக்கப்படுகின்றது.

(2) எவ்வளவுகளாவது—

(அ) அதன் சார்பான விண்ணப்பமொன்று ஆதிச் சொந்தக்காரனால் கடன் இணக்கச் சபைக்கு ஏற்கனவே செய்யப்பட்டிருந்து, தரப்பினர்களுக்கிடையே இணக்கமொன்று ஏற்பட்டிருந்தால் ; அல்லது

(ஆ) அதற்கான விண்ணப்பமொன்று 1963ம் ஆண்டின் 11ம் இலக்க, நிதிச் சட்டத்தின் VIIIம் பாகத்தின்கீழ் மக்கள் வங்கிக்கு அதற்குமுன் செய்யப்பட்டிருந்து, அத்தகைய வளவுகள் கொள்ளப்படுதலாகாதென அத்தகைய வங்கி தீர்மானித்திருந்தால் ; அல்லது

(இ) அதன் சார்பான விண்ணப்பமொன்று அத்தகைய வளவுகளின் ஆதிச் சொந்தக்காரனால் அல்லது அவருடைய வாழ்க்கைத்துணைவியினல் அல்லது பிள்ளைகளால் வங்கிக்குச் செய்யப்பட்டிருந்தாலன்றி, அல்லது

(ஈ) வருமானவரி விதித்தல் சம்பந்தமான எழுத்திலுள்ள சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் கணிக்கப்பட்ட அவ்வாதிச் சொந்தக்காரனினதும் அவர் எந்தக் குடும்பத்துக்குத் தலைவராகவுள்ளாரோ அக்குடும்பத்தின் ஏனைய உறுப்பினர்களினதும், அத்தகைய விண்ணப்பஞ் செய்யப்படுந் தேதிக்கு நேரே முந்திய மூன்று மதிப்பீட்டு ஆண்டுகளுக்கான சராசரிச் சட்டப்படியான வருமானம் பத்தாயிரம் ரூபா கொண்ட தொகையொன்றுக்கு மேற்படவில்லையென வங்கி திருப்தியடைந்தாலன்றி ; அல்லது

(உ) அவ்விண்ணப்பத்திற் சம்பந்தப்பட்டவளவுகள், அவ்வளவுகளின் ஆதிச் சொந்தக்காரனுக்கு அல்லது அத்தகைய சொந்தக்காரனின் குடும்பத்தின் உறுப்பினரெவருக்காவது வசிப்பிடமொன்ருக உபயோகப்படுத்தப்படுவதற்கு அல்லது அத்தகைய சொந்தக்காரனின் அல்லது அவருடைய குடும்பத்தின் உறுப்பினரெவரேனுமொருவரின் தொழில், வியாபாரம் அலுவல் வாழ்க்கைத் தொழில், அல்லது வேலை ஏதாவதன் நோக்கத்துக்கு நியாயமாகத் தேவைப்படுகின்றனவெனவும், அவ்விண்ணப்பத்திற் சம்பந்தப்பட்ட வளவுகள் என்ன நோக்கங்களுக்கு உபயோகிக்கப்படுகின்றனவோ, அந்த நோக்கங்களுக்கு உபயோகிக்கப்படக்கூடிய வேறு வளவுகளெவையாவது அத்தகைய சொந்தக்காரனிடம் அல்லது அவருடைய குடும்பத்தின் அங்கத்தவரிடம் இல்லையெனவும் வங்கி திருப்தியடைந்தால் ; அல்லது

(ஊ) விவசாய வளவுகள் எவற்றுடனுஞ் சம்பந்தப்பட்ட விண்ணப்பமொன்றின் விடயத்தில், ஆதியான சொந்தக்காரன் பத்து ஏக்கர்களுக்கு மேற்பட்ட விஸ்தீரணமுள்ள வேறெவையேனும் விவசாய வளவுகளுக்குச் சொந்தக்காரனுகவிருக்கவில்லையென வங்கி திருப்தியடைந்தாலன்றியும்.—

(1)ம் உட்பிரிவின்கீழ்க் கொள்ளப்படுதலாகாது.

இவ்வுட்பிரிவின் (உ) என்னும் பந்தியின் நோக்கங்களுக்காக ''குடும்பத்தின் உறுப்பினர்'' என்பது எவரேனுமொருவர் சம்பந்தமாக உபயோகிக்கப்படும்போது அவருடைய வாழ்க்கைத்துணை அல்லது பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட அவருடைய எவரேனுமொரு மகன் அல்லது மகள் எனப் பொருள்படும்.

(3) முதலாமுட்பிரிவினிற் குறிப்பிடப்பட்டுள்ள வளவுகளெவற்றையாவது கொள்வதற்கான விண்ணப்பமொன்றை வங்கி ஏற்குமிடத்து, வங்கி

(அ) அவ்விடயத்தைப் பற்றிய அறிவித்தல் அவ்வளவுகளின் சொந்தக்காரனுக்குப் பதிவுசெய்யப்பட்ட கடிதமூலம் அனுப்பிவைக்கப்பட ஏற்பாடு செய்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) அத்தகைய வளவுகள் சம்பந்தமான விதிக்கப்பட்ட விபரங்களைக் காட்டியும், அத்தகைய வளவுகள் அவ்வத்தியாயத்தின்கீழ் கொள்ளப்படக்கூடுமெனக் கூறியும், அத்தகைய அறிவித்தலின் படியொன்று பதிவு செய்யப்படுவதற்காகச் சரியான காணிகள் பதிவாளரிடம் ஒப்படைக்கப்பட அல்லது அனுப்பிவைக்கப்பட ஏற்பாடுசெய்தல் வேண்டும்

(ஆ) என்னும் பந்தியின்கீழான அறிவித்தலொவ்வொன்றும், காணியைப் பாதிக்கும் அல்லது அது சம்பந்தமான சாதனமொன்றைப் பதிவுசெய்வதற்குப் பத்திரங்களைப் பதிவு செய்தற் கட்டளைச் சட்டத்திலேற்பாடு செய்யப்பட்டுள்ள விதமாக அக்காணிகள் பதிவாளராற் பதிவு செய்யப்படவேண்டியதுடன், அத்தகைய அறிவித்தலில்

அவற்றின் விதிக்கப்பட்ட விபரங்கள் காட்டப்பட்டுள்ள வளவுகளைப் பாதிக்கும் அல்லது அவை சம்பந்தமான சாதனமொன்ருக அத்தகைய நோக்கங்களுக்குக் கருதப்படுதலும் வேண்டும் :

ஆயினும், இவ்வத்தியாயத்தின் நோக்கங்களுக்காக அத்தகைய வளவுகள் கொள்ளப்படலாகாதென வங்கி தீர்மானித்தால், வங்கி உடனடியாக அத்தகைய அறிவித்தலை நீக்கஞ் செய்து, அந்நீக்கஞ் செய்தலைப் பற்றிக் காணிகள் பதிவாளருக்கு எழுத்தில் தகவல் கொடுத்தல் வேண்டும் ; அவர் அத்தகைய நீக்கஞ் செய்தலைப் பதிவுசெய்தல் வேண்டும்.

(4) (அ) எவையேனும் வளவுகளின் சொந்தக்காரன் அவ்வளவுகள் சம்பந்தமான விண்ணப்பமொன்று தொடர்பாக (3)ம் உட்பிரிவின்கீழான அறிவித்தலொன்றைப் பெறுமிடத்து, அத்தகைய விண்ணப்பம் வங்கியினுல் தள்ளுபடி செய்யப்பட்டாலன்றி அல்லது அதுவரையில் அத்தகைய சொந்தக்காரன் அவ்வளவுகளை விற்பனை செய்தல் நன்கொடையாகக் கொடுத்தல், மாற்றியெழுதுதல் குத்தகைக்குக் கொடுத்தல், ஈடுவைத்தல் அல்லது வேறுவிதமாகப் பாராதீனப்படுத்துதல் ஆகாது.

(ஆ) இவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியினேற்பாடுகளை மீறிச் செய்யப்படும் எவையேனும் வளவுகளின் விற்பனை, நன்கொடை, மற்றும், குத்தகை, ஈடு அல்லது வேறுவிதமான பராதீனப்படுத்தல் ஒழிந்தற்றுப்போதல் வேண்டும்.

(5) (அ) இவ்வத்தியாயத்தின்கீழ் செய்யப்படவிருக்குங் கொள்ளுதலெதாவது தொடர்பாக வங்கியின் முன் முடிவடையாது நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஏதேனுங் காரியஞ் சம்பந்தமாக ; அல்லது

(ஆ) அவ்விதங் கொள்ளுதல் தொடர்பாக வங்கியினுல் பின்பற்றப்பட்ட நடவடிக்கைமுறையின் வலிமை சம்பந்தமாக அல்லது அத்தகைய கொள்ளுதலின் வலிமை சம்பந்தமாக,

உரிமையில் நீதிமன்றமெதாவது எவ்வித வழக்கையாவது ஏற்றுக்கொள்ளுதலாகாது.

(6) இவ்வத்தியாயத்தின்கீழ் அவற்றைக் கொள்வதற்கு வங்கி அதிகாரமளிக்கப்பட்டுள்ள எவையேனும் வளவுகள் கொள்ளப்பட வேண்டுமோ அல்லவோ என்னும் பிரச்சினை வங்கியினுற்றீர்மானிக்கப்படுதல் வேண்டும் ; வங்கியின் அத்தகைய தீர்மான மொவ்வொன்றும் இறுதியானதும் முடிவானதுமாகவிருக்க வேண்டியதுடன் அதைப் பற்றிய பிரச்சினை நீதிமன்றமெதிலாவது எழுப்பப்படுதலுமாகாது

(7) எவையேனும் வளவுகள் இவ்வத்தியாயத்தின் நோக்கங்களுக்காகக் கொள்ளப்படுதல் வேண்டுமென வங்கி தீர்மானித்திருக்குமிடத்து, வங்கி—

(அ) அத்தகைய தீர்மானத்தைப் பற்றி அவ்வளவுகளின் சொந்தக்காரனுக்கு அறிவித்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) அத்தகைய வளவுகள் சம்பந்தமான விதிக்கப்பட்ட விபரங்களைக் காட்டியும் வளவுகள் இவ்வத்தியாயத்தின்கீழ் கொள்ளப்படக்கூடுமெனக் கூறியும் அறிவித்தலொன்று பதிவு செய்யப்படுவதற்காக சரியான காணிகள் பதிவாளரிடம் ஒப்படைக்கப்பட அல்லது அனுப்பிவைக்கப்பட ஏற்பாடு செய்தல் வேண்டும்.

(ஆ) என்னும் பந்தியின்கீழான அறிவித்தலொவ்வொன்றும், காணியைப் பாதிக்கும் அல்லது அது சம்பந்தமான சாதனமொன்றைப் பதிவு செய்வதற்குப் பத்திரங்களைப் பதிவு செய்தற் கட்டளைச் சட்டத்திலேற்பாடு செய்யப்பட்டுள்ளவிதமாக அக்காணிகள் பதிவாளராற் பதிவு செய்யப்பட வேண்டியதுடன், அத்தகைய அறிவித்தலில் அவற்றின் விதிக்கப்பட்ட விபரங்கள் காட்டப்பட்டுள்ள வளவுகளைப் பாதிக்கும் அல்லது அவை சம்பந்தமான சாதனமொன்ருக அத்தகைய நோக்கங்களுக்குக் கருதப்படுதலும் வேண்டும்.

70இ. (1) எவையேனும் வளவுகள் இவ்வத்தியாயத்தின் நோக்கங்களுக்காகக் கொள்ளப்படுதல் வேண்டுமென வங்கி தீர்மானித்திருக்குமிடத்து, அத்தகைய தீர்மானம் அமைச்சருக்கு அறிவிக்கப்படச் சபையின் தலைவர் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

(2) எவையேனும் வளவுகள் சம்பந்தமான வங்கியின் தீர்மானம் அறிவிக்கப்பட்டதன்மேல், அமைச்சர், கசெற்றிற் பிரசுரிக்கப்படும் (இதன்பின் இவ்வத்தியாயத்தில் '' உரித்தாக்கற் கட்டளை '' யொன்றெனக் குறிப்பிடப்படும்) கட்டளை மூலம், அத்தகைய தீர்மானத்துடன் தொடர்பான வளவுகளை, அக்கட்டளையிற் காட்டப்பட வேண்டிய அத்தகைய தேதியிலிருந்து, வங்கிக்கு உரித்தாக்கலாம்.

(3) எவையேனும் வளவுகள் சம்பந்தமாக (2)ம் உட்பிரிவின்கீழான உரித்தாக்கற் கட்டளையொன்று கசெற்றிற் பிரசிரிக்கப்படுமிடத்து, அத்தகைய வளவுகள், அவ்வுட்பிரிவின்கீழான கட்டளையிற் காட்டப்பட்டுள்ள தேதியிலிருந்து, பாராபந்தங்களெல்லாவற்றிலுமிருந்து விடுபட்டு வங்கிக்கு முற்ருக உரித்தாதல் வேண்டும்.

(4) சபையின் தலைவரினுல் அதற்கென விசேடமாக அல்லது பொதுவாக அதிகாரமளிக்கப்பட்ட எவரும் உரித்தாக்கற் கட்டளையொன்றின் மூலம் வங்கிக்கு உரித்தாக்கப்பட்ட வளவுகள் எவற்றையும் ஆட்சியிலெடுக்கலாம்.

(5) உரித்தாக்கற் கட்டளையொன்றின் மூலம் வங்கிக்கு உரித்தாக்கப்பட்ட வளவுகளெவற்றையும் ஆட்சியிலெடுப்பதற்கு(4)ஆம் உட்பரிவின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட ஆள், அவ்வளவுகளில் இருப்பாட்சிபண் ணும் அல்லது ஆட்சிபண் ணும் ஆளுக்குக் கொடுபடும் அல்லது அவ்வளவுகளில் அல்லது அவற்றுக்கு அண்மையிலுள்ள துலாம்பரமான ஓர் இடத்தில் வெளிக்காட்டப்படும் அறிவித்தல் மூலம்—

(அ) அவ்வளவுகளை வங்கிக்காகவும் அதன் சார்பாகவும் அவ்வறிவித்தலிற் காட்டப்படவேண் டிய அத்தகைய தேதியிலும், அத்தகைய நேரத்திலும், இடத்திலும் ஆட்சியிலெடுக்க அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் உத்தேசிக்கிருர் என்பதை அறிவித்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அக்கறையுள்ள எவரையும் அல்லது அவருடைய அதிகாரமளிக்கப்பட்ட முகவரை அவ்விதம் காட்டப்பட்ட தேதியிலும், நேரத்திலும், இடத்திலும், சமுகமாயிருக்குமாறும், அவ்வளவுகளை வங்கிக்காகவும் அதன் சார்பாகவும் ஆட்சியிலெடுப்பதற்கு அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு அனுமதியளித்து உதவுமாறும் வேண்டிக் கொள்ளுதல் வேண்டும்.

(6) எவரேனுமொருவருக்கு (5)ஆம் உட்பிரிவின்கீழ் கொடுபடும்படி வேண்டப்பட்ட அறிவித்தலெதுவும் பதிவுசெய்யப்பட்ட கடித மூலம் தபாலில் அவருக்கு அனுப்பப்பட்டால், அத்தகைய அறிவித்தல் கொடுபட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(7) (அ) ஐந்தாமுட்பிரிவின்கீழ் அவருக்குக் கொடுபட்ட அறிவித்தலெதாவதன் தேவையெதனையாவது மீறும்; அல்லது

(ஆ) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் எவையேனும் வளவுகளை வங்கிக்காகவும் அதன் சார்பாகவும் ஆட்சியிலெடுப்பதிலிருந்து அல்லது ஆட்சியிலெடுப்பதில் வேறெவரையாவது—

(1) தடுக்கும், தடைசெய்யும் அல்லது எதிர்க்கும், அல்லது

(2) தடுப்பதற்கு, தடைசெய்வதற்கு அல்லது எதிர்ப்பதற்கு எவரையாவது வெளிப்படையாக அல்லது மறைமுகமாக ஏற்படுத்தும்

ஒவ்வொருவரும் இவ்வத்தியாயத்தின்கீழான ஒரு தவறைப் புரிந்தவராகி, நீதவானொருவர் முன்னிலையிற் சுருக்கமுறையில் விளங்கப்பட்டபின் குற்றவாளியெனக் காணப்பட்டதன்மேல் ஓர் ஆண்டிற்கு மேற்படாது இருவகை மறியலிலொன்றிருக்க அல்லது ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத அபராதமொன்றிருக்க அல்லது அத்தகைய மறியல் அபராதம் ஆகிய இரண்டுக்கும் ஆளாவார்.

70ஈ. (1) உரித்தாக்கற் கட்டளையொன்றின் பயனுக எவையேனும் வளவுகள் வங்கிக்கு உரித்தாக்கப்பட்டிருப்பினும், கசெற்றிற் பிரசுரிக்கப்படும் (இதன்பின் இப்பிரிவினில் ''உரித்துக் கைவிடுதற் கட்டளை'' எனக் குறிப்பிடப்படும்) பிந்திய ஒரு கட்டளை மூலம் அமைச்சர் அவ்வுரித்தாக்கற் கட்டளையை எந்த நேரத்திலும் நீக்கஞ் செய்யலாம்.

(2) எவையேனும் வளவுகள் சம்பந்தமான உரித்தாக்கற் கட்டளையொன்று உரித்துக் கைவிடுதற் கட்டளையொன்றின் மூலம் நீக்கஞ் செய்யப்படும் எந்தச் சந்தர்ப்பத்திலும் பின்வரும் ஏற்பாடுகள் ஏற்புடையனவாகும் :—

(அ) அவ்வுரித்தாக்கற் கட்டளையின் பயனுக அத்தகைய வளவுகள் வங்கிக்கு எப்போதாவது உரித்தாக்கப்பட்டிருந்தனவாகக் கருதப்படுதலாகாது; அத்தகைய வளவுகளில் அல்லது அவற்றின் மீதுள்ள உரிமை, உரித்து அல்லது சோந்தை ஏதாவது பற்றிய எந்தப் பிரச்சினையும் அதற்கிணங்கத் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) அவ்வுரித்தாக்கற் கட்டளை நீக்கஞ் செய்யப்படமுன், அத்தகைய வளவுகள் சம்பந்தமாகக் கொடுபடற்பாலதான நட்ட ஈட்டுக்கு இவ்வத்தியாயத்தின்கீழுள்ள எல்லாக் கோரிக்கைகளும், அக்கோரிக்கைகள் சம்பந்தமாக இவ்வத்தியாயத்தின்கீழ் எடுபட்ட எல்லா நடவடிக்கைகளும் ஒழிந்தற்றுப் போனவையாகக் கருதப்படுதல் வேண்டும்;

(இ) அவ்வுரித்தாக்கற் கட்டளை நீக்கஞ் செய்யப்பட்டதற்கு முன் அத்தகைய வளவுகள் வங்கிக்கு உரித்தாக்கப்பட்டிருந்த காலஞ் சம்பந்தமாக நட்ட ஈடு ஏதாவது இவ்வத்தியாயத்தின்கீழ் கொடுபடற்பாலதாகாது.

(3) இக்கட்டளைச் சட்டத்தின் வேறெந்த ஏற்பாட்டிலாவது அல்லது எழுத்திலுள்ள வேறெந்தச் சட்டத்திலாவது எது எவ்விதமிருப்பினும் இப் பிரிவின் முற்போந்த ஏற்பாடுகள் பயனுடையனவாதல் மேண்டும்.

70உ. எவையேனும் வளவுகள் வங்கிக்கு உரித்தாக்கப்படுமிடத்து, சபையின் தலைவர், கசெற்றிற் பிரசுரிக்கப்படும் அறிவித்தல் மூலமும் அவராற்றீர்மானிக்கப்படும் வேறு விதத்திலும், அவ்வறிவித்தலிற் காட்டப்பட்டுள்ள தேதியிலிருந்து கணிக்கப்பட்ட ஒரு மாத காலத்துக்குள்ளாக, அவ்வளவுகள் சம்பந்தமாக இவ்வத்தியாயத்தின்கீழ் கொடுபடற்பாலதான நட்ட ஈடு முழுவதற்கும் அல்லது அதன் எந்தப் பாகத்துக்காவது எழுத்திற் கோரிக்கையொன்றைச் செய்யுமாறும், அந்தக் கோரிக்கையில்—

(அ) அவருடைய பெயரையும் முகவரியையும்;

(ஆ) அத்தகைய வளவுகளில் அவருக்குள்ள சோந்தையின் தன்மையையும்;

(இ) அவருடைய கோரிக்கையின் விபரங்களையும்;

(ஈ) அத்தகைய நட்ட ஈட்டில் என்ன அளவு அவராற் கோரப்படுகிறது என்பதையுங்

குறிப்பிட்டுக் காட்டுமாறும், அத்தகைய வளவுகள் அவ்விதம் உரித்தாக்கப்பட்ட தேதிக்கு உடனடியாகமுன் அத்தகைய வளவுகளில் அக்கறை கொண்டிருந்த ஒவ்வொருவரையும் பணித்தல் வேண்டும்.

70ஊ. வங்கிக்கு உரித்தாக்கப்பட்ட எவையேனும் வளவுகள் சம்பந்தமாக இவ்வத்தியாயத்தின்கீழ் கொடுபடற்பாலதான நட்ட ஈட்டுக்கு 70உ என்னும் பிரிவின்கீழ் செய்யப்பட்ட கோரிக்கையெதாவது கிடைக்கப்பெற்றதன்மேல், பின்வரும் பத்திரங்கள் அக்கோரிக்கைக்காரனுக்குப் பதிவுசெய்யப்பட்ட கடிதமூலம் தபாலில் அனுப்பிவைக்கப்படச் சபையின் தலைவர் ஏற்பாடு செய்தல் வேண்டும் :—

(அ) இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனுமொரு விதியின்கீழ் வங்கியினுல் அல்லது அதன் அதிகாரத்தின்கீழ் தயாரிக்கப்பட்ட முன்னே சொல்லப்பட்ட வளவுகளின் நிலைமைபற்றிய அறிக்கையெதாவதன் படி-யொன்று அக்கோரிக்கைக்காரனுக்கு ஏற்கனவே சேர்ப்பிக்கப்பட்டிராவிடின், அவ்வறிக்கையின் படியொன்று;

(ஆ) வங்கியினுல் அல்லது அதன் அதிகாரத்தின்கீழ் தயாரிகப்பட்ட முன்னே சொல்லப்பட்ட வளவுகள் சம்பந்தமாக இவ்வத்தியாயத்தின்கீழ் கொடுபடற்பாலதான நட்ட ஈட்டின் மதிப்பீடெதாவதன் படியொன்று;

(இ) அவ்வறிவித்தலிற் காட்டப்பட்டுள்ள காலத்தினுள்—

(1) முற்போந்த (அ) என்னும் பந்தியிற் குறிப்பிடப்பட்டுள்ள அறிக்கையுடனும் முற்போந்த (ஆ) என்னும் பந்தியிற் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பீட்டுடனும்

அவர் உடன்பகிருரோ அல்லவோ என்பதைக் காட்டி எழுத்திலுள்ள கூற்றென்றையும், அவர் அவ்விதம் உடன்படாவிடில், அத்தகைய அறிக்கைக்கும் மதிப் பீட்டுக்கும் எதிராக அவருக்குள்ள எவையேனும் ஆட் சேபங்களையும், அத்தகைய ஆட்சேபங்களுக்கான காரணங்களையும் வங்கிக்குச் சமர்ப்பிக்குமாறும்,

(2) அத்தகைய ஆட்சேபங்களுக்கு ஆதாரமாக அவரால் நம்பப்படும் பத்திரங்களெல்லாவற்றையும், விசேட மாக முன்னே சொல்லப்பட்ட வளவுகளின் நிலைமை பற்றிய பத்திரங்களை வங்கிக்குக் காண்பிக்குமாறும் அக்கோரிக்கைக்காரரை வேண்டிக்கொள்ளும் அறி வித்தலொன்று.

70எ. (1) இவ்வத்தியாயத்தின்கீழ் வங்கிக்கு உரித்தாக்கப் பட்ட ஏதேனும் ஆதனஞ் சம்பந்தமாகக் கொடுபடற்பாலதான நட்ட ஈட்டின் தொகையைத் தீர்மானிப்பதற்குச் சபையின் தலை வர் நட்ட ஈட்டு நியாய சபைக்கு ஆற்றுப்படுத்த வேண்டியதுடன், அத்தகைய நட்ட ஈட்டுக்குச் செய்யப்பட்ட கோரிக்கைக ளெல்லாவற்றையும், அவர்களுடைய கோரிக்கைகளுக்கு ஆதார மாகக் கோரிக்கைக்காரர்களாற் சமர்ப்பிக்கப்பட்ட எல்லாப் பத்திரங்களும், கோரிக்கைக்காரர்களுக்கு வங்கியினுல் அவற்றின் படிகள் சேர்ப்பிக்கப்பட்ட அல்லது அனுப்பிவைக்கப்பட்ட எல் லாப் பத்திரங்களும் ஆகியவற்றுடன் சேர்த்து அந்நியாய சபைக்கு அனுப்பிவைத்தலும் வேண்டும்.

(2) நட்டஈட்டு நியாய சபைக்கு (1)ஆம் உட்பரிவின்கீழ் செய்யப்படும் ஆற்றுப்படுத்தலொன்று இதன்பின் இவ்வத்தியா யத்தினில் ''நட்டஈடு பற்றிய தீர்ப்பொன்றுக்கான ஆற்றுப்படுத் தல்'' ஒன்று எனக் குறிப்பிடப்படுகிறது.

70ஏ. வங்கிக்கு உரித்தாக்கப்பட்ட எவையேனும், வளவுகள் சம்பந்தமாக இவ்வத்தியாயத்தின்கீழ் கொடுபட வேண்டிய நட்டஈட்டின் தொகையானது, அவ்வளவுகள் அவற்றின் சொந் தக்காரனுல் உண்மையான என்ன தொகைக்குக் கொள்வனை செய்யப்பட்டனவோ அல்லது உண்மையான என்ன தொகைக்கு அவருக்கு மாற்றப்பட்டனவோ அத்தொகையும், நட்டஈட்டு நியாய சபையினுற்றீர்மானிக்கப்பட்டிருக்கக் கூடியதான, அதற் குரிய வட்டியும், அத்தகைய வளவுகள் சம்பந்தமாக உரித்தாக்கற் கட்டளை பிரசுரிக்கப்பட முன்னதாக அவ்வளவுகளில் அக்கறை யுடைய எவராலாவது அவ்வளவுகளுக்குச் செய்யப்பட்ட எவை யேனும் பிந்திய கூட்டுதல்களின் அல்லது திருத்தங்களின் நியா யமான பெறுமதிக்குச் சமமான மேலதிகமான ஒரு தொகையு மோ அல்லது அவ்வளவுகளின் சந்தைப் பெறுமதியோ, எது குறை வானதோ அதுவாகும்.

70ஐ. இவ்வத்தியாயத்தின்கீழ் வங்கிக்கு, உரித்தாக்கப்பட்ட எவையேனும் வளவுகள் சம்பந்தமாகக் கொடுபடற்பாலதான நட்டஈடானது அவ்வளவுகள் எத்தேதியில் அவ்விதம் உரித் தாக்கப்பட்டனவோ அத்தேதியிலிருந்து போகுமதியாக ஒன்று திரள்வதாகக் கருதப்படுதல் வேண்டும்.

70ஒ. (1) இவ்வத்தியாயத்தின்கீழ் வங்கிக்கு உரித்தாக்கப்பட்ட எவையேனும் வளவுகள், சம்பந்தமாக எவருக்காவது கொடுபட வேண்டிய நட்டஈட்டின் தொகையானது, அத்தகைய வளவு கள் அவ்விதம் உரித்தாக்கப்பட்ட தேதியில் அவ்வளவுகளில் அவருக்கிருந்த அக்கறையின் வீதாசாரப்படியானதாதல் வேண் டும்.

(2) எவையேனும் வளவுகள் இவ்வத்தியாயத்தின்கீழ் வங்கிக்கு உரித்தாக்கப்பட்ட காலத்தில் அவ்வளவுகள் ஈடு அல்லது குத்தகையொன்றுக்கு அமைவாகவிருக்குமிடத்து, அந்த ஈட்டை அல்லது குத்தகையைப் பெற்றவருக்குள்ள உரிமைகள், 70இ என்னும் பிரிவின் (3)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வித மிருப்பினும், அவ்வளவுகள் சம்பந்தமான நட்ட ஈடாக இவ் வத்தியாயத்தின்கீழ் கொடுபடும் ஏதேனுந் தொகை வரைக்குமே மட்டுப்படுத்தப்படல் வேண்டும்.

70ஓ. இவ்வத்தியாயத்தின்கீழ் கொடுபடற்பாலதான நட்ட ஈடு எதற்கும், அத்தகைய நட்டஈடு போகுமதியாக ஒன்று திரளுந் தேதியிலிருந்து கொடுபடுந் தேதிவரையில், அமைச்ச ரின் ஒருப்பாட்டுடன் வங்கியினுற்றீர்மானிக்கப்படும், வீதப்படி வட்டி கொடுபடுதல் வேண்டும்.

70ஔ. இவ்வத்தியாயத்தின்கீழ் வங்கிக்கு உரித்தாக்கப் பட்ட எவையேனும் வளவுகள் சம்பந்தமாக நட்டஈடு ஏதாவது, இவ்வத்தியாயத்தின்கீழ் நட்டஈட்டு நியாய சபை யினுற் செய்யப்படும் (இதன்பின் இவ்வத்தியாயத்தினில் ''நட்டஈட்டுக்கான தீர்ப்பு'' ஒன்று எனக் குறிப்பிடப்படும்) தீர்ப்பொன்றுக்கிணங்க அவர் அத்தகைய நட்டஈட்டுக்கு உரிமை யுடையவராகவிருந்தாலன்றி, இவ்வத்தியாயத்தின்கீழ் எவருக் காவது கொடுபடுதலாகாது.

70க. வங்கிக்கு உரித்தாக்கப்பட்ட வளவுகள் சம்பந்தமாக இவ்வத்தியாயத்தின்கீழ் எவருக்காவது கொடுபடற்பாலதான நட்டஈடெதாவது கொடுபட முன்வரப்படும்போது அது அவ ரால் ஏற்றுக்கொள்ளப்படாதவிடத்து, அல்லது அத்தகையவர் இறந்துபோனவிடத்து, அல்லது கவனமாகத் தேடியபின் காணப் படாதவிடத்து, அல்லது அவரைத் தெரியாதவிடத்து, அதற் குரிமையுடைய ஆளினுல் அல்லது ஆட்களால் எடுத்துக் கொள்ளப்படுவதற்காக, அந்நட்ட ஈட்டின், தொகை ஏழுநூற் றைம்பது ரூபாவுக்கு மேற்பட்டதற்கு அல்லது மேற்படாத தற்குத் தக்கபடி, அவ்வளவுகள் இருக்குமிடத்தில் நியாயாதிக்க முள்ள மாவட்ட நீதிமன்றத்தில் அல்லது விண்ணப்ப நீதிமன் றத்தில் அது கொடுபடுதல் வேண்டும்.

70ங. (1) இவ்வத்தியாயத்தின் நோக்கங்களுக்காக மகா தேசாதிபதியினுல் நியமனஞ் செய்யப்பட்டவர்களும் அவர்களில் ஐவராவது நீதிநிருவாக அல்லது சட்ட அனுபவமுடையவர் களாகவிருக்க வேண்டியவர்களுமான பத்து உறுப்பினர்களடங் கிய நட்டஈட்டு நியாய சபையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஒருவர் பாராளுமன்ற மூதவையுறுப்பினரொருவராக, பாராளுமன்ற உறுப்பினரொருவராக, அல்லது சபையின் உறுப் பினரொருவராக அல்லது வங்கியின் அலுவலரொருவராக அல்லது வேலைக்கமர்ந்திருக்குமொருவராகவிருந்தால், நட்ட ஈட்டு நியாய சபையின் உறுப்பினரொருவராக நியமனஞ் செய்யப்படுவதற்கு அல்லது தொடர்ந்துமிருப்பதற்கு அவர் தகுதியற்றவராதல் வேண்டும்.

(3) நட்டஈட்டு நியாய சபையின் தலைவராகவிருப்பதற்கு நீதி பரிபாலன அல்லது சட்ட அனுபவமுள்ள அந்நியாய சபையின் உறுப்பினரொருவரும், உபதலைவராகவிருப்பதற்கு அதேபோன்ற அனுபவமுள்ள இன்னெரு உறுப்பினரும், அமைச்சரின் விதப்பு ரையின் பேரில் மகாதேசாதிபதியால் நியமனஞ் செய்யப்படுதல் வேண்டும்.

(4) நட்டஈட்டு நியாய சபையினங்கத்தவரொவ்வொருவரும், அதற்குமுன் அவர் அப்பதவியிலிருந்து விலகினலன்றி அல்லது மகாதேசாதிபதியினல் அதிலிருந்து நீக்கப்பட்டாலன்றி, மூன்று வருடங்களைக் கொண்ட ஒரு காலத்துக்குப் பதவி வகித்தல் வேண்டும். காலங்கழிவதனல் பதவியிலிருந்து விலகும் நியாய சபையுறுப்பினரெவரும் திரும்பவும் நியமனஞ் செய்யப்படுவதற்குத் தகுதியுடையவராதல் வேண்டும்.

(5) (இவ்வத்தியாயத்தில் இதன்பின் ''செயலாளர்'' எனக் குறிப்பிடப்படும்) செயலாளரொருவரும் நியாய சபையின் வேலையைச் செய்வதற்கு அவசியமான அலுவலர்களும் சேவையாளர்களும் நட்டஈட்டு நியாய சபைக்கு நியமனஞ் செய்யப்படுதல் வேண் டும்.

(6) நட்டஈட்டு நியாய சபையின் உறுப்பினர்களுக்கும், அலுவலர்களுக்கும், சேவையாளர்களுக்கும் சபையினல் தீர்மானிக்கப் படக்கூடிய வீதங்களில் வேதனங் கொடுபடுதல் வேண்டும்.

70ச. (1) நட்டஈடு பற்றிய தீர்ப்புக்களுக்கான ஆற்றுப்படுத்தல்களை ஆலோசனை செய்து தீர்மானிப்பதற்காக, நட்டஈட்டு நியாய சபையின் தலைவரின் அல்லது அவரில்லாதபோது உபதலைவரின் பணிப்பின்கீழ் செயலாளர் நியாய சபையின் கூட்டங்களைக் கூட்டுதல் வேண்டும்.

(2) நட்டஈட்டு நியாய சபையின் தலைவரும் அல்லது உபதலைவரும் ஏனைய நான்கு உறுப்பினர்களும் நியாய சபையின் கூட்டமொன்றுக்கு அழைக்கப்படுதல் வேண்டும். அத்தகைய ஏனைய உறுப்பினர்கள் செயலாளரினல் திருவுளச் சீட்டின் மூலம் தெரிவு செய்யப்படுதல் வேண்டும். நியாய சபையின் கூட்டமொன்றுக்கான கூட்ட நடப்பெண் மூன்று உறுப்பினர்களாதல் வேண்டும்.

(3) நட்டஈடு பற்றிய தீர்ப்புகளுக்கான வெவ்வேறு ஆற்றுப்படுத்தல்களை ஆலோசனை செய்து தீர்மானிப்பதற்காக நட்டஈட்டு நியாய சபையின் புறம்பான இரு கூட்டங்கள் ஒரே நேரத்திற் கூட்டப்பட்டு நடத்தப்படலாம்.

(4) நட்டஈட்டு நியாய சபையின் கூட்டமொன்றுக்குத் தலைவர் அல்லது உபதலைவர் அழைக்கப்பட்டிருக்குமிடத்து, சந்தர்ப்பத்துக்கேற்ப, தலைவர் அல்லது உபதலைவர் அக்கூட்டத்திற் றலைமை வகித்தல் வேண்டும்; தலைவர் அல்லது உபதலைவர் சமுகமாயிராதவிடத்து, அக்கூட்டத்துக்கு அழைக்கப்பட்டும் அதிற் சமுகமாயிருக்கும் நியாய சபையினுறுப்பினர்கள் அக்கூட்டத்துக்கான தலைவரொருவரைத் தமக்குள் தெரிவு செய்தல் வேண்டும்.

(5) நட்டஈடு பற்றிய தீர்ப்பொன்றுக்கான ஆற்றுப்படுத்தலொன்றின் விடயமாகவுள்ள காரியமெதாவதில் அக்கறை கொண்டுள்ள அல்லது அவ்விடயஞ் சம்பந்தமாக அதிலக்கறை கொண்டுள்ள வேறெவராலாயினும் அல்லது அவர் சார்பாக நியாயவாதி அல்லது வழக்கறிஞரொருவரென்ற முறையில் அல்லது வேறேதாயினுமொரு முறையில் கலந்தாலோசிக்கப்பட்ட நட்டஈட்டு நியாய சபையினுறுப்பினரொருவர் அத்தகைய ஆற்றுப்படுத்தலின்மீதான நியாய சபையின் கூட்டமொன்றில் பங்குபற்றுதலாகாது.

(6) நட்டஈட்டு நியாய சபையின் கூட்டமொன்று காலத்துக்குக் காலம் பின்போடப்படலாம் அல்லது தவணை போடப்படலாம்.

70ஞ. (1) நட்டஈடு பற்றிய தீர்ப்பொன்றுக்கான ஆற்றுப் படுத்தலொவ்வொன்றும் நட்டஈட்டு நியாய சபையின் கூட்ட மொன்றில் ஆலோசனை செய்யப்பட்டுத் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(2) நட்டஈடு பற்றிய தீர்ப்பொன்றுக்கான ஆற்றுப்படுத்த லொவ்வொன்றும் நட்டஈட்டு நியாய சபையினால் ஆலோசனை செய்யப்பட்டுத் தீர்மானிக்கப்படுவதற்குச் செயலாளர் ஒரு தேதியையும், நேரத்தையும், இடத்தையும் குறித்தல் வேண்டும்.

(3) நட்டஈடு பற்றிய தீர்ப்பொன்றுக்கான ஆற்றுப்படுத்த லொவ்வொன்றும் சம்பந்தமாக, செயலாளர், நட்டஈட்டு நியாய சபையின்முன் எடுபடும் அவ்வாற்றுப்படுத்தல் சம்பந்தமான நடவடிக்கைகளெல்லாவற்றையும் பற்றிய பதிவேடொன்றை வைத்திருத்தல் வேண்டும்.

70ட. (1) நட்டஈட்டு நியாய சபையின் தலைவரும் அல்லது உபதலைவரும், நியாய சபையின் கூட்டமெதிலாவது தலைவர் அல்லது உபதலைவர் தலைமை வகிக்காவிடின் அக்கூட்டத்தின் தலைவரும், நட்டஈடு பற்றிய தீர்ப்பொன்றுக்கான ஆற்றுப் படுத்தலெதனையாவது ஆலோசனை செய்து தீர்மானிப்பதன் நோக்கங்களுக்காக—

(அ) சாட்சிகளுக்கு அழைப்புக் கட்டளை விடுத்து அவர்களைச் சமுகமாயிருக்குமாறு பலவந்தப்படுத்துவதற்கும்;

(ஆ) பத்திரங்களை வெளியே காண்பிக்குமாறு பலவந்தப் படுத்துவதற்கும்;

(இ) சாட்சிகளை ஏதேனும் சத்தியப்பிரமாணம் அல்லது உறுதிப்பிரமாணம் செய்விப்பதற்கும்.

மாவட்ட நீதிமன்றமொன்றுக்குள்ள தத்துவங்களெல்லாவற் றையும் உடையவர்களாதல் வேண்டும்.

(2) நட்டஈட்டு நியாய சபையின் கூட்டமொன்றின்முன் எந்தக் காரியத்தைப் பற்றியாவது சான்று அளிக்கும் ஒவ் வொருவரும் அத்தகைய காரியத்தில் உண்மையைக் கூறு வதற்குக் கடப்பாடுடையராதல் வேண்டும்.

(3) நட்டஈட்டு நியாய சபையின் கூட்டமொன்றில் சாட்சி யொருவராகச் சமுகமாயிருக்கும் ஒவ்வொருவருக்கும், பிர யாணச் செலவுகளாகவும் ஏனைய செலவுகளாகவும், அக்கூட்டத் தின் தலைவரால் தீர்மானிக்கப்படக்கூடிய தொகை கொடுபடுதல் வேண்டும்.

70ண. (1) நட்டஈட்டு நியாய சபையின் கூட்டமொன்றில் ஆலோசனை செய்யப்பட்ட எந்தக் காரியத்திலாவது அந்தக் கூட்டத்தில் செய்யப்பட்ட தீர்மானமானது அக்காரியத்தில் நியாய சபையினால் செய்யப்பட்ட தீர்மானமாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) ஏதேனுமொரு காரியத்தை ஆலோசனை செய்யும் நட்ட ஈட்டு நியாய சபையின் உறுப்பினர்கள் அக்காரியத்தைத் தீர்மா னித்தல் சம்பந்தமாக உடன்படாதவிடத்து, அவர்களில் கூடுதலான பகுதியினரின் தீர்மானமே அக்காரியத்தில் நியாய சபையின் தீர்மானமாகக் கருதப்படுதல் வேண்டும்; உறுப்பினர்கள் தமது

கருத்தில் சமமாகப் பிரிந்திருக்குமிடத்து, அக்காரியம் எந்தக் கூட்டத்தினால் ஆலோசனை செய்யப்படுகிறதோ அந்தக் கூட்டத்தின் தலைவரினாலாதரிக்கப்பட்ட தீர்மானமே அக்காரியத்தில் நியாய சபையின் தீர்மானமாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) நட்டஈட்டு நியாய சபையின் தீர்மானமொவ்வொன்றும் அதற்கான காரணங்களையடக்கியிருத்தல் வேண்டும்.

70த. நடவடிக்கைமுறை சம்பந்தமாக இவ்வத்தியாயத்திலடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய, நட்டஈட்டு நியாய சபையின் கூட்டங்களிற் கவனிக்கப்படவேண்டிய நடவடிக்கை முறையை அந்நியாய சபை ஒழுங்குபடுத்தலாம்.

70ந. நட்டஈட்டு பற்றிய தீர்ப்பொன்றுக்கான ஆற்றுப்படுத்தலொன்று நட்டஈட்டு நியாய சபைக்குச் செய்யப்படுமிடத்து, அந்நியாய சபை, தீர்ப்பொன்றைச் செய்யுமுன், வங்கிக்கும் நட்டஈட்டுக்கான கோரிக்கையொன்றைச் செய்த ஒவ்வொருவருக்கும், நேரே அல்லது அதன் சார்பாக அதிகாரமளிக்கப்பட்ட முகவரொருவர் மூலம் விசாரிக்கப்படச் சந்தர்ப்பமொன்றையளித்தல் வேண்டும்.

70ப. (1) இவ்வத்தியாயத்தின்கீழ் வங்கிக்கு உரித்தாக்கப்பட்ட எவையேனும் வளவுகளின் நிலைமை சம்பந்தமாக வங்கியினால் அல்லது அதன் அதிகாரத்தின்கீழ் செய்யப்பட்ட அறிக்கையெதாவதன் பிரதியொன்று அவ்வளவுகள் சம்பந்தமாக நட்டஈடு கோருமெவருக்காவது சேர்ப்பிக்கப்படுமிடத்து, அப்போது அவ்வறிக்கையானது, அக்கோரிக்கைக்காரன் சம்பந்தப்பட்ட அளவுக்கு, நட்டஈட்டு நியாய சபையின் முன்னெடுபடும் அக்கோரிக்கைக்காரனின் கோரிக்கை சம்பந்தமான நடவடிக்கைகளெவற்றிலும், அதற்கு மாறானது நிரூபிக்கப்படும் வரையில் அதன்கண்ணே கூறப்பட்டுள்ள விடயங்களைப் பற்றிய முதற்றோற்றச் சான்றாதல் வேண்டும்.

(2) எவையேனும் வளவுகள் சம்பந்தமான நட்டஈடு பற்றிய வங்கியின் மதிப்பீட்டின் படியொன்று அத்தகைய நட்டஈட்டுக்கான கோரிக்கைக்காரனெவருக்காவது சேர்ப்பிக்கப்படுமிடத்து, அம்மதிப்பீடானது, நட்டஈட்டு நியாய சபையின் முன்னெடுபடும் நட்டஈட்டுக்கான கோரிக்கையொன்று சம்பந்தமாக நடவடிக்கைகளெவற்றிலும், இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ், அதன்கண்ணே கூறப்பட்டுள்ள விடயங்களைப் பற்றிய முதற்றோற்றச் சான்றாகவிருக்குமிடத்து, அத்தகைய அறிக்கைக்கு அல்லது மதிப்பீட்டுக்கு உள்ள இட்சேபமெதற்காவது ஆதாரமாகவுள்ள பத்திரமெதாவது இவ்வத்தியாயத்தினால் அல்லது அதன்கீழ் வேண்டப்பட்டுள்ளனவாறு வங்கிக்குக் காண்பிக்கப்பட்டிருந்தாலன்றி, அப்பத்திரத்தை அந்நடவடிக்கைகளிற் காண்பிப்பதற்கு அக்கோரிக்கைக்காரன் உரிமையுடையவராதலாகாது.

70ம. (1) வங்கிக்கு உரித்தாக்கப்பட்ட எவையேனும் வளவுகள் சம்பந்தமாக நட்டஈடு பற்றிய தீர்ப்பொன்றுக்கான ஆற்றுப்படுத்தலொன்று நட்டஈட்டு நியாய சபைக்குச் செய்யப்படுமிடத்து, நியாய சபை, அந்நோக்கத்துக்கு அவசியமான அத்தகைய காரியங்களெல்லாவற்றையும் ஆலோசனை செய்த பின்னரும், அத்தகைய சாட்சிகளெல்லாவற்றையும் விசாரித்த பின்னரும், 70த, 70ப ஆகிய பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கிணங்கிய பின்னரும், (2)ஆம் உட்பிரிவினில் வேறுவிதமாக ஏற்பாடு செய்யப்பட்டிருப்பது போலல்லாது—

(அ) நட்டஈட்டுக்கான கோரிக்கையொன்றைச் செய்திருக்கு மொவ்வோர் ஆளும் நட்டஈட்டுக்கு உரிமையுடைய ஒரு ஆளோ அல்லவோ என்பதையும், அவ்விதமானல், என்ன முறையில் அவர் அவ்விதமுரிமையுடையவராகிரு ரென்பதையும்;

(ஆ) இவ்வத்தியாயத்தினேற்பாடுகளுக்கிணங்க அத்தகைய வளவுகள் சம்பந்தமாகக் கொடுபடற்பாலதான நட்ட ஈட்டின் தொகையையும்;

(இ) நட்டஈட்டுக்கு உரிமையுடைய ஆட்களுக்கிடையே நட்ட ஈடு பங்கிடப்படுவதையும் தீர்மானித்துத் தீர்ப்பொன்றைக் கூறுதல் வேண்டும்;

ஆயினும், அத்தகைய நட்டஈட்டுக்கு உரிமையுடைய ஆட்கள் பற்றி அல்லது அத்தகைய நட்டஈட்டுக்கு உரிமையுடைய ஆட் களுக்கிடையே அத்தகைய நட்டஈடு பங்கிடப்படுவது பற்றிப் பிணக்கொன்றிருக்குமிடத்து, நியாய சபை தீர்ப்பொன்று கூறு வதைப் பின்போட்டு, அவ்வளவுகள், எந்த மாவட்ட நீதி மன்றத்தின் நியாயாதிக்கத்தினுள் இருக்கின்றனவோ அந்த நீதிமன்றத்துக்கு அப்பிணக்கை முடிவு செய்யப்படுவதற்கு ஆற்றுப்படுத்தி, அத்தகைய நீதிமன்றம், அல்லது மேல்முறை யீடொன்று செய்யப்படும் சமயத்தில், உயர்நீதிமன்ற அத்தகைய பிணக்கில் அதன் முடிவைச் செய்தபின், அத்த கைய முடிவுக்கிணங்கத் தீர்ப்பொன்றைக் கூறுதல் வேண்டும்.

(2) மாவட்ட நீதிமன்றத்துக்கு (1)ஆம் உட்பரிவின் கீழ் செய்யப்பட்ட ஆற்றுப்படுத்தலொன்றின் பேரில் அத்தகைய நீதிமன்றத்தின் முடிவைப் பற்றி அதிருப்தியடையுமெவரும் உரிமையியல் வழக்குகளிலுள்ள தீர்வைகளுக்கெதிரான மேன் முறையீடுகளுக்கென உரிமையியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவையிலேற்பாடு செய்யப்பட்டுள்ள காலத்தினுள்ளாகவும் அத்தகைய விதமாகவும் அத்தகைய முடிவுக்கெதிராக உயர் நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யலாம். இவ்வுட்பிரிவின் கீழ் உயர்நீதிமன்றத்துக்குச் செய்யப்படும் மேன்முறையீடெதி லும் அத்தகைய நீதிமன்றஞ் செய்யும் முடிவு இறுதியானதாதல் வேண்டும்.

(3) வங்கிக்கு உரித்தாக்கப்பட்ட எவையேனும் வளவுகள் சம் பந்தமாக நட்டஈட்டுக்கான கோரிக்கை யொன்றை எவராவது செய்யாதவிடத்து, (1)ஆம் உட்பிரிவின் (அ), (இ) ஆகிய பந்திகளிற் காட்டப்பட்டுள்ள காரியங் களை இப்பிரிவின்கீழான தீர்ப்பொன்றில் தீர்மானித்த லும், நட்டஈடு கோருபவர்களுக்குத் தீர்ப்பைப் பற்றி அறிவித்தல் கொடுத்தல் சம்பந்தமான (4)ஆம் உட்பிரி வின் ஏற்பாடுகளுக்கிணங்குதலும் அவசியமானவையாகா.

(4) தீர்ப்புகள்பற்றிய எழுத்திலுள்ள அறிவித்தல் வங்கிக் கும் நட்டஈடு கோருபவர்களுக்கும் கொடுபட நட்டஈட்டு நியாய சபை ஏற்பாடு செய்தல் வெண்டும்.

(5) நட்டஈடு நியாய சபையின் தீர்பொன்று இறுதியானதாக வேண்டியதுடன் அதைப் பற்றி எந்த நீதிமன்றத்தி லாவது எவ்வித பிரச்சினையாவது எழுதப்படலுமாகாது.

70ய. இவ்வத்தியாயத்தின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் அத்தகைய விண்ணப்பத்தைச் செய்வதற்கு உரிமையுள்ள எவ ராலாவது அத்தகைய வளவுகளைக் கொள்வதற்குச் செய்யப்

படும் விண்ணப்பமொன்றின் பயனாக வங்கிக்கு உரித்தாக்கப்படும் எவையேனும் வளவுகள், அத்தகைய வளவுகள் எவருக்கு வாடகைக்கு விடப்படுகின்றனவோ அந்த ஆள் வாடகையாக அரை ஆண்டுக் கொடுப்பனவுகள் ஒரு சிலவற்றைக் கொடுத்த தன்பின் அவற்றின் சொந்தக்காரனாக வருவதற்கு அந்த ஆளுக்கு இயலுமாக்கும் நியதிகளின்பேரில் அத்தகைய ஆளுக்கு, அல்லது அத்தகைய ஆள் இறந்துபோனவிடத்து சீவனோடிருக்கும் வாழ்க்கைத்துணையெவரேனுமிருந்தால் அவருக்கு அல்லது அத்தகைய ஆளின் பிற்சந்ததியினரெவருக்காவது வங்கியினால் வாடகைக்கு விடப்படலாம்.

70ர. இவ்வத்தியாயத்தின்கீழ் அவற்றைக் கொள்வதற்கு வங்கி அதிகாரமளிக்கப்பட்டுள்ள வளவுகளெவற்றையாவது பரிசீலனை, பரிசோதனை அல்லது நில அளவை செய்தலொன்று அவசியமானதென வங்கி கருதுமிடத்து, சபையின் தலைவரினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரும் அவசியமான ஆட்களுடனும், உபகரணங்களுடனும், பொருள்களுடனும், வாகனங்களுடனும், விலங்குகளுடனும் அத்தகைய வளவுகளினுள் நுழைதலும், அவற்றின் நிலமட்டங்களை அளத்தலும், அத்தகைய பரிசீலனையின், சோதனையின் அல்லது நில அளவையின் நோக்கத்துக்கு அவசியமான ஏனைய செயல்களெல்லாவற்றையுஞ் செய்தலும் சட்டமுறையானதாகும்:

ஆனாலவ்விதமிருந்தும், அத்தகைய வளவுகளினுட் உள்நுழைய அல்லது அதன்மீது அத்தகைய செயலைச் செய்வதற்குத் தமக்குள்ள உத்தேசத்தைப் பற்றி ஏழு நாட்களாவது கொண்ட எழுத்திலுள்ள அறிவித்தலை அத்தகைய வளவுகளின் சொந்தக்காரனுக்கு அல்லது அதில் இருப்பாட்சி பண்ணுபவருக்கு அவர் கொடுத்திருந்தாலன்றி, இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளினால் அவருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களைப் பின்பற்றி எவராவது எவ்வளவுகளினுள்ளாவது உள்நுழைதல் அல்லது அவற்றின்மீது எச்செயலையாவது செய்தல் ஆகாது.

70ல. (1) சபையின் தலைவர் அல்லது அத்தகைய தலைவரினாலதற்கென அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனுமொருவர், வங்கிக்கு அல்லது அவ்வறிவித்தலிற் குறிப்பிடப்பட்டிருக்கக் கூடிய அதன் அலுவலருக்கு—

(அ) அந்த ஆள் அவற்றின் சொந்தக்காரனாகவுள்ள அல்லது எந்தக் காலத்திலாவது சொந்தக்காரனாகவிருந்த 70 ஆ என்னும் பிரிவிற் குறிப்பிடப்பட்டுள்ள எவையேனும் வளவுகள் சம்பந்தமான விதிக்கப்பட்ட விபரங்களையடக்கியுள்ள அறிக்கையொன்றை விதிக்கப்பட்ட படிவத்தில்; அல்லது

(ஆ) அந்த ஆளினாற் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையெதிலாவது கூறப்பட்டுள்ள எவையேனும் விபரங்கள் சம்பந்தமாக வங்கிக்குத் தேவைப்படக்கூடிய தகவலை அல்லது விளக்கத்தை; அல்லது

(இ) அந்த ஆளினாற் சமர்ப்பிக்கப்பட்ட கூறப்பட்டுள்ள அறிக்கையெதிலாவது அல்லது தகவலெதிலாவது கூறப்பட்டுள்ள எவையேனும் விபரங்களின் உண்மையையறியும் நோக்கத்துக்கு வங்கிக்குத் தேவைப்படக்கூடிய பத்திர மூலமான அல்லது வேறு சான்றைக்

குறிப்பிடப்பட்ட ஒரு தேதியின்முன் சமர்ப்பிக்குமாறு எழுத்திலுள்ள அறிவித்தல் மூலம் எந்த ஆளையும் பணிக்கலாம்.

(2) 70 ஆ என்னும் பிரிவிற் குறிப்பிடப்பட்ட எவையேனும் வளவுகளின் நிலப்படமொன்றை யெவரேனும் ஆள் வைத்திருக்குமிடத்து, சபையின் தலைவர் அல்லது அத்தகைய தலைவரினாலதற்கென அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனுமொருவர், அவ்வளவுகளின் எல்லைகளினதும் விரிவெல்லைகளினதும் உண்மையை வங்கியறிவதற்காக, அவ்வறிவித்தலிற் குறிப்பிடப்பட்டுள்ள வங்கி அலுவலரிடம் அந்நிலப்படத்தைக் குறிப்பிடப்பட்ட ஒரு தேதியின்முன் காண்பிக்குமாறு எழுத்திலுள்ள அறிவித்தல் மூலம் அந்த ஆளைப் பணிக்கலாம்.

(3) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் எவருக்காவது கொடுபடும்படி வேண்டப்பட்டுள்ள எந்த அறிவித்தலும்—

(அ) பதிவு செய்யப்பட்ட கடிதமூலம் தபாலில் அவருடைய வசிப்பிடத்துக்கு அல்லது வியாபார இடத்துக்கு அல்லது அவருடைய முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தால்; அல்லது

(ஆ) அத்தகைய வசிப்பிடத்தின் அல்லது வியாபார இடத்திற்றுலாம்பரமான பகுதியொன்றில் ஒட்டப்பட்டிருந்தால்; அல்லது

(இ) அத்தகைய அறிவித்தல் விடுக்கப்பட்ட தேதியில் அத்தகைய ஆள் அத்தகைய அறிவித்தலிற் சம்பந்தப்பட்ட வளவுகளின் சொந்தக்காரனுகவுள்ள ஒரு சந்தர்ப்பத்தில், பதிவு செய்யப்பட்ட கடிதமூலம் தபாலில் அத்தகைய வளவுகளில் இருப்பாட்சி பண்ணுபவருக்கு அனுப்பிவைக்கப்பட்டால் அல்லது அத்தகைய வளவுகளிலுள்ள கட்டடமொன்றிற் றுலாம்பரமான பகுதியொன்றில் அல்லது துலாம்பரமான இடமொன்றிலுள்ள ஒரு மரத்தில் அல்லது கம்பத்தில் ஒட்டப்பட்டிருந்தால்

அத்தகைய அறிவித்தல் அவருக்குக் கொடுபட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) (அ) இப்பிரிவின்கீழ் அவருக்குக் கொடுபட்ட அறிவித்தலெதிலாவது வேண்டப்பட்ட எதற்காவது விரோதமாக நடக்கும்; அல்லது

(ஆ) அறிக்கையொன்றை அல்லது ஏதேனும் தகவலை அல்லது விளக்கத்தை அல்லது சான்றைச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படும்போது, பொய்யான விபரங்களையடக்கியுள்ள அறிக்கையொன்றை அல்லது பொய்யான தகவல், விளக்கம் அல்லது சான்று எதனையாவது அறிந்து கொண்டு சமர்ப்பிக்கும்

எவரும் ஒரு தவறு புரிந்தவராகி, நீதவானொருவர் முன்னிலையில் சுருக்கமுறை விளக்கத்தின்பின் குற்றவாளியெனக் காணப்பட்ட தன்மேல் ஐந்நூறு ரூபாவுக்கு மேற்படா அபராதமொன்றுக்கு ஆளாவார்.

70வ. (1) இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளின்கீழ் எவையேனும் வளவுகளைக் கொள்ளும் நோக்கமொன்றுடன் அத்தகைய வளவுகளின் பெறுமதியை மதிப்பிடுவதற்காகச் சபையின் தலைவரினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவராலாவது அத்தகைய வளவுகள் பரிசோதனை செய்யப்பட்டிருக்குமிடத்து, அத்தகைய தலைவர் 70ல என்னும் பிரிவின்கீழான அறிவித்த

லொன்றைப் போன்ற அதேவிதமாகக் கொடுபட்ட எழுத்தி லுள்ள அறிவித்தல் மூலம், அத்தகைய வளவுகளின் சொந்தக் காரனை அல்லது அதில் இருப்பாட்சி பண்ணுபவரை, அத்தகைய வளவுகளுக்கு அல்லது அத்தகைய வளவுகளிலுள்ள பயிர்வகை, கட்டடம், அல்லது வேறு அமைப்பு எதற்காவது ஏதேனும் சேதம் விளைவித்தலிலிருந்து அல்லது விளைக்க அனுமதிப்பதிலிருந்து, அல்லது அவ்வளவுகளின் பெறுமதியைக் குறைக்கக்கூடிய வேறே தேனுஞ் செயலைச் செய்வதிலிருந்து அல்லது செய்ய அனுமதிப்ப திலிருந்து தடை செய்யலாம்.

(2) எவருக்காவது (1)ஆம் உட்பிரிவின்கீழ் அவை சம்பந்தமாக அறிவித்தலொன்று கொடுபட்டுள்ள எவையேனும் வளவுகளை இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளின்கீழ் இடப்பட்ட உரித்தாக் கற் கட்டளையின் மூலம் வங்கிக்கு உரித்தாக்காதிருக்க முடிவு செய்யப்படுமிடத்து, சபையின் தலைவர் அவ்வறிவித்தலைத் தாமத மின்றி நீக்கஞ் செய்து அந்நீக்கஞ் செய்தலைப் பற்றி அந்த ஆளுக்கு எழுத்திற்றகவல் கொடுத்தல் வேண்டும்.

(3) அவருக்கு (1)ஆம் உட்பிரிவின்கீழ் விடுக்கப்பட்ட அறிவித்த லொன்றை மீறுமொருவர் ஒரு தவறு புரிந்தவராக நீதவா னொருவர் முன்னிலையில் சுருக்கமுறை விளக்கத்தின்பின் குற்ற வாளியெனக் காணப்பட்டதன்மேல் ஐந்நூறு ரூபாவுக்கு மேற் படாத அபராதமொன்றுக்கு ஆளாவார்.

70ழ. இவ்வத்தியாயத்தின்கீழ் எடுபடும் காரியம் அல்லது நடவடிக்கையெதிலாவது ஏற்படும் ஒப்பாசாரமின்மை அல்லது ஒழுங்கீனமெதாவது இவ்வத்தியாயத்தின்கீழ் வங்கிக்கு உரித் தாக்கப்படும் காணியெதற்காவதுள்ள உரித்தை வலிமையற்ற தாக்குதல் அல்லது பாதித்தல் ஆகாது.

70ள. நட்டஈட்டு நியாய சபையின் அங்கத்தவர்களுக்கும், அலுவலர்களுக்கும், சேவையாளர்களுக்குங் கொடுபடவிருக்கும் வேதனமும், சாட்சிகளாக அந்நியாய சபையின் கூட்டமொன் றிற் சமுகமளிக்கும் ஆட்களுக்குப் பிரயாணச் செலவுகளாகவும் ஏனைய செலவுகளாகவுங் கொடுப்படவிருக்குந் தொகைகளும் உட்பட, இவ்வத்தியாயத்தை நிர்வகிப்பதில் ஏற்படுஞ் செல வினங்களெல்லாம் வங்கியினாற் கொடுபடுதல் வேண்டும்.

70ற. இவ்வத்தியாயத்தினில் சந்தர்ப்பம் வேறு விதமாக வேண்டினாலன்றி—

''கமத்தொழிலுக்கான வளவுகள்'' என்பது கமத்தொழிலின் அல்லது பூவினப் பயிர்செய்கையின் நோக்கத்துக்காக அல்லது கால்நடைகள், கோழிவகை அல்லது தேனீக்கள் வைத்திருத்த லும் அல்லது வளர்த்தலும், பழங்களும் மரக்கறிவகைகளும் இன் னோரன்னவும் பயிர்செய்தலும் உட்பட வேளாண்மை நோக்க மெதற்காவது முற்றாக அல்லது பிரதானமாக உபயோகிக்கப் படும் அல்லது உபயோகிக்கப்படக்கூடிய ஏதேனும் ஆதனம் அல்லது எவையேனும் வளவுகள் எனப் பொருள்படும்;

''வியாபாரத்துக்கான வளவுகள்'' என்பது கமத்தொழிலுக் கான வளவுகளை அல்லது வசிப்பதற்கான வளவுகளைத் தவிர்ந்த வேறெவையேனும் வளவுகள் எனப் பொருள்படும்;

''நட்டஈட்டு நியாய சபை'' என்பது இவ்வத்தியாயத்தின் கீழ் தாபிக்கப்பட்ட நட்டஈட்டு நியாய சபை எனப் பொருள் படும்;

''சந்தைப் பெறுமதி'' என்பது, வங்கிக்கு உரித்தாக்கப்பட்ட எவையேனும் வளவுகளின் தொடர்பாக, அத்தகைய வளவுகள் வங்கிக்கு உரித்தாக்கப்பட்ட தேதியில் அவ்வளவுகளுக்குப் பகிரங்கச் சந்தையில் கிடைத்திருக்கக்கூடிய விலை எனப் பொருள்படும்;

''அக்கறையுள்ள ஆள்'' என்பது, வங்கிக்கு உரித்தாக்கப்பட்ட எவையேனும் வளவுகள் சம்பந்தமாக, அத்தகைய வளவுகள் வங்கிக்கு உரித்தாக்கப்பட்ட தேதிக்கு நேரே முன்னதாக, முற்றாகத் தாமாகவாயினுஞ்சரி அல்லது வேறு எவரேனும் ஆளுக்காக நம்பிக்கைப் பொறுப்பாகவாயினுஞ்சரி சொந்தக்காரன், சொரியற்பங்காளி, ஈடாகப் பெற்றவர், குத்தகையாகப் பெற்றவர் என்ற வகையில் அல்லது வேறுவிதமாக அத்தகைய வளவுகளில் ஒரு அக்கறையுள்ள ஓர் ஆள் எனப் பொருள்படும்;

''வசிப்பதற்கான வளவுகள்'' என்பது, வசிப்பதன் நோக்கங்களுக்காக அவ்வக் காலத்தில் முற்றாக அல்லது பிரதானமாக ஆட்சி பண்ணப்படும் எவையேனும் வளவுகள் எனப் பொருள் படும்;

''வாழ்க்கைத்துணை'' என்பது, எவரேனும் ஆள் தொடர்பாக உபயோகிக்கப்படும் போது, சந்தர்ப்பத்துக்கேற்ப, அந்த ஆளின் கணவன் அல்லது மனைவி எனப் பொருள்படுவதுடன், பழக்கமும் பெயரும் சேர்ந்த வகையிலான அல்லது வழக்கத்துக்கிணங்கிய திருமணமொன்றின் விடயத்தில் அத்தகைய திருமணஞ் செய்யும் எந்தத் தரப்பினரையும் அடக்கும்;

''மதிப்பீட்டு வருடம்'' என்பது 1963ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, உள்நாட்டிறைவரிச் சட்டத்திலுள்ள அதே கருத்தை யுடையதாகும்.

32. முதன்மைச் சட்டவாக்கத்தின் 71ஆம் பிரிவு இத்தால் நீக்கப் பட்டுப் பின்வரும் புதிய பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது:—

71. சபையானது சபையால் தீர்மானிக்கப்பட்டுள்ள அத்த கைய படிவத்திலும் முறையிலும் வங்கியின் கணக்குகள் வைக் கப்பட வழிவகைகள் செய்தல் வேண்டும்''.

33. முதன்மைச் சட்டவாக்கத்தின் 72ஆம் பிரிவு இத்தால் நீக்கப் படுகின்றது.

34. முதன்மைச் சட்டவாக்கத்தின் 73ஆம் பிரிவு இத்தால் நீக்கப் பட்டுப் பின்வரும் பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது:—

73. நிதியமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரால் அதிகார மளிக்கப்பட்டதும், நிதியமைச்சரின் கையெழுத்தின்கீழ் தொகையானது திருப்பிக் கொடுத்தல் இலங்கை அரசாங்கத்தால் உத்தரவாதமளிக்கப்படாததுமான தொகைக்குமேல் வங்கியின் எந்தக் கணக்கும் மேலதிகப்பற்று வைக்கப்படுதலாகாது''.

35. முதன்மைச் சட்டவாக்கத்தின் 74 தொடங்கி 80 வரையுள்ள பிரிவுகள் (74ஆம் 80ஆம் பிரிவுகள் உட்பட) இத்தால் நீக்கப்படுகின்றது.

36. முதன்மைச் சட்டவாக்கத்தின் 82 தொடங்கி 85 வரையுள்ள பிரிவுகள் (82ஆம் 85ஆம் பிரிவுகள் உட்பட) இத்தால் நீக்கப்படுகின்றன.

37. முதன்மைச் சட்டவாக்கத்தின் 87ஆம் பிரிவு இத்தால் நீக்கப் படுகின்றது.

38. முதன்மைச் சட்டவாக்கத்தின் 87அ என்னும் பிரிவானது ''முகாமையாளரும் கணக்காளரும் பணிப்பாளர்களுள் பெரும்பாலோரும்'' என்ற சொற்களுக்குப் பதிலாகப் ''பொது முகாமையாளரும் கணக்காளரும் பணிப்பாளர்களுள் பெரும்பாலோரும் கணக்காய்வாளர்களும்'' என்ற சொற்களை யிடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

39. முதன்மைச் சட்டவாக்கத்தின் 89ஆம் பிரிவானது ''கணக்கீடுகள் பற்றிய அரையாண்டுக் கூற்றென்று'' என்பது தொடங்கி ''சேர்த்துப் பரிசோதித்தல் வேண்டும்'' என்ற சொற்கள் வரையிலுள்ள சொற்களுக்குப் பதிலாக ''ஆண்டுக் கூற்றென்று வழங்கப்படுதல் வேண்டும்; அத்துடன் அவர் அத்தகைய கூற்றைப் பரிசோதித்து'' என்ற சொற்களையிடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

40. முதன்மைச் சட்டவாக்கத்தின் 92ஆம் பிரிவானது 'அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் ''சிறப்புரிமைகள், அவற்றோடு தொடர்புபட்ட வேறேதேனும் கருமங்கள்'' என்ற சொற்களுக்குப் பதிலாக ''சிறப்புரிமைகள், அவர்களுக்கு மிகையூதியம் வழங்குதல், அவற்றோடு தொடர்புபட்ட வேறேதேனும் கருமங்கள்'' என்ற சொற்களை யிடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

41. முதன்மைச் சட்டவாக்கத்தின் 93ஆம் பிரிவானது அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில்—

(அ) ''முகாமையாளரும் உதவி முகாமையாளரும்'' என்ற சொற்களுக்குப் பதிலாக ''பொது முகாமையாளரும் பிரதிப் பொது முகாமையாளரும்'' என்ற சொற்களை யிடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) ''சேவை நிபந்தனைகள்'' என்ற சசொற்களுக்குப் பதிலாக ''சேவை நிபந்தனைகள் அவர்களுக்கு மிகையூதியங்கள் வழங்குதல்'' என்ற சொற்களையிடுவதன் மூலமும்;
அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் ''சட்ட ஆலோசகர்'' என்ற சொற்களுக்குப் பதிலாக ''சட்ட ஆலோசகர்களும் வேறு ஆலோசகர்களும்'' என்ற சொற்களையிடுவதன் மூலமும்.

42. பிரதான சட்டவாக்கத்தின் 94ஆம் பிரிவானது அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவினில் இதனுல் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(i) அவ்வுட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியில் ''அத்தகைய கடன்களில்'' என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக '' அத்தகைய கடன் '' களில்'; என்னுஞ் சொற்களைச் சேர்த்தல் மூலமும்;

(ii) அவ்வுட்பிரிவின் இறுதியில் பின்வரும் புதிய பந்தியைச் சேர்த்தல் மூலமும்:—

''(எ) Vஅ என்னும் அத்தியாயத்தின் நெறிகளையும் ஏற்பாடுகளையும் நிறைவேற்றுவதற்கும் அல்லது அவற்றுக்குப் பயனளிப்பதற்கும், ஏதேனும் நட்டஈட்டை மதிப்பிட்டுக் கொடுத்தல் தொடர்பான ஏதேனுங் காரியத்தை அல்லது Vஅ என்னும் அத்தியாயத்தின்கீழ் விதிக்கப்பட வேண்டுமெனக் கூறப்பட்ட அல்லது வேண்டப்பட்ட ஏதேனுங் காரியத்தை ஒழுங்குபடுத்துவதற்கும்''.

*43.* முதன்மைச் சட்டவாக்கத்தின் 98 ஆம் பிரிவு பின்வருமாறு இத்தாற் றிருத்தியமைக்கப்படுகிறது;

*(1)* அப்பிரிவின் *(1)*ஆம் உபபிரிவில் ''சபைக் கிளைப் பணிப்பாள ரொருவர் அல்லது உறுப்பினரொருவர்'' என்ற சொற்களுக்குப் பதிலாக ''ஒரு பணிப்பாளர்'' என்ற சொல்லை இடுவதன் மூலமாக, அத்துடன்

*(2)* அப்பிரிவின் ஓரக்குறிப்பில் ''கிளைச்சபைப் பணிப்பாளர், உறுப்பினர்'' என்ற சொற்களுக்குப் பதிலாக ''பணிப்பாள ரொருவர்'' என்ற சொல்லை இடுவதன் மூலமாக, அத்துடன்

*(3)* அப்பிரிவின் ஓரக்குறிப்பில் ''கிளைச்சபைகளின் பணிப்பாளர்கள், உறுப்பினர்'' என்ற சொற்களுக்குப் பதிலாக ''பணிப்பாளர் கள்'' என்ற சொல்லை இடுவதன் மூலமாகவும்.

*44.* முதன்மைச் சட்டவாக்கத்தின் 99ஆம் பிரிவு இத்தால் நீக்கப் படுகின்றது.

*45.* முதன்மைச் சட்டவாக்கத்தின் 100ஆம் பிரிவானது அப்பிரிவின் *(1)*ஆம் உட்பிரிவின் (iii)ஆம் பந்தியில் ''முகாமையாளர்'' என்ற சொல் லுக்குப் பதிலாக ''பொது முகாமையாளர்'' என்ற சொற்களையிடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*46.* முதன்மைச் சட்டவாக்கத்தின் 102ஆம் பிரிவானது இத்தால் நீக்கப் பட்டுப் பின்வரும் புதிய பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது:—

102. *(1)* வங்கியின் பொது இலச்சினை பொது முகாமை யாளரின் பாதுகாவலிலிருத்தல் வேண்டும்; அது பொது முகாமையாளரினதும் அல்லது அவரில்லாதவிடத்துப் பிரதிப் பொது முகாமையாளரினதும் இரண்டு பணிப்பாளர்களினதும் முன்னரன்றி எந்தவோர் ஆவணத்திலும் பொறிக்கப்பட லாகாது; அவர்கள் அப்போது அங்கிருந்தார்கள் என்பதற் கடையாளமாக அவர்கள் அந்த ஆவணத்தின்மீது கையெழுத் திடல் வேண்டும்

*(2)* வங்கியின் பொது இலச்சினை வங்கியால் தீர்மானிக்கக் கூடிய அத்தகைய முறையில் மாற்றப்படலாம்''.

*47.* முதன்மைச் சட்டவாக்கத்தின் 103ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

*(1)* ''சமதுண்டக் கொடுப்பனவு'' என்ற சொற்களுக்குப் பதிலாக ''சமதுண்டக் கொடுப்பனவு அல்லது வேறு கொடுப்பனவு'' என்ற சொல்லையிடுவதன் மூலமும்; அத்துடன்

*(2)* அப்பிரிவின் முடிவில் பின்வரும் காப்பு வாசகத்தையிடுவதன் மூலமும்:—

''ஆயின் எப்படியிருப்பினும் சபையானது அதன் தனித் தற்றுணிபின் பேரில், இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள வீதத்தில் வட்டிகொடுக்கப்பட வேண்டுமென்ற தேவைப்பாட்டை விட்டுவிடலாம்; அத் துடன் அதற்குப் பதிலாக எந்தத் தவணைக்காலம் தொடர் பாகத் தவறு செய்யப்பட்டதோ அந்தத் தவணைப்பணம் தொடர்பில் கொடுக்கப்படற்பாலதான கடன்மீது தொடக்கத் தில் இணங்கிய வீதத்தின் இரு மடங்கு வரையுள்ள வீதத் தில் வட்டி கொடுக்கப்படுதல் வேண்டுமெனத் தீர்மானிக்க லாம்''.

*48.* முதன்மைச் சட்டவாக்கத்தின் 104ஆம் பிரிவானது அப்பிரிவில் ''சபை'' என்ற சொல் தோன்றுமிடமெல்லாம் அதற்குப் பதிலாக ''வங்கி'' என்ற சொல்லையிடுவதன் மூலமும் இத்தாற் றிருத்தப்படுகின்றது.

49. 106ஆம் பிரிவினையுடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது; அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 106அ என்னும் பிரிவாகப் பயனுடையதாதல் வேண்டும்:—

> 106அ. கடனிணக்கக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளும் 1958ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டமும் வங்கிக்கும் வங்கித் தொடர்பிலும் ஏற்புடையனவாகா; அத்துடன் அதற்கிணங்க அத்தகைய ஏற்பாடுகள் இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கமைய வாசிக்கப்பட்டு பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்''.

50. இச்சட்டத்தின் 38ஆம் 39ஆம் பிரிவுகளின் மூலம் முதன்மைச் சட்டவாக்கத்தில் செய்யப்பட்ட திருத்தங்கள் 1948ஆம் ஆண்டு ஒற்ரோபர் மாதம் 1ஆந் தேதி தொடங்கிப் பயனுடையனவாகவிருந்து வந்தனவாக எல்லா நோக்கங்களுக்கும் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன் அதற்கிணங்க—

(அ) அதனது முகாமையாளர், உதவி முகாமையாளர் கீழ்நிலைப் பணியாட்டொகுதி வேறு அலுவலர்கள் ஊழியர்கள் என்போருக்கான மிகையூதியம் கொடுப்பனவு பற்றியனவும் இற்றைவரை இலங்கை அரச ஈட்டு வங்கியின் பணிப்பாளர் சபையால் ஆக்கப்பட்டனவுமான விதிகள் முதன்மைச் சட்டவாக்கத்தின்கீழ் முறைப்படி ஆக்கப்பட்டனவாகவும் இச்சட்டம் சட்டவாக்கஞ் செய்யப்படுந் தேதிக்கு முன்னர் தேவையான எல்லாக் காலங்களிலும் செல்லுபடி கொண்டனவாகவும் பயனுடையனவாகவுமிருந்து வந்தனவாகவும் கருதப்படுதல் வேண்டும்;

(ஆ) அதனது முகாமையாளர் உதவி முகாமையாளர் கீழ்நிலைப் பணியாட்டொகுதி வேறு அலுவலர்கள் ஊழியர்கள் என்போருக்கானவும் இற்றைவரை இச்சட்டம் சட்டவாக்கஞ் செய்யப்படுந் தேதிக்கு முன்னர் வங்கியால் அல்லது வங்கியின் சார்பில் கொடுக்கப்பட்டு வந்தனவுமாகிய எல்லாக் கொடுப்பனவுகளும் முதன்மைச் சட்டவாக்கத்தால் அளிக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் முறைப்படி கொடுக்கப்பட்டனவாகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன் இச்சட்டம் தொடங்குகின்ற தேதியிலிருந்து சொல்லப்பட்ட விதிகள் அவை முதன்மைச் சட்டவாக்கத்தின்கீழ் ஆக்கப்பட்டாற்போல் வலுவுடையனவாகவிருத்தல் வேண்டும் என்பதோடு அவை திருத்தப்படலாம் அழிக்கப்படலாம் அவற்றுக்கு வேறு சேர்க்கப்படலாம் அல்லது அந்தச் சட்டத்தின்கீழ் ஆக்கப்படும் விதிகள் மூலம் மாற்றீடு செய்யப்படலாம்; அத்துடன்

(இ) இச்சட்டம் சட்டவாக்கஞ் செய்யப்படுந் தேதியிலிருந்து சொல்லப்பட்ட விதிகள் அவை முதன்மைச் சட்டவாக்கத்தின் கீழ் முறைப்படியாக்கப்பட்ட விதிகளென்றாற் போன்று வலுவிலிருத்தல் வேண்டுமென்பதோடு அவை அந்தச் சட்டவாக்கத்தின் கீழ் ஆக்கப்படும் விதிகள் மூலம் திருத்தப்படலாம், அழிக்கப்படலாம், சேர்க்கப்படலாம் அல்லது மாற்றீடு செய்யப்படலாம்.

51. (1) நாளிதுவரை இலங்கை அரச ஈட்டு வங்கியின் முகாமையாளரென வழங்கப்பட்டு வந்த பதவியின் பவிதப்பெயர் மாற்றப்பட்டிருப்பினும், இச்சட்டம் சட்டவாக்கஞ் செய்யப்படுதவற்கு நேர்முந்திய நாளில் அத்தகைய முகாமையாளராகப் பதவி வகிக்கும் ஆள் அவ்வாறு பொது முகாமையாளரின் பதவியைவறிதாக்கும் அந்தநாள் வரை வங்கியில் பொது முகாமையாளரின் பதவியில் தொடர்ந்து தொழிலிலிருப்பார்,

(2) நாளிதுவரை இலங்கை அரச ஈட்டு வங்கியின் உதவி முகாமையாள ரென வழங்கப்பட்டு வந்த பதவியின் பதவிப்பெயர் மாற்றப்பட்டிருப்பினும் இச்சட்டம் சட்டவாக்கஞ் செய்யப்படுவதற்கு நேர்முந்திய நாளில் அத்த கைய உதவி முகாமையாளராகப் பதவி வகிக்கும் ஆள் அவ்வாறு பிரதிப் பொது முகாமையளாரின் பதவியை வறிதாக்கும் அந்த நாள் வரை வங்கியில் பிரதிப் பொது முகாமையாளரின் பதவியில் தொடர்ந்து தொழிலி லிருப்பார்.

52. வேறேதேனும் எழுத்துமூலச் சட்டத்தின் (முதன்மைச் சட்ட வாக்கம் தவிர்ந்த சட்டத்தின்) ஏற்பாட்டில், அல்லது முதன்மைச் சட்ட வாக்கத்தில் அல்லது வேறேதேனும் அத்தகைய சட்டத்தால் அல்லது அதன் கீழ் வழங்கப்பட்ட ஆக்கப்பட்ட தேவைப்படுத்தப்பட்ட அல்லது அதிகார மளிக்கப்பட்ட ஏதேனும் அறிவித்தலின் அனுமதிச்சீட்டின் அறிவிப்பின் படி-வத்தின் அல்லது வேறு ஆவணத்தின் ஏற்பாட்டில் ''இலங்கை அரச ஈட்டு வங்கியின் முகாமையாளர்'' அல்லது ''இலங்கை அரச ஈட்டு வங்கியின் உதவி முகாமையாளர்'' என்ற சொற்கள் தோன்றுமிடமெல்லாம் அவைக்குப் பதிலாக ''இலங்கை அரச ஈட்டு வங்கியின் பொது முகாமையாளர்'' என்ற சொற்கள் அல்லது ''இலங்கை அரச ஈட்டு வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர்'' என்ற சொற்கள் பதிலிடப்படல் வேண்டும்; அத்துடன் அதற்கிணங்க அத்தகைய ஏதேனும் ஏற்பாட்டில் ''முகாமையாளர்'' என்ற குறுக்கம் அல்லது இலங்கை அரச ஈட்டு வங்கியின் முகாமையாரைக் குறிக்க அல்லது ''உதவி முகாமையாளர்'' என்ற குறுக்கம் இலங்கை அரச ஈட்டு வங்கியின் உதவி முகாமையாளரைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றவிடத்து அத்தகைய குறுக்கம் இலங்கை அரச ஈட்டு வங்கியின் பொது முகாமையாள ரைக் குறிப்பதாகவும் அல்லது விடயத்திற்கேற்ப இலங்கை அரச ஈட்டு வங்கியின் பிரதிப் பொது முகாமையாளரைக் குறிப்பதாகவும் வாசிக்கப் பட்டுப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

## பாகம் II

### சில வளவுகள் மக்கள் வங்கியினுற் கொள்ளப்படுதல் சம்பந்தமாகவும் அத்த கைய வளவுகளைக் கையளித்தல் சம்பந்தமாகவும், 1963ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க, நிதிச்சட்டத்துக்கான திருத்தம்

53. பின்வரும் புதிய பிரிவு 98ஆம் பிரிவுக்கு நேரே பின்னே இதனுல் சேர்க்கப்பட்டு, 1963ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் VIII ஆம் பாகத்தின் 98 அ என்னும் பிரிவாகப் பயன்படுதல் வேண்டும்.

> 98அ. இச்சட்டத்தின் இப்பாகத்தின் வேறெந்த ஏற்பாட்டி லாவது மாருக எது எவ்விதமிருப்பினும், கசெற்றிற் பிரசுரிக்கப் பட்ட கட்டளை மூலம் அமைச்சரால் நியமிக்கப்படக்கூடிய தேதி யில் அல்லது அதன்பின், இச்சட்டத்தின் இப்பாகத்தின் 7 (2) ஆம் பிரிவின்கீழான விண்ணப்பமேதாவது வங்கிக்குச் செய்யப்படுதல் அல்லது வங்கியினுல் ஏற்றுக்கொள்ளப்படுதல் ஆகாது''.

---

## 1968ம் ஆண்டின் 34ம் இலக்க இலங்கை வங்கி திருத்தச் சட்டம்.

இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

1. இச்சட்டம் 1968ம் ஆண்டின் 34ம் இலக்க இலங்கை வங்கி (திருத்தச்) சட்டமென எடுத்துக்காட்டப்படலாம்.

2. இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையில் இரண்டாம் பாகம் அதன் மூன்ருவது விடயத்தில், அவ்விடயத்தின் (இ), (ஈ) ஆகிய பந்திகளை விட்டுவிடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

## 1961ம் ஆண்டின் 65ம் இலக்க திருத்தச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

1. இச்சட்டம் 1968ம் ஆண்டின் 36ம் இலக்க நிதித் (திருத்தச்) சட்டமென எடுத்துக்காட்டப்படலாம்.

2. இச்சட்டத்தில் முதன்மைச் ''சட்டம்'' எனக் குறிப்பிடப்படும் 1961ம் ஆண்டின் 65ம் இலக்க நிதிச்சட்டத்தின் 22ம் பிரிவானது அதன் முதலாம் உட்பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவினைச் சேர்த்தல்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

''(1அ) ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட வங்கி ஒன்றில் முதலாம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட எவரேனும் ஆள் ஒருவரின் பெயரில் அல்லது இணைக்கப்பட்ட குழு அல்லது குழுமம் அல்லது ஆட்கள் அடங்கிய வேறு குழு எதனதும் பெயரில் கணக்கு ஒன்றைத் திறத்தல், முதலாம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுதல் ஒன்றாகக் கருதப்படுதலாகாது.''

3. முதன்மைச் சட்டத்தில் பின்வரும் புதிய பிரிவானது 22ம் பிரிவினை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றது. அது முதன்மைச் சட்டத்தின் 22அ என்னும் பிரிவெனப் பயனுடையதாதல் வேண்டும் :—

22அ. (1) நாணயச் சபையின் விதப்புரையின்மீது செயலாற்றும் அமைச்சர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலமாக 22ம் பிரிவின் முதலாம் உட்பிரிவிற் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் வங்கி அல்லாததும் அத்தகைய கட்டளையிற் பெயர் குறிக்கப்பட்டுள்ளதுமான ஏதேனும் வங்கி, அக்கட்டளையின்கண் குறிக்கப்படவேண்டிய அத்தகைய தேதி தொடக்கமாக இப்பிரிவின் நோக்கங்களுக்கென அங்கீகரிக்கப்பட்ட வங்கி ஒன்றாதல் வேண்டுமெனக் காலத்துக்குக் காலம் வெளிப்படுத்தலாம்.

(2) நாணயச் சபையின் விதப்புரையின்மீது செயலாற்றும் அமைச்சர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளையின்மூலமாக முதலாம் உட்பிரிவின் கீழ் அவரால் வெளியிடப்பட்ட ஏதேனும் கட்டளையைத் திருத்தலாம் அல்லது நீக்கஞ்செய்யலாம்.

(3) அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் வங்கியினால் இணங்கி ஒழுகப்படவேண்டிய நியதிகளையும், நிபந்தனைகளையும், நாணயச் சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கலாம். நாணயச் சபை, அத்தகைய தீர்மானம் ஒவ்வொன்றினையும் அத்தகைய வங்கிக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.

(4) இப்பிரிவின் ஏற்பாடுகளைப் பின்பற்றி அமைச்சரினாலாக்கப்பட்ட கட்டளையொவ்வொன்றும், அது கசெற்றில் வெளியிடப்பட்ட பின்னர் கூடிய விரைவில் பிரதிநிதிகள் சபையின்முன் கொண்டுவரப்படுதல் வேண்டும். இப்பிரிவின்கீழ் அமைச்சரினாலாக்கப்பட்ட ஏதேனும் கட்டளையை, அத்தகைய கட்டளையானது கசெற்றில் வெளியிடப்பட்டபின்னர் அறுபது நாட்களுள் பிரதிநிதிகள் சபையானது தீர்மானத்தினால் நீக்கஞ் செய்யலாம்; அத்துடன் அத்தகைய அறுபதுநாட் காலத்தினைக் கணக்கிடுவதில், பாராளுமன்றம் கூட்டத்தொடரற்றிருந்த அல்லது கலைக்கப்பட்ட ஏதேனும் காலமானது கணக்கில் எடுக்கப்படுதலாகாது. ஏதேனும் கட்டளையின் அத்தகைய நீக்கம், அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதனதும் செல்லுபடியாகுந் தன்மைக்குப் பங்கமாகாதிருத்தல் வேண்டும்.

(5) அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் வங்கி, 22 (1)ம் பிரிவின்கண் குறிப்பிடப்பட்டுள்ள எவரேனும் ஆளின் பெயரில் அல்லது இணைக்கப்பட்ட குழு அல்லது குழுமம் அல்லது ஆட்கள் அடங்கிய வேறு குழு எதனதும் பெயரில் எத்தகையதுமான கணக்கினைத் திறக்கலாம்.

(6) 22ம் பிரிவிலும், இப்பிரிவிலும்—

(அ) '' அங்கீகரிக்கப்பட்ட வங்கி '' என்ற சொல்லமைப்பு, முதலாம் உட்பிரிவின்கீழ் அமைச்சரால் வெளியிடப்பட்ட கட்டளை ஒன்று அதன்சார்பில் அக்காலத்து வலுவுடையதாகவிருக்கும் ஏதேனும் வங்கியெனப் பொருள்படும் ;

(ஆ) '' நாணயச் சபை '' என்ற சொல்லமைப்பு, நாணயச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட மத்திய வங்கியின் நாணயச் சபையெனப் பொருள்படும். ''.

---

## 1968ம் ஆண்டின் 38ம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம்

1968-69 நிதியாண்டின் சேவைக்கு ஏற்பாடு செய்வதற்கும், அத்தகைய சேவையின் நோக்கத்திற்காக இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே கடன்களெடுத்தலை அதிகாரமளிப்பதற்கும், அந்நிதியாண்டின்போது அரசாங்கத்தின் குறித்த சில தொழிற்பாடுகள் தொடர்பாக நிதி ஏற்பாடு செய்வதற்கும், அத்தகைய தொழிற்பாடுகளில் செலவுசெய்வதற்கென அந்நிதியாண்டின்போது பணங்களிலிருந்து அல்லது அரசாங்கத்தின் பணங்களிலிருந்து அல்லது அதன் கையிருப்பிலுள்ள பணங்களிலிருந்து அல்லது இலங்கைத் திரட்டு நிதியிலிருந்து அல்லது வேறு ஏதேனும் நிதியிலிருந்து முற்பணங்கள் மூலமாகக் கொடுப்பனவை இயலச் செய்வதற்கும், அத்தகைய பணங்களை அத்திரட்டு நிதிக்கு மீறக்கொடுப்பதற்கு ஏற்பாடுசெய்வதற்கும், மேற்சொல்லப்பட்ட விடயங்களின் இடைநேர்வினவான அல்லது விடயங்களோடுறவுபட்ட விடயங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.

1. இச்சட்டம் 1968ம் ஆண்டின் 38ம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (1) ஏதேனும் செலவினை அதிகாரமளிக்கும் வேறு ஏதேனும் சட்டத்திற்குப் பங்கமின்றி, 1968, ஒக்டோபர் 7ந் தேதியன்று தொடங்கி, 1969 செத்தெம்பர் 30ந் தேதியன்று முடிவடையும் நிதியாண்டின் சேவைக்காக அரசாங்கத்தின் செலவென மதிப்பிடப்பட்ட தொகையான ரூபா இருநூற்றுத் தொண்ணூற்றேழு கோடியே பன்னிரண்டு இலட்சத்துத்தொளாயிரத்துத் தொண்ணூற்றெட்டும்—

(அ) அரசாங்கத்தின் பணங்களிலிருந்து அல்லது அதன் கையிருப்பிலுள்ள பணங்களிலிருந்து அல்லது இலங்கைத் திரட்டு நிதியிலிருந்து அல்லது வேறு ஏதேனும் நிதியிலிருந்து செய்யப்பட வேண்டுமென இத்தால் அதிகாரமளிக்கப்பட்ட கொடுப்பனவுகளிலிருந்தும், அத்துடன்,

(ஆ) நூற்றுநூறுகோடி ரூபாவிலும் மேற்படாது, அத்தகைய வரும்படிகளின் கூட்டுத்தொகையிருக்கும்படியாக, அரசாங்கத்தின் சார்பிலும் அதற்காகவும், இலங்கையிலும் சரி, இலங்கைக்கு வெளியேயுஞ் சரி, எடுக்கப்பட்ட இத்தால் அதிகாரமளிக்கப்பட்ட கடன்களின் வரும்படிகளிலிருந்தும்,

பெறப்படுதல் வேண்டும்.

இதனகத்தே முன்னே குறிப்பிடப்பட்ட தொகையான இரு நூற்றுத் தொண்ணூற்றேழு கோடியே பன்னிரண்டு இலட்சத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றெட்டு ரூபாவும் இச்சட்டத்தின் முதலாம் அட்டவணையிற் குறிப்பிடப்பட்டவாறு செலவிடப்படலாம்.

(2) அரசாங்கத்தின் சார்பிலும் அதற்காகவும் கடன்களெடுப்பதை அதி காரமளிக்கும் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக் குப் பங்கமின்றி, இப்பிரிவின் (1)ம் உட்பிரிவின் ஏற்பாடுகள் பயனுடையன வாதல் வேண்டும்.

3. (1) இரண்டாம் பிரிவிற் குறிப்பிடப்பட்ட நிதியாண்டின்போது, இச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் ஓராம் நிரலிற் குறிப்பிடப்பட்ட தொழிற்பாடு ஒவ்வொன்றிலுமிருந்து வரும் அரசாங்கத்தின் பற்றுக்கள் அத் தகைய தொழிற்பாட்டின் கணக்குக்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும். ஆனல், அத்தகைய பற்றுக்களின் மொத்தத் தொகையானது அவ்வட்டவணை யின் III என்னும் நிரலிலுற்ற ஒத்திசைவான பதிவில் குறிப்பிடப்பட்ட உச்சவெல்லையிலுங் கூடுதல் ஆகாது.

(2) இரண்டாம் பிரிவிற் குறிப்பிடப்பட்ட நிதியாண்டின்போது, இச் சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் ஓராம் நிரலிற் குறிப்பிடப்பட்ட தொழிற்பாடொவ்வொன்றிலும் அரசாங்கத்திஞல் கூறப்பட்ட செல வானது, அந்நிதியாண்டின்போது அத்தகைய தொழிற்பாடுகளிலிருந்து அர சாங்கத்தின் பற்றுக்களிலிருந்து கொடுக்கப்படுதல் வேண்டும்; ஆயினும், அத்தகைய செலவானது, அட்டவணையின் II என்னும் ஒத்திசைவான பதிவில் குறிப்பிடப்பட்ட உச்சவெல்லையிலுங்கூடுதலாகாது.

(3) இரண்டாம் பிரிவிற் குறிப்பிடப்பட்ட நிதியாண்டின் முடிவில் இச் சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் ஓராம் நிரலிற் குறிப்பிடப்பட்ட ஏதேனும் தொழிற்பாட்டின் வெளிநிலுவையாகவுள்ள பற்று மீதமானது, அவ் வட்டவணையின் IV என்னும் நிரலில் உள்ள ஒத்திசைவான பதிவில் குறிப் பிடப்பட்ட உச்சவெல்லையிலுங் கூடுதலாகாது என்பதோடு, அந்நிதியாண்டின் முடிவில் அத்தொழிற்பாட்டின் முழுப் பொறுப்புக்களும், அவ்வட்டவணையின் V என்னும் நிரலிலுள்ள ஒத்திசைவான பதிவில் குறிப்பிடப்பட்ட உச்ச வெல்லையிலுங் கூடுதலுமாகாது.

4. இரண்டாம் பிரிவிற் குறிப்பிடப்பட்ட நிதியாண்டின்போது எக் காலத்திலாயினும், இச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையில் குறிப்பிடப் பட்ட ஏதேனும் தொழிற்பாட்டிலிருந்து அரசாங்கத்தின் பற்றுக்கள், அத் தகையத் தொழிற்பாட்டில் அரசாங்கத்திஞல் கூறப்பட்ட செலவுகளைச் சமன் செய்யப் போதாததாயிருக்குமிடத்து, நிதி அமைச்சரானவர், காலத் திற்குக் காலம், கட்டளை மூலம், அத்தகைய செலவைச் சமன் செய்வதற்கு அவசியமானதாயிருக்குமென அவர் கருதக்கூடிய அத்தகைய தொகைகளை, அரசாங்கத்தின் பணங்களிலிருந்து அல்லது அதன் கையிருப்பிலுள்ள பணங் களிலிருந்து அல்லது இலங்கைத் திரட்டு நிதியிலிருந்து அல்லது வேறு ஏதே னும் நிதியிலிருந்து முற்பணங்கள் மூலமாக, கொடுத்தல் வேண்டுமெனப் பணிக்கலாம். ஆயினும், எவ்வாருயினும், அவ்வாறு முற்பணமாக வழங்கப் பட்ட தொகைகளின் கூட்டுத்தொகை, அவ்வட்டவணையின் II என்னும் நிரலிலுள்ள ஒத்திசைவான பதிவில் குறிப்பிடப்பட்ட செலவு உச்ச எல்லை யிலுங் கூடுதலாகாது. அத்தகைய தொழிற்பாடு தொடர்பில் அவ்வாறு முற்பணமாக வழங்கப்பட்ட ஏதேனும் தொகைகள், நிதி அமைச்சர் கட்டளை மூலம் பணிக்கக்கூடிய அத்தகைய வாருக, அத் திரட்டு நிதிக்கு மீறக்கொடுக்கப்படுதல் வேண்டும்.

5. இச்சட்டத்தின் முதலாம் அட்டவணையின் ஏற்பாடுகளின் பயனைக் கொண்டு, 3ம், 5ம், 7ம் வாக்குப் பணங்கள் தவிர்ந்த ஏதேனும் வாக்குப்பணத் திற்கு ஒதுக்கப்பட்ட ஏதேனும் பணங்கள், அவ்வட்டவணையில் ஏதேனும் குறிக்கப்பட்ட தலைப்பின்கீழ் தோற்றியிருந்து, அவை செலவழிக்கப் படாமலும், செலவழிக்கப்படமாட்டா எனவும் தோற்றுமிடத்து, திறைசேரிச் செயலாளரின் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட வேறுயாரேனும் அலுவலரின் கட்டளைமூலம் அத்தலைப்பின் கீழுள்ள வேறு ஏதேனும் வாக்குப் பணத்திற்கு மாற்றப்படலாம்,

6. நிதியமைச்சரானவர் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், 1960, ஏப்பிறல் 30ந் தேதியன்று அல்லது அதற்கு முன்னதாக, இச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணை II, III, IV அல்லது V என்னும் நிரல்களிற் குறிப்பிடப்பட்ட உச்சவெல்லைகளில் எதையேனும் மாற்றலாம் அல்லது திருத்தலாம். அத்தகைய ஏதேனும் கட்டளை, அதன்கண் அவ்வாறு கூறப்பட்டிருப்பின், அதன்கண் குறிப்பிடப்படக்கூடிய அத்தகைய கட்டளையின் ஆக்கத் தேதிக்கு முந்திய அத்தகைய தேதியிலிருந்து பயனுடையதாகக் கருதப்படுதல் வேண்டும்.

7. சனப்பிரதிநிதிகள் சபையானது தீர்மானமூலம், இச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையினை பொருத்தமான நிரல்களுக்குப் பதிலாக, ஏதேனும் தொழிற்பாட்டையும், அத்தகைய தொழிற்பாடு தொடர்பான உச்சவெல்லைகளுள் எதையேனும் அல்லது எல்லாவற்றையும் சேர்த்தல் மூலம் மாற்றலாம்.

*(அ) முதலாம் அட்டவணை:*

1968, ஒக்டோபர் முதலாந் தேதியன்று தொடங்கி 1969 செத்தெம்பர் 30ந் தேதியன்று முடிவடையும் நிதியாண்டுக்கான பொதுச் சேவைகளுக்கு, பல்வேறு செலவுத் தலைப்புக்களின்கீழ் கொடுபடவேண்டிய தொகைகளின் விளக்கமான தனி விபரத்திரட்டொன்றைத் தருகின்றது.

இச்சேவைகளுக்காகக் கொடுபட வேண்டிய பணத்தின் முழுத் தொகை இருநூற்றுத் தொண்ணூற்றேழு கோடியே பன்னிரண்டு லட்சத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றெட்டு ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது (ரூபா 297,12,009,98.00).

இத்தொகை சட்டத்தின் 2(1) என்னும் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் செலவிடப்படலாம்.

*(ஆ) இரண்டாம் அட்டவணை:*

அதே நிதியாண்டிற்கு அரசாங்கத்தின் குறித்த சில தொழிற்பாடுகள் தொடர்பில் ஆக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளின் விளக்கமான தனி விபரத்திரட்டொன்றைத் தருகின்றது. இவ் விபரத்திரட்டானது பல்வேறு அலுவலகங்கள், கழகங்கள், திணைக்களங்கள் ஆகியவற்றின் தலைப்புக்களின்கீழ் அத்தகைய அலுவலகங்கள், கழகங்கள், திணைக்களங்கள் தொடர்பில் அரசாங்கத்தின் குறித்த சில தொழிற்பாடுகள் தொடர்பாக அரசாங்கத் தொழிற்பாடுகளின் செலவு உச்சவெல்லையையும், அரசாங்கத் தொழிற்பாடுகளின் கணக்குகளுக்கு வரவுவைக்கக்கூடிய உச்சவெல்லையையும், அரசாங்கத் தொழிற்பாடுகளின் வரவு மீதிகளின் உச்சவெல்லையையும், அரசாங்கத் தொழிற்பாடுகளின் பொறுப்புக்களின் உச்சவெல்லையையும் குறிப்பிடுகின்றது. இத்தொகைகள் சட்டத்தின் 3ம் பிரிவில் காட்டப்பட்ட ஏற்பாடுகளுக்கமைய வரவுவைக்கப்படுதலும் செலவு செய்யப்படுதலும் வேண்டும்.

---

## 1968ம் ஆண்டின் 50ம் இலக்க நிதித் (திருத்தச்) சட்டம்

*1963ம் ஆண்டின் 11ம் இலக்க நிதிச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

**(இசைவுபெற்ற தேதி: 1968 திசெம்பர் 24)**

1. இச்சட்டம் 1968ம் ஆண்டின் 50ம் இலக்க நிதித் (திருத்தச்) சட்டமென எடுத்துக்காட்டப்படலாம்.

2. இதனகத்துப்பின்னர் 'முதன்மைச்சட்டம்' எனக் குறிப்பீடுசெய்யப்படும், 1963ம் ஆண்டின் 11ம் இலக்க நிதிச்சட்டத்தின் 119ம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் முதலாமுட்பிரிவில், ''இலங்கையில் எந்த இடத்திலேனும் கொண்டுநடாத்தும்'' என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, ''இனம்வழியிற் கொண்டுநடாத்தும்'' என்னுஞ் சொற்களை இடுவதன்மூலமும் ;

(2) அப்பிரிவின் (5)ம் உட்பிரிவின், ''தொழில் தொடர்பான வரிமதிப்பாண்டு எதற்கும்'' என்னும் சொற்களுக்குப் பதிலாகத் தொழில் தொடர்பான, 1968ம் ஆண்டு செத்தெம்பர் 30ந் தேதியில் அல்லது அதற்கு முன்னராக முடிவடையும் வரிமதிப்பாண்டு எதற்கும்'' என்னுஞ் சொற்களை இடுவதன்மூலமும்.

3. முதன்மைச்சட்டத்தின் 120ம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் முதலாமுட்பிரிவினை உடனடுத்துப்பின்னர் பின்வரும் உட்பிரிவினைச் சேர்த்ததன்மூலமும் :—

''(1அ) அவராற் கொண்டுநடாத்தப்படும் ஏதேனும் தொழில் தொடர்பாக ஆள் ஒருவரிடமிருந்து தொழில் மொத்த விற்பனவுவரி அறவிடப்படக்கூடியதாகவிருந்து, அத்தொழிலின் உடைமை மாற்றமொன்று நிகழுகின்றவிடத்து, அப்போது, முதலாமுட்பிரிவின் ஏற்பாடுகள் எது எவ்வாறிருப்பினும், அத்தொழிலின் புதிய சொந்தக்காரரிடமிருந்து உடைமை மாற்றம் நிகழுவதற்கு நேரேமுன்னர் அத்தொழிலின் சொந்தக்காரர் என்றாற்போன்று தொழில் மொத்த விற்பனவுவரி அறவிடப்படக்கூடியதாதல் வேண்டும். '';

(2) அப்பிரிவின் இரண்டாமுட்பிரிவில் —

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், ''தனியான தொழிலொன்றாகக் கருதப்படுதல் வேண்டும் ; அத்துடன்'', என்னுஞ் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவனவற்றை இடுதன்மூலமும் :—

'' (1) 1968ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30ந் திகதியில் அல்லது அதற்குமுன்னதாக முடிவடையும் ஏதேனும் வரிமதிப்பாண்டு எதற்காகவும் தனித்தொழிலொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

(2) 1968ம் ஆண்டு ஒத்தோபர் முதலாந் தேதியில் அல்லது அதன்பின்னர் தொடங்கும் வரிமதிப்பாண்டெதற்காகவும் அதே தொழிலின் ஒரு பகுதியெனக் கருதப்படுதல் வேண்டும். '';

(ஆ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியை நேர் உடனடுத்துப்பின்னர் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

''(அஅ) ஒத்த தன்மையுடைய தொழில்கள் ஆள் ஒருவரினால் ஒரே இடத்தில் அல்லது வெவ்வேறு இடங்களில் கொண்டுநடாத்தப்படுகின்றவிடத்து, அவரால் அவ்வாறு நடாத்தப்படும் தொழில்கள் 1968ம் ஆண்டு ஒத்தொபர் முதலாந் தேதியில் அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டுக்கும் ஒரு தொழிலாகக் கருதப்படுதல் வேண்டும் ; அத்துடன் ''; அத்துடன்

3) அவ்வுட்பிரிவின் (3)ம் உட்பிரிவினை நீக்குவதன்மூலமும் அதற்காகப் பின்வரும் உட்பிரிவினைப் பதிலீடுசெய்வதன் மூலமும் :—

'(3) (அ) இச்சட்டத்தின் இப்பாகத்தின் நோக்கங்களுக்காக, 1968ம் ஆண்டு செத்தெம்பர் 30ந் தேதியில் அல்லது அதற்குமுன்னர் முடிவடையும் ஏதேனும் வரி மதிப்பாண்டு தொடர்பாகத் ''தொழில்'' என்பது ஏதேனும் வியாபாரத்தை அல்லது வாழ்க்கைத்தொழிலை உள்ளடக்கும் ; ஆனால் பின்வருவனவற்றை உள்ளடக்காது—

(1) ஏதேனும் தான்புரிதொழில் ;

(2) ஏதேனும் கமத்தொழில் முயற்சி ;

(3) உற்பத்திசெய்யப்பட்ட அல்லது பதனிட்ட பொருள் எதனையும் ஏற்றுமதி செய்வதற்கான ஏதேனும் முயட்சி ;

(4) வங்கியாளர், நிதியாளர், கடன் கொடுப்பவர், அடைவு பிடிப்பவர், தரகுமுகவர் அல்லது தரகரின் தொழில் ;

(5) ஏதேனும் காப்புறுதித் தொழில் ;

(6) கல்வி நிறுவனமொன்றைக் கொண்டு நடாத்தும் தொழில்;

(7) கசெற்றில் பிரசுரிக்கப்பட்டதும், அமைச்சரினால் ஆக்கப்பட்டுப் பிரதிநிதிகள்சபையினால் அங்கீகரிக்கப்பட்டதுமான கட்டளையினால் தொழில் மொத்த விற்பனவு வரியிலிருந்து விலக்களிக்கப்படக்கூடியதான மொத்த விற்பனவையுடைய வேறு ஏதேனும் தொழில்.

(ஆ) இச்சட்டத்தின் இப்பாகத்தின் நோக்கங்களுக்காக, 1968ம் ஆண்டு ஒத்தோபர் முதலாந் தேதியில் அல்லது அதன்பின்னர் தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டு எதற்குத் தொடர்பாகவும், ''தொழில்'' என்பது ஏதேனும் வியாபாரத்தை, தான்புரி தொழிலை அல்லது வாழ்க்கைத் தொழிலை அல்லது சார்பற்ற ஒப்பந்தக்காரரின் தொழிலை அல்லது ஏதேனும் கொடுக்கல் வாங்கல்கள் அல்லது செய்யப்பட்ட சேவைகள் தொடர்பாக தரகு அல்லது கட்டணம் எடுக்கும் யாரேனும் ஆளின் தொழிலை உள்ளடக்கும் ; ஆனால், பின்வருவனவற்றை உள்ளடக்காது :—

(1) உற்பத்திசெய்யப்படாத அல்லது பதனிடப்படாத கமத்தொழில் அல்லது விலங்கு உற்பத்திப்பொருளை உற்பத்தியாக்கும் ஏதேனும் முயற்சி ;

(2) கால்நடை வளர்ப்பு அல்லது கோழிவளர்ப்பு நோக்கத்திற்கான ஏதேனும் முயற்சி ;

(3) (இலங்கையில் நுகர்வதற்கெனத் தேயிலைக்கலவை முயற்சியொன்று தவிர்ந்த) கொப்பரு, உலர் தேங்காய், தென்னந்தும்பு, கிரேப் இறப்பர் அல்லது பரவு இறப்பர், அல்லது தேயிலை முதலியவற்றின் உற்பத்திக்கான ஏதேனும் முயற்சி ;

(4) உற்பத்திசெய்யப்பட்ட அல்லது பதனிடப்பட்ட ஏதேனும் பொருளை ஏற்றுமதி செய்தற்கான ஏதேனும் முயற்சி;

(5) வங்கியாளர், நிதியாளர், பணங்கொடுப்பவர், அல்லது அடைவுபிடிப்பவர் ஒருவரின் தொழில் ;

(6) ஏதேனும் காப்புறுதித் தொழில் ;

(7) ஒரு கல்வி நிறுவனமொன்றைக் கொண்டுநடாத்தும் தொழில் ;

(8) கசெற்றில் வெளியிடப்பட்டதும், அமைச்சரினல் ஆக்கப் பட்டுப் பிரதிநிதிகள்சபையினல் அங்கீகரிக்கப்பட்டது மான கட்டளைமூலம் தொழில் மொத்த விற்பனைவரி யிலிருந்து விலக்களிக்கப்படக்கூடியதான மொத்த விற் பனையுடைய வேறு ஏதேனும் தொழில். ''

4. முதன்மைச் சட்டத்தின் 122ம் பிரிவு, அப்பிரிவின் இறுதியில் பின்வரும் உட்பிரிவினைச் சேர்ப்பதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :—

'' (4) 138ம் பிரிவின்கீழான மேன்முறையீடொன்றின் இறுதித் தீர்மானத்தின்பேரில், ஏதேனும் வரியின் தவறுகைக்காக (3)ம் உட் பிரிவின்கீழ் சேர்க்கப்பட்டவாறன ஏதேனும் தொகை அல்லது தொகைககள் குறைக்கப்பட்டவிடத்து, அப்போது, அத்தகைய தொகை அல்லது தொகைகள் அவ்வாறு குறைக்கப்பட்ட வரியின் கணக்கிடப்படுதல் வேண்டும். ''.

5. முதன்மைச் சட்டத்தின் 123ம் பிரிவை நேர் உடனடுத்துப் பின்னர் பின்வரும் பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது. இது அச்சட்டத்தின் 123அ என்னும் பிரிவாகப் பயனுடையதாதல் வேண்டும் :—

123அ. இச்சட்டத்தின் ஏதேனும் அல்லது எல்லா நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படவேண்டிய வடி வங்களை ஆணையாளர் காலத்திற்குக்காலம் விதிக்கலாம் ; அவ்வாறு விதிக்கப்பட்ட படிவம் எதுவும் காலத்திற்குக் காலம் ஆணையாளரினற்றிருத்தப்படலாம் அல்லது மாற் றப்படலாம் அல்லது அவ்வாறு விதிக்கப்பட்ட ஏதேனும் படிவத்திற்காக வேறு படிவம் ஆணையாளரினற் பதிலீடு செய்யப்படலாம். ''.

6. முதன்மைச் சட்டத்தின் 125ம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப் படுகின்றது :—

(அ) அப்பிரிவினை 125ம் பிரிவின் முதலாம் உட்பிரிவென மீளவிலக்க மிடுதன்மூலமும் ;

(ஆ) மீளவிலக்களிக்கப்பட்ட முதலாமுட்பிரிவினை நேர் உடனடுத்துப் பின்னர், பின்வரும் உட்பிரிவினைச் சேர்த்ததன்மூலமும் :—

''(2) ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் ஏதேனும் காலாண் டுக்கு யாரேனுமாள் தொடர்பாக முதலாமுட்பிரிவின்கீழ் மேல திக மதிப்பீடொன்று செய்யப்பட்ட தொகை, அக்காலாண்டுக் காலத்திற்கான தவறுகையான தொழில் மொத்த விற்பனை வரியாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதோடு, அதற்கமைய, அத்தகைய ஆள் 122(2) என்னும் பிரிவின்கீழ் அக்காலாண் டுக்கு வரி கொடுக்கவேண்டியதான அத்தேதியிலிருந்து அத் தகைய தொகை தொடர்பாக 122(3) என்னும் பிரிவின்கீழ் தண்டத்திற்காளாதலும் வேண்டும். ''.

7. முதன்மைச் சட்டத்தின் 128ம் பிரிவு, அப்பிரிவின் (இ) என்னும் பந்தியில், ''பெறப்பட்ட பணம்'' என்னுஞ் சொற்களுக்குப் பதிலாகப் ''பெறப்பட்ட அல்லது பெறப்படவேண்டிய பணம்'' என்னுஞ் சொற்களை இடுதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

8. முதன்மைச் சட்டத்தின் 138ம் பிரிவு அப்பிரிவின் முதலாமுட்பிரிவில் பின்வருமாறு இத்தாற்றிருத்தப்படுகின்றது :—

(1) '' அத்தகைய மதிப்பீடு அல்லது மேலதிக மதிப்பீட்டினுல் '' என்னுஞ் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருஞ் சொற்களை இடுதன்மூலமும் :—

'' இச்சட்டத்தின் இப்பாகத்தினுல் அவருக்கு விதிக்கப்படும் ஏதேனும் தெண்டத்தோடு அத்தகைய மதிப்பீடு அல்லது மேலதிக மதிப்பீட்டினுல்...........

எனினும், மேன்முறையீட்டாளர் சுகயீனம் அல்லது வேறு நம்பத்தகுந்த காரணம் காரணமாக அத்தகைய காலத்துள் மேன்முறையீடு செய்வதிலிருந்து தடுக்கப்பட்டாரென ஆணையாளர் திருத்தப்பட்டதன்மேல், அவர் மேன்முறையீடு செய்வதற்கான கால நீடிப்பொன்றை வழங்கலாம்.'' அத்துடன்;

(2) முதலாமுட்பிரிவை நேர் உடனடுத்துப் பின்னர் பின்வரும் உட்பிரிவுகளைச் சேர்த்தல்மூலமும் :—

'' (1அ) எந்த மதிப்பீட்டுக்கெதிராக மேன்முறையீடு செய்யப்பட்டதோ அந்த மதிப்பீடானது திரட்டொன்றில்லாமற் செய்யப்பட்ட விடத்து, மேன்முறையீட்டு மனுவானது முறையாகச் செய்யப்பட்ட திரட்டொன்ருேடு அனுப்பப்படுதல் வேண்டும்.

(1ஆ) மேன்முறையீட்டு மனுவொன்று —

(1) முதலாமுட்பிரிவின்கீழ் மேன்முறையீடொன்று செய்வதற்கு விடப்பட்ட காலம் முடிவடைந்த பின்னர் அது செய்யப்பட்டதாயின், அல்லது

(2) (1அ) என்னும் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்கியொழுக மேன்முறையீட்டாளர் தவறினுராயின்,

ஆணையாளரினுல் மறுக்கப்படுதல்வேண்டும்.''

9. முதன்மைச் சட்டத்தின் 138ம் பிரிவை உடனடுத்துப் பின்னர் பின்வரும் பிரிவு இதனுற் சேர்க்கப்படுகிறது ; அது முதன்மைச் சட்டத்தின் 138அ என்னும் பிரிவாகப் பயனுடையதாதல் வேண்டும் :—

138அ. (1) சபையின் தீர்மானம் முடிவானதாயிருத்தல் வேண்டும்:

எனினும், ஒன்றில் மேன்முறையீட்டாளர் அல்லது ஆணையாளர், சட்டப் பிரச்சினையொன்றில் உயர்நீதிமன்றத்தின் கருத்தைப் பெறுவதற்கு வழக்கொன்றைக் கூறுமாறு சபையினைவேண்டும் விண்ணப்பமொன்றைச் செய்யலாம். அத்தகைய விண்ணப்பம், எழுத்திற் செய்யப்பட்டுச் சபையின் தீர்மானத் தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் ஐம்பது ரூபா கட்டுப்பணத்தோடு சபையின் எழுத்தருக்குக் கொடுக்கப்பட்டாலொழிய ஏற்றுக்கொள்ளப்படுதலாகாது ; சபையின் தீர்

மானம் ஆணையாளருக்கு அல்லது மேன்முறையீட்டாளருக்கு எழுத்தில் அறிவிக்கப்படுமாயின், யாரேனும் அத்தகையவாட்கள் வழக்கொன்றைக் கூறுவதற்கு வேண்டக்கூடிய காலத்தைத் துணியும் நோக்கங்களுக்காக, அத்தகைய தீர்மானம் அறிவித்தல்மூலம் அவருக்கு அறிவிக்கப்பட்ட தேதியாக இருத்தல் வேண்டும்.

(2) கூறப்படும் வழக்கானது நிகழ்வுகளையும், சபையின் தீர்மானத்தையும், ஐயாயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட தொகையாகவிருக்குமிடத்துப் பிணக்கிலுள்ள தொழில் மொத்த விற்பனவு வரித்தொகையையும், கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன், அதனைத் தேவைப்படுத்தும் திறத்தவர் கூறப்பட்டு ஒப்படைக்கப்பட்டபின்னர் அதனைப் பெற்றபின்னர் 14 நாட்களுக்குள் உயர்நீதிமன்றத்திற்கு மாற்றுதல் வேண்டும்.

(3) முத்திரைக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளை ஏற்புடைத்தாக்கும் நோக்கத்திற்காக—

(அ) இப்பிரிவின்கீழ் கூறப்பட்ட ஏதேனும் வழக்கின் உயர் நீதிமன்றம் முன்னரான நடவடிக்கைகள் யாவும் அல்லது ஏதேனும் அத்தகைய வழக்கின் தீர்வு, துன்பு அல்லது விசாரணை தொடர்பில் இடைநேர்வினையிலான நடவடிக்கைகள் யாவும், ஐயாயிரம் ரூபாப் பெறுமதியான அல்லது (2)ம் உட்பிரிவின்கீழ் சபையினால் பிரச்சினைக்குட்பட்ட தொழில் மொத்த விற்பனவுவரியின் தொகையாக விதிக்கப்படக்கூடிய அத்தகைய கூடிய தொகைப் பெறுமதியான உயர்நீதிமன்றத்தின் முன்னரான குடியியல் வழக்கு நடவடிக்கைகளாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(ஆ) கூறப்பட்ட அத்தகைய வழக்கு ஒவ்வொன்றும் சபையினால் இணைக்கப்பட்ட எல்லாப் புத்தகங்கள், ஆவணங்கள், பத்திரங்கள் என்பவற்றோடு, உயர்நீதிமன்றத்தின் முன்னரான குடியியல் நடவடிக்கைகளில் தணித்த காட்சிப்பொருளொன்றாகக் கருதப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(இ) அலுவலக முறையிலான வழக்கொன்றில், ஆணையாளர் மேன்முறையீட்டாளராகவிருப்பின், அரசாங்க அலுவலர் வழக்குத்தொடருபவராகவும் அல்லது அவர் மேன்முறையீடொன்றுக்கு எதிர்வாதியாகவிருந்தால், அரசாங்க அலுவலர் வழக்குத் தொடரப்பட்டவராகவும் கருதப்படுதல் வேண்டும்.

(4) கூறப்பட்ட வழக்கை உயர்நீதிமன்றத்திற்கு அனுப்பும் நேரத்தில் அல்லது அனுப்புவதற்குமுன் அதனைத் தேவைப்படுத்தும் திறத்தவர் அடுத்த திறத்தவருக்கு, தமது விண்ணப்பத்தின் பேரில் வழக்குக் கூறப்பட்டது என்ற நிகழ்வினை எழுத்திலான அறிவித்தல்மூலம் அனுப்புதலோடு கூறப்பட்ட வழக்கின் பிரதியொன்றை அவருக்கு வழங்குதலும் வேண்டும்.

(5) யாரேனும் இரு அல்லது அதற்குமேற்பட்ட உயர்நீதிமன்ற நீதிபதிகள் கூறப்பட்ட வழக்கொன்றைத் திருத்துதற்காகத் திருப்பி அனுப்பச் செய்யலாம் ; அதன் மேல் வழக்கு அதற்கமையத் திருத்தப்படுதல் வேண்டும்.

(6) யாரேனும் இரு அல்லது அதற்குமேற்பட்ட உயர்நீதிமன்ற நீதிபதிகள் கூறப்பட்ட வழக்கில் எழும் சட்டப் பிரச்சினை எதனையும் விசாரித்துத் தீர்மானித்தல் வேண்டும் ; அத்துடன் அத்தகைய பிரச்சினையில் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கமைய சபையினுல் தீர்மானிக்கப்பட்ட மதிப்பீட்டை அவர்கள் உறுதிப்படுத்தலாம், குறைக்கலாம், கூட்டலாம் அல்லது நீக்கலாம் ; அல்லது அவ்வழக்கை நீதிமன்றத்தின் அபிப்பிராயத்தோடு சபைக்கு அனுப்பலாம். நீதிமன்றத்தினுல் வழக்கொன்று அவ்வாறு அனுப்பப்பட்டவிடத்து, நீதிமன்றத்தின் கருத்து தேவைப்படுத்தக்கூடியவாறு மதிப்பீட்டைச் சபையானது மீட்டல் வேண்டும்.

(7) இப்பிரிவின்கீழ் உயர்நீதிமன்றத்தின் முன்னரான ஏதேனும் நடவடிக்கைகளில், நீதிமன்றத்திற்குச் சரியானதெனத் தோற்றும்வகையில் உயர்நீதிமன்றத்தில் செலவுப்பணம் தொடர்பாகவும் முதலாமுட்பிரிவின்கீழ் கொடுக்கப்பட்ட தொகை தொடர்பாகவும் நீதிமன்றம் அத்தகைய கட்டளையை ஆக்கலாம்.

(8) ஆனுல் உட்பிரிவின்கீழ் உயர்நீதிமன்றத்தின் ஏதேனும் கட்டளைக்கெதிராக மாட்சிமைதங்கிய மகாராணியாரின் சபைக்கு மேன்முறையீடு செய்வதற்கு ஆணையாளருக்கு அல்லது வேறு எவரேனும் திறத்தவருக்கு இயலச் செய்யும் நோக்கத்திற்காகவும் மேன்முறையீடுகள் (கோமறைச் சபை) கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளை ஏற்புடையவாகச் செய்யும் நோக்கத்திற்காகவும் —

(அ) ஆறும் உட்பிரிவின்கீழ் உயர்நீதிமன்றத்தினுல் ஆக்கப்பட்ட கட்டளையானது (7)ம் உட்பிரிவின்கீழ் அந்நீதிமன்றத்தின் ஏதேனும் கட்டளையோடு, ஆணையாளருக்கும் அத்தகைய வேறு திறத்தினருக்குமிடையே உயர்நீதிமன்றத்தின் குடியியல் வழக்கில் இறுதித் தீர்ப்பொன்ருகக் கருதப்படுதல் வேண்டும் ;

(ஆ) அத்தகைய குடியியல் வழக்கில் பிணக்கிலுள்ள விடத்தின் பெறுமதி ஐயாயிரம் ரூபாவாகக் கருதப்படுதல் வேண்டும்:

எனினும், (2)ம் உட்பிரிவின்கீழ் சபையானது பிணக்கிலுள்ள வரியின் தொகை ஐயாயிரம் ரூபாவிலும்பார்க்கக் கூடுதலான தொகையென எடுத்துச் சொல்லிய விடத்து, அத்தகைய குடியியல் வழக்கில் பிணக்குக்குரிய பொருளின் பெறுமதி சபையினுல் அவ்வாறு எடுத்துச் சொல்லப்பட்ட கூடுதலான தொகையாக இருத்தல் வேண்டும் ; அத்துடன்

(இ) மாட்சிமைதங்கிய மகாராணியாரின் அவைக்கு ஏதேனும் மேன்முறையீடு செய்யப்படுவதன்மேல், ஆணையாளர் மேன் முறையீடுகள் (கோமறைச் சபை) கட்டளைச்சட்டத்தின்கீழ் அல்லது அச்சட்டத்தினுல் விதிக்கப்பட்ட ஏதேனும் பிணையைக் கொடுக்க அல்லது ஏதேனும் கட்டணத்தைச் செலுத்த அல்லது ஏதேனும் கட்டுப்பணத்தை வைக்கத் தேவைப்படுத்தப்படவாகாது.

10. முதன்மைச் சட்டத்தின் 151ம் பிரிவு, அப்பிரிவின் (5)ம் உட்பிரிவில் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்னர் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன்மூலமும் :—

'' (அஅ) ஏதேனும் கணக்குப்புத்தகம், பதிவு, பதிவேடு அல்லது வேறு ஆவணம் காணப்படக்கூடிய ஏதேனும் கொள்கலத்தைத் திறந்து பரிசோதிக்கலாம் ; அத்துடன் அதன்கண் காணப்படும் ஏதேனும் பொருட்களின் பதிவொன்றை ஆக்கலாம் ;'' ;

(2) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், ''படிகள் எடுக்கலாம்'' என்னும் சொற்களுக்குப் பதிலாகப் ''பரிசோதிப்பதுடன் படிகளும் எடுக்கலாம்'' என்னுஞ் சொற்களையிடுவதன்மூலமும் ; அத்துடன்

(3) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்னர் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன்மூலமும் :—

'' (ஆஆ) ''அத்தகைய இடத்தில் அல்லது கட்டடத்திற் காணப்படும் காசை எண்ணிப் பதிவொன்றை உடனடியாக ஆக்கலாம் ; '' ;

11. முதன்மைச் சட்டத்தின் 152ம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவை, அப்பிரிவின் முதலாமுட்பிரிவாக மீள இலக்கமிடுதல் மூலமும் ;

(2) அவ்வாறு மீளவிலக்கமிடப்பட்ட முதலாமுட்பிரிவினை உடனடுத்துப் பின்னர் பின்வரும் உட்பிரிவினைச் சேர்த்தன்மூலமும் :-

'' (2) எழுத்திற் செய்யப்பட்ட கோரிக்கை மூலம் யாரேனும் ஆள் 122ம் பிரிவின் (4)ம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய அத்தகைய தொகைகள் கணக்கிடப்பட்டிருக்குமாயின் அவர் செலுத்தியிருக்கவேண்டிய தொகையிலும் கூடுதலாகவுள்ளதும் 122ம் பிரிவின் (3)ம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டதுமான தொகை எதனையும் செலுத்தினர் என ஆணையாளர் திருப்திப்படுமளவிற்கு எண்பிக்கப்பட்டவிடத்து, அத்தகைய ஆள், முன் சொல்லப்பட்ட (3)ம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட தொகை எந்த மதிப்பீட்டாண்டிற் கொடுக்கப்பட்டதோ அந்த ஆண்டிலிருந்து மூன்றாண்டுகளுக்குள் அத்தகைய கோரிக்கை செய்யப்படுமாயின், அவ்வாறு மேலதிகமாகக் கொடுக்கப்பட்ட தொகையை மீளப்பெற உரித்துடையராதல் வேண்டும். ''.

12. முதன்மைச் சட்டத்தின் 154ம் பிரிவு அப்பிரிவின் (4)ம் உட்பிரிவில், ''இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் ஏதேனும் கடமையின் புரிகைக்குத் தேவையான செய்தியை ஆணையாளர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''இச்சட்டத்தின் இப்பாகத்தில் அல்லது ஏதேனும் அத்தகைய எழுத்திலான சட்டத்தின்கீழ் ஏதேனும் கடமையின் புரிகைக்குத் தேவையான செய்தியை ஆணையாளர்'' என்னுஞ் சொற்களையிடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

13. (1) முதன்மைச் சட்டத்தின் 159ம் பிரிவு, அப்பிரிவின் முதலாமுட்பிரிவின் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) ''அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி'' என்பதன் வரைவிலக்கணத்திற்குப் பதிலாகப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை இடுதன்மூலமும் :—

''அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி '' என்பது,—

(1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அவரது சார்பில் செயற்படுதற்கு ஆள் ஒருவரால் எழுத்தின்மூலம் அதிகார மளிக்கப்பட்டவரும், —

(அ) எச்சந்தர்ப்பத்திலேனும் —

(1) இலங்கையின் வரவுபெற்ற கணக்காளர் நிறு வனத்தின் உறுப்பினரொருவராக,

(2) ஆணையாளரினல் அங்கீகரிக்கப்பட்ட ஒரு கணக் காளரொருவராக,

(3) வழக்குரைஞரொருவராக அல்லது வழக்கறிஞ ரொருவராக, அல்லது

(4) சம்பந்தப்பட்ட ஆளினல் ஒழுங்காக வேலைக் கமர்த்தப்பட்ட ஊழியரொருவராக,

இருப்பவராகவும் ;

(ஆ) தனியாளொருவரைப் பொறுத்தவரை உறவின ரொருவராக ;

(இ) கம்பனியொன்றைப் பொறுத்தவரை அதன் பணி யாளரொருவராக அல்லது செயலாளராக ;

(ஈ) பங்குடைமையைப் பொறுத்தவரை பங்குதாரராக;

(உ) ஆட்குறைப்பைப் பொறுத்தவரை அத்தகைய குழு வின் உறுப்பினரொருவராக ;

இருப்பவராயும் ; அல்லது

(2) அதிகாரமளித்தலில் குறிப்பிடப்படப்பட்ட அத்தகைய மதிப்பீட்டாண்டு தொடர்பான விடயங்கள் தொடர்பில் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அவரின் சார்பாகச் செயற்படுதற்கு ஆள் ஒருவரினல் காலத்திற்குக்காலம் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்டவராகவும், கம்பனிகள் (கணக்காய்வாளர்கள்) ஒழுங்குவிதிகளின்கீழ் கணக்காய் வாளராகப் பதியப்பட்டவராகவும், ஆணையாளரினல் அங் கீகரிக்கப்பட்டவராயும் ;

உள்ள தனியார் என்று பொருளாகும்.

(ஆ) ''ஆட்குழு'' என்பதன் வரைவிலக்கணத்தில், ''ஏதேனும் பாகப்பிரிவினை செய்யாக இந்துக் குடும்பம், ஆனல், கம் பன் அல்லது பங்குடைமையொன்றை உள்ளடக்காது ;'' என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, ''ஏதேனும் பங்கு டைமை, ஏதேனும் பாகப்பிரிவினை செய்யாத இந்துக் குடும்பம்'' என்னுஞ் சொற்களையிடுவதன்மூலமும் ; அத் துடன்

(இ) ''மொத்த |விற்பனவு'' என்பதன் வரைவிலக்கணத்தில் ''அத்தொழில் தொடர்பாக'' என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, ''அத்தொழில் தொடர்பாக அல்லது அத்தொழி லைக் கொண்டு நடாத்துகையில் புரியப்பட்ட சேவைகளி லிருந்து '' என்னுஞ் சொற்களையிடுவதன்மூலமும்.

(2) இப்பிரிவின் முதலாமுட்பிரிவின் (3) என்னும் பந்தியினல் முதன் மைச் சட்டத்தில் ஆக்கப்பட்ட திருத்தமானது, 1964ம் ஆண்டு சனவரி முதலாந் தேதியன்று நடைமுறைக்கு வந்ததாகக் கருதப்படுதல் வேண்டும்,

## பகுதி (ஆ)

சுற்றறிக்கை இல. 26

இலங்கை மத்திய வங்கி,
அ. பெ. 590,
கொழும்பு,
1968, மே 5.

### முற்பணங்களின்மீதான மத்திய வங்கி வட்டி வீதங்கள்

(தொடர்பு : நாணயவிதிச் சட்டத்தின் 83ஆம், 87ஆம் பிரிவுகள்)

1. 1968, மே 6ஆந் தேதி தொட்டு, அரசாங்க, அரசாங்க உத்தரவாதப் பிணைகளை அடைமானப் பிணையாகக் கொண்டு மத்திய வங்கியினால் வர்த்தக வங்கிகளுக்கு அளிக்கப்படும் முற்பணங்களின்மீதான வட்டி வீதம் ஆண்டொன்றுக்கு 5½ சதவீதமாகும்.

2. 1968, மே 6ஆந் தேதி தொட்டு, வர்த்தக, உற்பத்திக் கடன்களுக்குத் தொடர்பான சலுகை விடுப்புக்கால உறுதிமொழிக் கடன் பத்திரங்களை அடைமானப் பிணையாகக் கொண்டு மத்திய வங்கியினால் வர்த்தக வங்கிகளுக்கு அளிக்கப்படும் முற்பணங்களின்மீதான வட்டி வீதம், ஆண்டொன்றுக்கு 5½ சதவீதமாகும்.

3. 1965, மே 27ஆந் தேதிய சுற்றறிக்கை எண் 20 இத்தால் விலக்கப்பட்டிருக்கின்றது.

க. குணரத்தினம்,
பதில் முதன்மைக் கணக்காளர்,
இலங்கை மத்திய வங்கி,

டபிள்யூ. தென்னக்கோன்,
ஆளுநர்,
இலங்கை மத்திய வங்கி,

சுற்றறிக்கை இல. 27

இலங்கை மத்திய வங்கி,
அ. பெ. 590,
கொழும்பு 1,
1968, மே 30.

## வர்த்தக வங்கிக் கொடுகடன்

1962, திசெம்பர் 28ஆந் தேதிய சுற்றறிக்கை எண் 17, அதிலுள்ள முதலாம் பந்தியின் இறுதியிலிருந்து பின்வரும் வசனத்தைச் சேர்த்துக் கொள்வதன் மூலமாக, இத்தால் திருத்தியமைக்கப்பட்டுள்ளது:

> '' எனினும் வாடிக்கைக்காரரின் சார்பில் ஒரு வர்த்தக வங்கி வேண்டுகோள் செய்தவிடத்து, மத்திய வங்கியானது, அசைவற்ற சொத்தின் (பெருந் தோட்டங்களைத் தவிர்த்து) கொள்வனவு சம்பந்தமாக, வங்கி முற்பணக் கட்டுப்பாட்டினைத் தளர்த்துவதற்கான ஒரு விடயம் இருப்பதாக திருப்தியடைந்தால், அத்தகைய தளர்த்துதலை வழங்குவதற்காக அவற்றைப் பரிசீலனை செய்ய '' விருப்பந் தெரிவித்துள்ளது.

க. குணரத்தினம்,
பதில் முதன்மைக் கணக்காளர்,
இலங்கை மத்திய வங்கி.

டபிள்யூ. தென்னக்கோன்,
ஆளுநர்,
இலங்கை மத்திய வங்கி.

சுற்றறிக்கை இல. 28

இலங்கை மத்திய வங்கி,
அ. பெ. 590,
கொழும்பு 1,
1968, ஓகத்து 14.

## அந்நிய நாணயத் தாள்களைக் கொள்வனவிற்காய மாற்றுவீதங்கள்

1. இலங்கையிலுள்ள வர்த்தக வங்கிகளிடமிருந்து அந்நிய நாணயத் தாள்களின் கொள்வனவிற்காய மத்திய வங்கியின் வீதங்கள் பின்வருமாறு :—

| நாணயம் | | | மத்திய வங்கியின் வாங்கும் வீதம் ரூ. ச. |
|---|---|---|---|
| அவுஸ்திரேலிய டொலர்கள் | ($ 1/-குற்) | .. | 6.55 |
| ஒஸ்றிய சிலிங்ஸ் | (சிலிங் 100/-ற்கு) | .. | 22.40 |
| கனேடிய டொலர்கள் | ($ 1/-ற்கு) | .. | 5.40 |
| ஹொங்கொங் டொலர்கள் | ($ 10/-ற்கு) | .. | 9.60 |
| இத்தாலிய லிரு | (லிரு 1000-/ற்கு) | .. | 9.30 |
| மலேசியன் டொலர்கள் | ($10/-ற்கு) | .. | 19.05 |
| நெதர்லன்ட்ஸ் புளோறின்சுகள் | (புளோ 10/-ற்கு) | .. | 16.10 |
| சிங்கப்பூர் டொலர்கள் | ($ 10/-ற்கு) | .. | 19.05 |
| சுவிஸ் பிறுங்ஸுகள் | (பிரங்ஸ் 10-/ற்கு) | .. | 13.35 |
| ஐ. இ. பவுண்ஸுகள் | (£ 1/-ற்கு) | .. | 14.05 |
| ஐ. அ. டொலர்கள் | ($ 1/-ற்கு) | .. | 5.85 |

2. மேலுள்ள 1ஆம் பந்தியில் கூறப்பட்டுள்ள அந்நிய நாணயத் தாள்களை வர்த்தக வங்கிகள் கொள்வனவு செய்வதற்குப் பின்வரும் விகிதங்கள் ஏற்புடைத்தனவாகும்.

| நாணயம் | | | வர்த்தக வங்கிகளின் ஆகக் குறைந்த வாங்கும் வீதம் ரூ. ச. |
|---|---|---|---|
| அவுஸ்திரேலிய டொலர்கள் | ($ 1/-ற்கு) | .. | 6.50 |
| ஒஸ்றிய சிலிங்ஸ் | (சிலிங் 100/-ற்கு) | .. | 22.35 |
| கனேடிய டொலர்கள் | ($ 1/-ற்கு) | .. | 5.35 |
| ஹொங்கொங் டொலர்கள் | ($ 100/-ற்கு) | .. | 9.55 |
| இத்தாலிய லிரு | (லிரு 1000/-ற்கு) | .. | 9.25 |
| மலேசியன் டொலர்கள் | ($10/-ற்கு) | .. | 19.00 |
| நெதர்லன்ட்ஸ் புளோறின்சுகள் | (புளோ 10/-ற்கு) | .. | 16.05 |
| சிங்கப்பூர் டொலர்கள் | ($ 10/-ற்கு) | .. | 19.00 |
| சுவிஸ் பிறுங்ஸுகள் | (பிறுங்ஸ் 10/-ற்கு) | .. | 13.30 |
| ஐ. இ. பவுண்ஸுகள் | (£ 1/-ற்கு) | .. | 14.00 |
| ஐ. அ. டொலர்கள் | ($ 1/-ற்கு) | .. | 5.80 |

க. குணரத்தினம்,
முதன்மைக் கணக்காளர்.

டபிள்யூ. தென்னக்கோன்,
ஆளுநர்.

சுற்றறிக்கை இல. 28
(திருத்தப்பட்டது—28.8.68)

இலங்கை மத்திய வங்கி,
அ.பெ. 590,
கொழும்பு 1.
1968, ஓகத்து 28.

## அந்நிய நாணயத் தாள்களைக் கொள்வனவிற்கான மாற்றுவீதங்கள்

1. இலங்கையிலுள்ள வர்த்தக வங்கிகளிடமிருந்து அந்நிய நாணயத் தாள்களின் கொள்வனவிற்கான மத்திய வங்கியின் வீதங்கள் பின்வருமாறு:—

| நாயணம் | மத்திய வங்கியின் வாங்கும் | வீதம் ரூ. ச. |
|---|---|---|
| அவுஸ்திரேலிய டொலர்கள் | ($ 1/-ற்கு) | 6.55 |
| ஒஸ்றிய சிலிங்ஸ் | (சிலிங் 100/-ற்கு) | 22.40 |
| கனேடிய டொலர்கள் | ($ 1/-ற்கு) | 5.40 |
| டியூசி மார்க்ஸ் (மேற்கு சேர்மனி) | (டூமா 10/-ற்கு) | 14.55 |
| ஹொங்கொங் டொலர்கள் | ($ 10/-ற்கு) | 9.60 |
| இத்தாலிய லிரு | (லிரு 1000/-ற்கு) | 9.30 |
| மலேசியன் டொலர்கள் | ($ 10/-ற்கு) | 19.05 |
| நெதர்லன்ட்ஸ் புளோறின்சுகள் | (புளோ 10/-ற்கு) | 16.10 |
| சிங்கப்பூர் டொலர்கள் | ($ 10/-ற்கு) | 19.05 |
| சுவிஸ் பிறுங்சுகள் | (பிராங்ஸ் 10/-ற்கு) | 13.35 |
| ஐ.இ. பவுண்ஸ்ரகள் | (£ 1/-ற்கு) | 14.05 |
| ஐ.அ. டொலர்கள் | ($ 1/-ற்கு) | 5.85 |

2. மேலுள்ள 1ம் பந்தியில் கூறப்பட்டுள்ள அந்நிய நாணயத் தாள்களை வர்த்தக வங்கிகள் கொள்வனவு செய்வதற்குப் பின்வரும் விகிதங்கள் ஏற்புடைத்தனவாகும்.

| நாணயம் | வர்த்தக வங்கிகளின் ஆகக் குறைந்த வாங்கும் வீதம் | ரூ. ச. |
|---|---|---|
| அவுஸ்திரேலிய டொலர்கள் | ($ 1/-ற்கு) | 6.50 |
| ஒஸ்றிய சிலிங்ஸ் | (சிலிங் 100/-ற்கு) | 22.35 |
| கனேடிய டொலர்கள் | ($ 1/-ற்கு) | 5.35 |
| டியூசி மார்க்கஸ் (மேற்கு சேர்மனி) | (டூமா 10/-ற்கு) | 14.50 |
| ஹொங்கொங் டொலர்கள் | ($ 10/-ற்கு) | 9.55 |
| இத்தாலிய லிரு | (லிரு 1000/-ற்கு) | 9.25 |
| மலேசியன் டொலர்கள் | ($ 10/-ற்கு) | 19.00 |
| நெதர்லன்ட்ஸ் புளோறின்சுகள் | (புளோ 10/-ற்கு) | 16.05 |
| சிங்கப்பூர் டொலர்கள் | ($ 10/-ற்கு) | 19.00 |
| சுவிஸ் பிறுங்ஸ்ரகள் | (பிறுங்சுகள் 10/-ற்கு) | 13.30 |
| ஐ.இ. பவுண்ஸ்ரகள் | (£ 1/-ற்கு) | 14.00 |
| ஐ.அ. டொலர்கள் | ($ 1/-ற்கு) | 5.80 |

க. குணரத்தினம்,
முதன்மைக் கணக்காளர்.

டபிள்யூ. தென்னக்கோன்,
ஆளுநர்.

சுற்றறிக்கை இல. 28
(திருத்தப்பட்டது—18.9.68)

இலங்கை மத்திய வங்கி,
அ. பெ. 590,
கொழும்பு 1,
1968, செத்தெம்பர் 18.

அந்நிய நாணயத் தாள்களைக் கொள்வனவிற்காய மாற்றுவீதங்கள்

1. இலங்கையிலுள்ள வர்த்தக வங்கிகளிடமிருந்து அந்நிய நாணயத் தாள்களின் கொள்வனவிற்காய மத்திய வங்கியின் வீதங்கள் பின்வருமாறு:—

| நாணயம் | | மத்திய வங்கியின் வாங்கும் வீதம் |
|---|---|---|
| | | ரூ. ச. |
| அவுஸ்திரேலிய டொலர்கள் | ($ 1/-ற்கு) | 6.55 |
| ஒஸ்றிய சிலிங்ஸ் | (சிலிங் 100/-ற்கு) | 22.40 |
| கனேடிய டொலர்கள் | ($ 1/-ற்கு) | 5.40 |
| டியூசி மார்க்ஸ் (மேற்கு சேர்மனி) | (டூமா 10/-ற்கு) | 14.55 |
| பிரான்சிய பிராங்சுகள் | (பிபி 10/-ற்கு) | 11.80 |
| ஹொங்கொங் டொலர்கள் | ($ 10/-ற்கு) | 9.60 |
| இத்தாலிய லிரு | (லிரு 1000/-ற்கு) | 9.30 |
| மலேசியன் டொலர்கள் | ($ 10/-ற்கு) | 19.05 |
| நெதர்லன்ட்ஸ் புளோறின்சுகள் | (புளோ 10/-ற்கு) | 16.10 |
| சிங்கப்பூர் டொலர்கள் | ($ 10/-ற்கு) | 19.05 |
| சுவிஸ் பிறுங்சுகள் | (பிராங்ஸ் 10/-ற்கு) | 13.35 |
| ஐ.இ. பவுண்ஸுகள் | (£ 1/-ற்கு) | 14.05 |
| ஐ.அ. டொலர்கள் | ($ 1/-ற்கு) | 5.85 |

2. மேலுள்ள 1ம் பந்தியில் கூறப்பட்டுள்ள அந்நிய நாணயத் தாள்களை வர்த்தக வங்கிகள் கொள்வனவு செய்வதற்குப் பின்வரும் விகிதங்கள் ஏற்புடைத்தவையாகும்.

| நாணயம் | | வர்த்தக வங்கிகளின் ஆகக் குறைந்த வாங்கும் வீதம் |
|---|---|---|
| | | ரூ. ச. |
| அவுஸ்திரேலிய டொலர்கள் | ($ 1/-ற்கு) | 6.50 |
| ஒஸ்றிய சிலிங்ஸ் | (சிலிங் 100/-ற்கு) | 22.35 |
| கனேடிய டொலர்கள் | ($ 1/-ற்கு) | 5.35 |
| டியூசி மார்க்ஸ் (மேற்கு சேர்மனி) | (டூமா 10/-ற்கு) | 14.50 |
| பிரான்சிய பிராங்சுகள் | (பி பி 10/-ற்கு) | 11.75 |
| ஹொங்கொங் டொலர்கள் | ($ 10/-ற்கு) | 9.55 |
| இத்தாலிய லிரு | (லிரு 1000/-ற்கு) | 9.25 |
| மலேசியன் டொலர்கள் | ($ 10/-ற்கு) | 19.00 |
| நெதர்லன்ட்ஸ் புளோறின்சுகள் | (புளோ 10/-ற்கு) | 16.05 |
| சிங்கப்பூர் டொலர்கள் | ($ 10/-ற்கு) | 19.00 |
| சுவிஸ் பிறுங்ஸுகள் | (பிறுங்ஸ் 10/-ற்கு) | 13.30 |
| ஐ.இ. பவுண்ஸுகள் | (£ 1/-ற்கு) | 14.00 |
| ஐ.அ. டொலர்கள் | ($ 1/-ற்கு) | 5.80 |

க. குணரத்தினம்,
முதன்மைக் கணக்காளர்.

டபிள்யூ தென்னக்கோன்,
ஆளுநர்.

சுற்றறிக்கை இல. 29

இலங்கை மத்திய வங்கி,
அ.பெ. 590,
கொழும்பு,
1968, நவெம்பர் 1.

**மீளநிதியிட்டல்—நடுத்தவணை, நீண்ட தவணைக் கொடுகடன் மீதான வட்டி வீதங்கள்**

தொடர்பு:—நாணயவிதி அதிகாரச் சட்டத்தின் பிரிவு 88அ (1) (இ) (1963ஆம் ஆண்டின் 11ஆம் இல. நிதிச் சட்டத்தின் 67ஆம் பிரிவினுல் ஏற் படுத்தப்பட்டபடி).

கொடுகடன் நிலையங்களுக்கு மத்திய வங்கியால் வழங்கப்படும் மீளநிதி யீட்டக் கடன்களின்மீதான வட்டி வீதம்.

(அ) விவசாயத்தின் அல்லது கைத்தொழிலின் உயர்ச்சிக்கு அல்லது அபி விருத்திக்கு ஆண்டொன்றுக்கு 4% ஆகும். ஆயின் இது, இவ் வசதி களைப் பயன்படுத்தும் கொடுகடன் நிலையங்கள், தமது வாடிக் கைக்காரர்களுக்குத் தம்மால் வழங்கப்பட்டதும், அதன் நிமித்தம் மத்திய வங்கியிடமிருந்து மீளநிதியீட்டல் கோரப்படுவதுமான கடன்களின்மேல் ஆண்டொன்றுக்கு 7%ற்கு மேல் அறவிடா திருத்தல் வேண்டும்.

(ஆ) தேயிலை ஆலைகளின் புதிய முறையாக்கலுக்கு அத்துடன்/அல்லது புதிய தேயிலை ஆலைகள் நிறுவுவதற்கு உரிய கடன்களின் வட்டியில் ஒரு பகுதியைத் தேயிலைக் கட்டுப்பாட்டாளர் பொறுக்குமிடத்து வட்டிவீதம்:—

(i) அத்தகைய தேயிலை ஆலையின் புதியமுறையாக்கலுக்கு அத் துடன்/அல்லது புதிய தேயிலை ஆலைகள் நிறுவுவதற்குள்ள உள்ளூர்ச் செலவுகளை ஈடுசெய்வதற்குரிய மீளநிதியீட்டற் கடன்களிற்கு ஆண்டொன்றுக்கு 5% ஆகும். ஆயின் இது, இவ்வசதிகளைப் பயன்படுத்தும் கொடுகடன் நிலையங்கள், தமது வாடிக்கைக்காரர்களுக்குத் தம்மால் வழங்கப் பட்டதும், இதன் நிமித்தம் மத்திய வங்கியிடமிருந்து மீள நிதியீட்டல் கோரப்படுவதுமான கடன்களின்பேரில் ஆண் டொன்றுக்கு 8½%ற்குமேல் அறவிடாதிருத்தல் வேண்டும்.

(ii) அத்தகைய தேயிலை ஆலையின் புதியமுறையாக்கலுக்கு அத்துடன்/அல்லது புதிய தேயிலை ஆலைகள் நிறுவுவதற்குள்ள அந்நிய செலாவணிச் செலவுகளை ஈடு செய்வதற்குரிய மீளநிதியீட்டற் கடன்களிற்கு ஆண்டொன்றுக்கு 7% ஆகும். ஆயின் இது, இவ்வசதிகளைப் பயன்படுத்தும் கொடு கடன் நிலையங்கள் தமது வாடிக்கைக்காரர்களுக்குத் தம்மால் வழங்கப்பட்டதும், இதன் நிமித்தம் மத்திய வங்கியிட மிருந்து மீளநிதியீட்டலைக் கோரப்படுவதுமான கடன்களின் பேரில் ஆண்டொன்றிற்கு 8½%ற்குமேல் அறவிடாதிருத்தல் வேண்டும்.

(இ) வாணிபம், வர்த்தகம் அல்லது வியாபாரத்தின் உயர்ச்சிக்கு அல்லது அபிவிருத்திக்கு ஆண்டொன்றிற்கு 5½% ஆகும்.

1966 ஏப்பிறல் 6ஆந் தேதிய 23ஆம் இலக்கச் சுற்றறிக்கை இத்தால் இல்லாதாக்கப்படுகிறது.

க. குணரத்தினம்,
முதன்மைக் கணக்காளர்.

டபிள்யூ. தென்னக்கோன்,
ஆளுநர்.